கோகுலம்

GOKULAM

ஜனவரி '90 விலை ரூ. 3/-





கோகுலம்

1990 ஜனவரி மாத இதழ்
மலர் 7 * இதழ் 12



அன்புத் தம்பி, தங்கைகளே!

புத்தாண்டுப் பொங்கல் வாழ்த்துக்கள்.

ஆண்டு முழுதும் வரும் அத்தனை திருவிழாக்களிலும் எடுப்பிலே வருவது மட்டுமல்ல; ஈடுஇணையற்றதும் இந்தப் பொங்கல் திருவிழா தான். ஏன்?

வாழ்க்கை நெறிமுறையை வகுத்துக் கூறும் விழா இது. எப்படி?

இது அறுவடைத் திருநாள். ஆண்டு முழுக்கப் பாடுபட்டவன் பெற்ற உழைப்பின் வெகுமதியைப் பெரும் பொங்கலிடுகிறோம். அதனைக் கண்கண்ட தெய்வமாம் கதிரவனுக்கு, கழனி வளம் காட்டும் கரும்பும், மஞ்சளும் உடன் வைத்துப் படையலிட்டு நன்றி செலுத்துகிறோம். படிப்பினை: உங்களுக்கு வெற்றி தந்த இறைவனை முன்னிறுத்தி எந்த நல்ல வினையையும் துவங்குங்கள்.

உழவிலே மனிதனுக்கு ஒத்துழைத்த மாடுகளுக்கு நன்றிக் கடன் செலுத்திக் கொண்டாட்டத்தில் கூட்டுச் சேர்த்துக் கொள்கிறோம். படிப்பினை: உங்கள் உழைப்புக்கு நிச்சயம் வெற்றி உண்டு. ஆனால் அந்த வெற்றிக்கு உதவியவர்களுக்கு நன்றி செலுத்த மறவாதீர்கள்.

மூத்தோரை மதித்து அவரது முழு ஆசி பெறவே ஒரு நாள் ஒதுக்கிக் காணும் பொங்கலாக்கிக் கனி காண்கிறோம். படிப்பினை: உங்களை உருவாக்கிய மாதா, பிதா, குரு ஆகியோர் என்றென்றும் மதிக்கப்பட வேண்டியவர்கள். எந்தவொரு நற்காரியத்தையும் அந்தப் பெரியோரின் நல்லாசி பெற்றுத் துவங்குங்கள். வாழ்வில் வெற்றி பெறுவீர்கள்.

தை பிறக்குமுன்னரே வழி பிறந்து விட்டாற் போன்ற அறிகுறிகள் நாட்டு நடப்பில் தென்படுவதாய் நல்லறிஞர்கள் கருதுகிறார்கள்.

உழைப்பின் வெற்றிக்கு விழா எடுக்கும் இந்த உன்னத நாள் உங்களை உழைப்பின் சிகரத்துக்கு உயர்த்தட்டும்!

நாளை நாட்டை ஆள வேண்டிய நீங்கள் இன்று ஏட்டை ஆள வேண்டும். அதில் உங்கள் நாட்டம் முனைப்புடன் திரும்ப இந்த நல்ல புத்தாண்டு வழிவகுக்கட்டும்!

அழுக்கு நீங்கிய அறிவு, அழுக்காறு நீங்கிய எண்ணம், அடுத்தவர் நலம்கோரும் செயல்பாடு உங்களை ஆக்கிரமித்து, உங்களை இந்த நாட்டின் சொத்தாக ஆக்கட்டும்!

வளர்க நலம், வாழ்க பல்லாண்டு.

அன்பு அண்ணன்,

(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் — பாரதியார்.

உங்கள் புத்தாண்டுத்

* ஜி. சுஜாதா



ஜி. சுஜாதா: என் பெற்றோர், நான் என் தம்பியுடன் அடிக்கடி சண்டை போடுவதாக என்னைக் கடிந்து கொள்வார்கள். நான் சும்மா இருந்தாலும் அவன் தான் வம்புக்கு இழுக்கிறான் என்பது அவர்களுக்கும் தெரியும். இந்த வருடத்திலிருந்து தம்பி அவனாக வம்புக்கு வந்தாலும் நான் சண்டையே போடப் போவதில்லை. அந்த நேரத்தை வேறு உபயோகமான விஷயங்களுக்குச் செலவிடலாம் என்று தீர்மானித்திருக்கிறேன்.

வி. பாலாஜி: வீட்டில் பெரியவர்களுக்கும், மற்றவர்களுக்கும் உதவியாக இருப்பது எனக்கு எப்போதுமே பிடிக்கும். பிறருக்கு உதவி செய்வதில், அதனால் அவர்கள் அடையும் சந்தோஷத்தில் எனக்கு மனசு நிறைந்து போகும். வரப் போகும் புத்தாண்டில், என்னுடைய இந்த மனோநிலை கொஞ்சமும் மாறாமல் இருக்கப் பயிற்சி மேற்கொள்ளப் போகிறேன். உதவும் நோக்கம் மேலும் எனக்குள் வலுவடைய இந்த வருடத்தில் தீர்மானம் எடுத்துக் கொள்கிறேன்.



* வி. பாலாஜி

* ஷாயிஸ்தா ஷப்னம்.



ஷாயிஸ்தா ஷப்னம்: 1990 ஆம் வருட தீர்மானம் இது. பள்ளிப் படிப்பு தவிர, விளையாட்டுக்களில் தீவிர கவனம் செலுத்தி சிறந்த விளையாட்டு வீராங்கனையாக வேண்டும். இந்தியாவிற்கு ஒரு பி. டி. உஷா, வலசம்மா போன்றவர்கள் மட்டும் போதுமா? இசை, நடனம் இரண்டும் கற்றுத் தேர்ச்சி பெற வேண்டும் என்பதும் புத்தாண்டு தீர்மானமே. அதற்கான பயிற்சி வகுப்புகள் பற்றி நன்கு விசாரித்து விட்டு, பெற்றோர் ஆசியுடன் சேரப் போகிறேன்.

தீர்மானம் என்ன?

எஸ். பி. பாலாஜி: நான் வாலிபால் ப்ளேயர். சமீபத்தில் சற்றே கவனக் குறைவாக ஆடியதால் கீழே விழ நேர்ந்து வலது கையில் சுளுக்கு மாதிரி ஏற்பட்டு, கட்டும் போட்டுக் கொள்ள வேண்டியதாயிற்று. அதனால் பரீட்சை கூட ஒழுங்காக எழுத முடியாமல் போய் விட்டது. விளையாடும் போது மிகவும் எச்சரிக்கையுடன் சமயோசிதத்துடன் விளையாட வேண்டும் என்று புது வருடத்தில் தீர்மானம் எடுத்துக் கொள்ளப் போகிறேன். இதற்காகக் கடுமையான பயிற்சியையும் மேற்கொள்ளப் போகிறேன்.



எஸ். பி. பாலாஜி:



எஸ். ஷோபா

எஸ். ஷோபா: ஓவியம் வரைவதில் எனக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. அதோடு எல்லாப் பாடங்களிலும் 450 மார்க்குக்குக் குறையாமல் வாங்க வேண்டும் என்ற ஆவலும் உண்டு. இந்த வருடத்திலிருந்து காலைப் பொழுதைப் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ளப் போகிறேன். மழையானாலும், பனியானாலும், சோம்பல் படாமல் காலை ஐந்து மணிக்குத் தினமும் தூங்கி எழப் போகிறேன். காலையில் கிடைக்கும் நேரத்தால் பாடங்களை முடித்து விட்டு, இடையில் கிடைக்கும் நேரத்தில் ஓவியப் பயிற்சி பெறலாம் என்று தீர்மானித்திருக்கிறேன்.

எஸ். இஜாஸ் ஹுசேன்: இந்த வருடம் (1990) முதல், என் வேலைகளை நானே செய்து கொள்ளப் போகிறேன். என் தேவைகளை நானே பூர்த்தி செய்து கொள்வேன். எனக்கு 'ஷூட்டிங்' கற்றுக் கொள்ளவும், ரைஃபிள் கிளப்பில் மெம்பர் ஆகவும் கொள்ளை ஆசை. அதற்கான முயற்சியில் இறங்கி வெற்றி பெறுவேன். வாழ்க்கையிலே ராணுவத்தில் லெஃப்டினண்ட்டாக வருவது என் லட்சியம். அதற்காக இப்போதே ஆவன செய்யப் போகிறேன்.



எஸ். இஜாஸ் ஹுசேன்

* டி. ஏ. கான்ரேட்



டி. ஏ. கான்ரேட்: பிராணி வளர்ப்பு எனக்கு மிகவும் பிடித்த ஒன்று. ஆசையாக நான் ஒரு முயல் வளர்த்து வந்தேன். அது என்னுடன் விளையாடும்; அன்புடன் பழகும். என்னுடன் பேசவில்லையே தவிர, மற்றபடி உற்ற தோழனாகவே அது என்னுடன் பழகி வந்தது. திடீரென்று ஒருநாள் அது இறந்து விடவே, எனக்கு மிகவும் வேதனையாகப் போய் விட்டது. பல நாட்கள் சோகமாகவே இருந்தேன். அப்போதே தீர்மானித்தேன். செல்லப் பிராணிகள் — வளர்ப்புப் பிராணிகளுக்கு எந்தத் தீங்கும் நேராமல் பார்த்துக் கொள்வது என்று. என் புத்தாண்டுத் தீர்மானமாக அதைத் தொடர்ந்து கடைபிடிக்கப் போகிறேன்.

சுந்தர்சிங்: என் தாத்தாவைப் போல நானும் ஜவுளி வியாபாரத்தைச் செய்ய விரும்புகிறேன். பொதுவாகவே வியாபாரம் செய்வது நம்முடைய சொந்தக் கால்களில் நாம் நிற்க முடியும் என்ற நம்பிக்கையில்தான். எனக்கும் யாரையும் சார்ந்து வாழாமல் தனி மனிதனாக உறுதியாக நிற்க வேண்டும் என்பதில் ஆர்வம் உண்டு. அதோடு இவ்வாறு வியாபாரம் செய்வதால் எத்தனையோ பேருக்கு நாம் வேலை வாய்ப்பும் தர முடிகிறது! ஏற்கெனவே என் மனசில் ஊறியிருக்கும் இந்த எண்ணத்தை, இப் புத்தாண்டிலிருந்து மேலும் வலுப்படுத்திக் கொள்வேன்.



* சுந்தர்சிங் குர்ப்ரீத்கவுர்



குர்ப்ரீத்கவுர்: பாடச் சுமை வருடா வருடம் அதிகரித்துக் கொண்டே போகிறது. ஆனாலும் படிப்பில் மேலும் மேலும் நிறையத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற என் ஆர்வமும் அதிகரிக்கிறது. புது வருடத்தில் இந்த ஆர்வம் குறையாத படி பார்த்துக் கொள்ளப் போகிறேன். படிப்பது என்பது அறிவை வளர்த்துக் கொள்ளத்தானே தவிர, வெறுமே பரீட்சையில் பாஸ் பண்ணுவதற்காக அல்ல. ஆகவே மேலும் மேலும் அறிவை வளர்த்துக் கொள்ளும் வகையில் ஊக்கமாகப் படிக்க விரும்புகிறேன்.

பேட்டி: **சங்கர், கோபி**

படங்கள்: **பிரபுசங்கர்**

பொங்கல் பொங்கி வாழ்க

பொங்கலின் சிறப்பு

கவிஞர் தமிழ்மொழி

உலக மெல்லாம் உண்டு வாழ
உழவு தந்த பொங்கல் — அதை
ஒலகம் போற்றி வாழ்த்தும் நாளே
தையெனும் ஓர் திங்கள்

புத்தம் புதிய பானை தன்னில்
புதிய அரிசி இட்டு — தம்
சித்த மகிழ்ந்து பொங்கலிட்டுப்
பாடுவார் நல் மெட்டு!

உழவர் சிறப்பு


உடலைக் காக்கும் உசிரைப் போல
உசிரைக் காக்கும் உணவு! — அதைப்
படைச்சுத் தரும் உழவர் பெருமை
போற்றும் பொங்கல் நெனவு!

நெலத்த உழுது பயிரை வெளச்சு
உணவு கொடுக்கும் உழவன்! — இந்த
ஒலகம் காக்கும் தலைவரிலே
அவனே என்றும் முதல்வன்!

இரவு பகலா கண்ண விழிச்சு
வீட்டை மறந்தே காட்டில் — அவன்
இருந்து பயிரைக் காப்ப தால்தான்
எவர்க்கும் உணவு வீட்டில்

முதல் வானவியல் அறிஞன்

விண்ணும் மண்ணும் நல்லா ஆய்ந்தே
வெளைவைச் செஞ்ச உழவன்! — அவன்
மண்ணும் விண்ணும் முதலில் ஆய்ந்த
அறிவியல் நூல் புலவன்!



தாயான உழவன்

சின்னக் கொழந்த பசியைத் தெரிஞ்சே
உணவைக் கொடுக்கும் தாய்போல் — மண்
தன்னில் நட்ட பயிர்க்கு நீரைத்
தருவான் உழவன் செய்போல்

மருத்துவ உழவன்

கொழந்த நோயை அறிஞ்சு தாயும்
மருந்து தருதல் போல — உழவன்
வெளஞ்ச பயிரின் நோய்க்கு மருந்து
தந்து காப்பான் வாழ!

உழவன் வீடே சரணாலயம்

ஆடு, மாடு, கோழி, நாய்கள்
யாவும் காப்பான் நாளும்! — அவன்
வீடே 'சரண ஆலயமாய்'
விலங்கு கூட வாழும்!

சங்கராந்திப் பொங்கல்

கடலின் நீரை ஆவி, மேகம்
ஆக்கி மழையைப் பெய்ய — செயும்
கடரோன் தனக்கு வைக்கும் பொங்கல்
'சங்க ராந்தி' ஜய!

மாட்டுப் பொங்கல்

உழுது வெளைக்கும் உழவி னுக்கே
உற்ற தோழன் மாடு! — அதன்
உழைப்பைப் போற்ற வைப்பார் 'மாட்டுப்
பொங்கல்' நன்றி யோடு!

காணும் பொங்கல்

காணி வெளச்சோர் பரிசை வேண்டிக்
கலைஞர் வந்தால் தங்கள் — முகம்
கோணா தளிக்கும் கொடையைப்
போற்றும்
குறிப்பே 'காணும் பொங்கல்'

ஜல்லிக் கட்டு விழா

சமமாய்க் கூடி மாடு, மனுசன்
உழைக்க வந்த போதும் — பலம்
சமமா என்றே அறியும் போட்டி
ஜல்லிக் கட்டென் றோதும்!

மஞ்சி விரட்டு விழா

மொரட்டுக் காளை தன்னை அடக்கிப்
புடித்தல் மஞ்சி விரட்டு! — அது
ரொம்பப் பரிசும் புகழும் கொடுக்கும்!
விரும்பும் மணமும் நடக்கும்!

பொங்கலின் சொத்து

கரும்பு, வெல்லம், இஞ்சி, அரிசி
வாழை மஞ்சள் கொத்து — இவை
விரும்பித் தரும் உழவர்களே
பொங்க லுக்கே சொத்து!

வள்ளுவர் போற்றும் உழவர்

பொங்கல் தரும் உழவர் களை
வள்ளுவர் போல் போற்றி — உயர்
'பொங்கல் பொங்க' என்று ரைப்போம்
இனிய பறை சாற்றி


பரீட்சை உழவன்

'பரீட்சை' எழுதித் தேறிப் புட்டா
மாண வர்க்கோ மகிழ்ச்சி! — உழும்
தரை முழுகும் வெளைஞ் சிட்டாலே
உழவ னுக்கோ உயர்ச்சி!

இனிய பொங்கல் வாழ்த்து!

'பொங்கல் பொங்கி வாழ்க' வென்றே
போற்று வோமே வாழ்த்தி — பொங்கல்
எங்கும் வெச்சே பூசை செய்க
இனிய தீபம் ஏத்தி!





GL/13C/203 TAM



உங்கள் நம்பகமான ஃபாரெக்ஸ்
இப்போது, சுவையிலே சிகரம்!
உங்கள் குழந்தைக்கு நான்கு மாதம் ஆகும்போது அவனுக்கு புதிய சுவைமிக்க ஃபாரெக்ஸ் துவக்குங்கள். 3 முதல் 4 தேக்கரண்டி வெது வெதுப்பான நீரில் ஒரு தேக்கரண்டி ஃபாரெக்ஸ் கலந்து கொடுங்கள். ஃபாரெக்ஸ் சுவை மிக்கது. முன்னைவிட அதிக ஊட்டச்சத்து மிக்கது.
Delicious
Farex
CEREAL WITH MILK
• சுவை மிக்கது
• ஊட்டச்சத்து மிக்கது
ஃபாரெக்ஸ்®-
சுவையுடன் வளரும் வழி.
GX/66/2I3 TML

கம்ப்யூட்டர் கதை



சென்னைத் துறைமுகம் கம்ப்யூட்டர் பிரிவில் துணை இயக்குனராக (பள்ளிகளில் கம்ப்யூட்டர் அட்வைஸர் கூட) உள்ள திரு. சி. ராம் மோகன்தாஸ் சொன்ன கதை:

ஓர் இளைஞன் வேலையில்லாத பட்டதாரி. எவ்வளவோ இடங்களில் போய்ப் பார்த்துவிட்டு, ஏமாற்றத்துடன் நடந்து கொண்டிருந்தான். ஊர் எல்லையில், பொட்டல்வெளியின் நடுவே ஒரு பங்களா தென்பட்டது. அங்கு போய் வேலை கேட்கலாம் என்று அந்தப் பங்களாவை நெருங்கி, வாசல் கதவைத் தட்டினான்.

அத்துவானப் பிரதேசத்தில் இந்தப் பங்களாவில் யார் இருப்பார்கள் என்று இவன் யோசிக்கும் போதே, கதவு திறக்கப்பட்டது. ஒரு முதியவர், 'யாரப்பா, என்ன வேணும்?' என்று விசாரித்தார்.

''எனக்கு வேலை வேணும்,'' என்றான் இளைஞன், பட்டென்று.

''ம்... இப்படித் திடீரென்று கேட்டால் எப்படி? சரி, நான் சொல்ற வேலையைச் செய்கிறாயா?''

இளைஞன் தலையாட்டினான்.

''இந்தப் பங்களாவிலே சில கதவுகள் சரியாக இல்லை. ரிப்பேர் செய்கிறாயா?''

''எனக்குத் தச்சு வேலை தெரியாதே?''

''சரி. கிணற்றுத் தண்ணீரை டாங்க்லே ஏற்றும் பைப்புகளில் (குழாய்கள்) ஏதோ அடைப்பு. அதை ரிப்பேர் செய்யேன்.''

''எனக்கு ப்ளம்பர் வேலை தெரியாதே.''

''போகட்டும், வீட்டைச் சுற்றியுள்ள தோட்டப் பகுதி காடாக இருக்கு. சீர் செய்து கொடு.''

''எனக்குத் தோட்ட வேலை தெரியாதே.''

முதியவர் பொறுமை இழந்ததில் வியப்பில்லை. ''உனக்கு என்னதான் தெரியும்? அதற்கு ஏற்ற மாதிரி வேலை தர முடியுமா என்று பார்க்கிறேன்,'' என்றார் கடைசியாக.

''சார், நான் ஜர்னலிஸம் படித்திருக்கிறேன். விளம்பர வாசகங்கள் நல்லா எழுதுவேன். மனத்தில் பதிகிற மாதிரி,'' என்றான் இளைஞன்.

முதியவர், ''சரி... நான் இந்தப் பங்களாவை விற்கப் போகிறேன். சரியான விலை வரவில்லை. இந்தப் பங்களாவைப் பற்றி விவரமாகச் சொல்லி, விளம்பர வாசகம் தயார் செய்,'' என்றார்.

இளைஞன் உற்சாகத்துடன், வீட்டைச் சுற்றிப் பார்த்தான். அவரிடம்

சில விவர்ங்களைக் கேட்டுக் கொண்டான். விளம்பர வாசகங்களை எழுதிக் கொடுத்தான் பெரியவரிடம்.

அவர் அதை வாங்கிப் படித்தார். அவனை ஒரு தீர்க்கப் பார்வை பார்த்தார். இளைஞனுக்குத் திகில்.


இளைஞன் எதிர்பாராத ஒரு காரியத்தை அப்பெரியவர் செய்தார். அந்த விளம்பர வாசகம் அடங்கிய பேப்பரைக் கிழித்துப் போட்டு விட்டார்!

இளைஞனுக்கு அதிர்ச்சி. ''சார், வேண்டுமானால், இன்னொரு முறை வேறு விதமாக எழுதித் தருகிறேன்,'' என்று கெஞ்சினான்.

பெரியவர் நிதானமாகச் சொன்னார். ''போதும் தம்பி. என் பங்களாவைப் பற்றி, இவ்வளவு நல்ல விஷயங்களை நீ அற்புதமாக எழுதிய பிறகுதான் எனக்கே இதன் பெருமை புரியுது. நான் பங்களாவை விற்கப் போவதில்லை! உன்னை வேலைக்கு வைத்துக் கொள்கிறேன்.''

இக்கதையைச் சொல்லிவிட்டு, ''இதே மாதிரிதான் நமது நாட்டுத் தொழில் நுட்பமும், அறிவும் வெளி நாட்டினர் எடுத்துச் செல்லும் போது தான் நமக்கே தெரிகிறது. வெளிநாடுகளில் நான் பல பள்ளிகளில் சுற்றிப் பார்த்த போது, நம் நாட்டு மாணவ, மாணவியரின் திறமையும், சொல்லித் தரும் ஆசிரியர்களின் திறமையும் வெளிநாட்டவரின் திறமைக்கும் மேலாகத்தான் இருக்கிறதே தவிர, நிச்சயம் குறைவாக இல்லை.

எனவே, மேல் நாட்டினரைக் கம்ப்யூட்டர் படிப்பில் நம் மாணவர்கள் அசத்திவிட முடியும். வெளிநாட்டினர்தான் உசத்தி, நாம் மட்டம் என்ற எண்ணமே வேண்டாம். உங்களுக்கு இந்தக் கம்ப்யூட்டர் துறையில் உற்சாகமும், ஊக்கமும் தருவதற்காகத்தான், சென்னை வேப்பேரியில் உள்ள புனித பால் **(St. Paul's)** மேல்நிலைப் பள்ளியின் ஓர் அங்கமான கம்ப்யூட்டர் சென்டர் க்விஸ் போட்டி ஒன்று ஏற்பாடு செய்தது. அதில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு இப்போது பரிசு வழங்கப்படுகிறது,'' என்று முடித்தார் திரு. சி. ராம்மோகன்தாஸ்.



* எஸ். சிவகுமார் — வி. மோகன்.

*அ*து என்ன கம்ப்யூட்டர் க்விஸ் போட்டி? அதுபற்றி அப்பள்ளியின் முதல்வரான திரு. ஜெயராஜ் சொன்னார்:

''சென்னையிலே முதன் முறையாக இப்படி ஒரு போட்டி நடத்த நாங்கள் முடிவு செய்தோம். அரசு பள்ளிகள், அரசு உதவி பெற்று நடத்தப்படும் பள்ளிகள், இவற்றில் கம்ப்யூட்டர் சயன்ஸ் படிக்கும் +1, +2 மாணவ, மாணவிகளுக்கு மட்டும் இந்த க்விஸ் போட்டி வைத்தோம். க்விஸ் மாஸ்டர்ஸ் வெவ்வேறு இடங்களிலிருந்து வந்தனர். 21 பள்ளிகளிலிருந்து, 72 மாணவ, மாணவியர் பங்கு கொண்டனர். க்விஸ் போட்டியில் எழுத்து மூலமும், கம்ப்யூட்டர் மூலமும், பேச்சு மூலமும் கேள்விகள் கேட்கப்பட்டன. மாணவ, மாணவியரும் கம்ப்யூட்டரிலேயே பதில் சொல்லும்படி இருந்தது.

போட்டி எப்படி நடந்தது?

வழக்கம் போல் இரு மாணவர்,

இரு மாணவியர் என்றபடி டீம் டீமாய்ச் சந்தித்து நடந்தது. மதிப் பெண்களை எழுத, கம்ப்யூட்ட ரையே பயன்படுத்தினர். அன்றைய நிகழ்ச்சி முடிவில் கம்ப்யூட்டரே தேசிய கீதம் பாடிற்று!

சரி, பரிசு யாருக்குப் போயிற்று?

புரசைவாக்கம் எம். சி. டி. மேல் நிலைப்பள்ளி மாணவர்கள் எஸ். சிவ குமார், வி. மோகன் முதல் பரிசு பெற்றனர்.

இரண்டாவது பரிசு என்று வரும் போது சிக்கல்.

சாந்தோம் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள், எஸ். வெங்கடநாரா யணன், கே. முரளிதரன் டீமுக்கும், சிந்தாதிரிப்பேட்டை கல்யாணம் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாண விகள் அமிருதவல்லி, ஃப்ரீஸா பாத் திமா டீமுக்கும் ஒரே மதிப்பெண்கள் வந்துவிட்டன!

என்ன செய்வது?

க்விஸ் மாஸ்டர் மீண்டும் ஒரு புதுக் கேள்வி கேட்டு, எந்த டீம் சொல் கிறதோ, அந்த டீமுக்கு இரண்டாவது பரிசு என்று அறிவிக்க, பரபரப்பு.

கேள்வி கேட்கப்பட்டது.

இந்தக்கேள்விக்குச்சரியான விடை யைச் சாந்தோம் பள்ளி மாணவர் கள் ஒரு வினாடி முன்பாகவே சொல்லி, இரண்டாம் பரிசு பெற் றனர். ஆனாலும், வெற்றி முகம் காட்டிய அம்ருதவல்லி, ஃப்ரீஸா பாத்திமா — ஜோடிக்கும் பரிசு தந் தனர்.

பரிசு பெற்ற சிவகுமார் — மோகன் ஜோடியைச் சந்தித்த போது —

''க்விஸ் போட்டிகளை டீ. வி. யிலும் சரி, பள்ளியிலும் சரி, ஆர்வத் துடன் கவனித்து, பங்கு பெற்றுப் பரிசு பெறுவோம். பாடப் புத்த கங்கள் தவிர, லைப்ரரி-யிலிருந்து கம்ப்யூட்டர் சம்பந்தப்பட்ட புத்த கங்கள், ஜெனரல் நாலெட்ஜ் பற்றிய பத்திரிகையும் மிகவும் பயன் தந்தன. நிச்சயம் நாங்கள் பரிசு பெறுவோம் என்ற நம்பிக்கையிருந்தது. பெற்று விட்டோம்.''.

''சாந்தோம் பள்ளி மாணவர்கள், பரிசு விழாவிற்கு வரவில்லை. மிட



* அமிருதவல்லி — ஃப்ரீஸா பாத்திமா.

டர்ம் பரீட்சையாம். மாறுதலுக்காக, கிட்டத்தட்ட இரண்டாம் பரிசுக்கு மோதிய அமிருதவல்லி, ஃப்ரீஸா பாத்திமா மாணவிகளைப் பேட்டி கண்டபோது —

''எங்களுக்கு இதுதான் முதல் அனு பவமே! எங்க மிஸ் தந்த தைரியமும், கோச்சிங்கும்தான் அஸ்திவாரமே! நிறையப் புத்தகங்களைப் படித்து வைத்திருந்தோம். சட்சட்டென்று விடைகளைச் சொல்வதில்தான் வெற்றி அடங்கியுள்ளது. நம்மாலும் முடியும் என்கிற தன்னம்பிக்கைதான் வேண்டும். டீ. வி. யாலே ஒரு பெரிய நன்மை. இந்த க்விஸ் நிகழ்ச்சிகள் ரொம்ப ஆவலோட பார்ப்போம்.''

இந்த க்விஸ் போட்டியில் எத்த னையோ வகையான கேள்விகள் கேட்கப்பட்டன. அதெல்லாம் எல் லோருக்கும் புரியாது. எல்லாருக்கும் புரியக் கூடிய ஒரு கேள்வி.

தமிழில் கம்ப்யூட்டர் கதைகள் எழுதிய கதாசிரியர் யார்?

அமிருதவல்லி சொன்ன பதில்: சுஜாதா.

அதானே? அவர் பெயர் வராமல் க்விஸ் நடத்த முடியுமா?

தொகுப்பு: '**பிரகலாதன்.**'

இப்படி ஒரு புத்தாண்டு



புத்தாண்டு பிறக்கப் போகிற தென்றால்யாருக்குத்தான் சந்தோஷம் இருக்காது? பிறக்கப் போகும் புது வருடத் துவக்கத்தில், இனியாவது நாம் ஒரு நல்லதைச் செய்ய வேண்டும் அல்லது தீயவற்றைச் செய்யா திருத்தல் வேண்டும் என்று ஒரு தீர்மானம் எடுத்துக் கொண்டு அதன் படி ஒழுகுதல் நல்லதல்லவா?

அப்படித்தான் வாழ்கிறார்கள் சிங்கப்பூரில் உள்ள மக்கள். அது மட்டுமல்ல, புத்தாண்டுப் பிறப்பை வெகு கோலாகலமாகக் கொண்டாடவும் செய்கிறார்கள். அப்படி விமரிசையாகக் கொண்டாட ஏதாவது பின்னணி உண்டா? நிச்சயமாக இருக்கத்தான் செய்கிறது. அந்தப் பின்னணியில் ஒரு கதையே இருக்கிறது.

'நியன்' என்று சொல்லப்படும் ஒரு நெருப்பைக் கக்கும் விலங்கு **(dragon)** ஒன்று வெகு காலத்திற்கு முன் இருந்து வந்ததாம். அது ஒவ்வொரு வருடமும், அந்த வருடத்தின் கடைசி நாளன்று இரவு குகையை விட்டு வெளியே வருமாம். அந்த விலங்கைக் கண்டாலே மக்கள் மிகுந்த பீதி கொள்வார்களாம். அது வரும் பொழுது பெரிய சப்தத்துடன் சிங்கம் போல் கர்ஜனை செய்து கொண்டே வருமாம்.

எல்லோரும் அந்தச் சமயத்தில் அவரவர் வீட்டிற்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொள்வார்களாம். அப்படியும் அந்த விலங்கு கதவுகளை உடைத்தும், மக்களை இம்சைப்படுத்தியும் குதியாட்டம் போடுமாம். அந்த விலங்கிற்குச் சிவப்பு நிறம், வெடிச் சப்தம் என்றால் நடுக்கம். நாளடைவில் இதைப் புரிந்து கொண்ட மக்கள், தங்கள் வீடுகளுக்குச் சிவப்பு நிறத்தில் வர்ணம் பூசி, வெடி வெடித்து அதை விரட்டி மகிழ்ந்தார்களாம். அதன் பிறகு அந்த விலங்கு வரவே இல்லையாம்.

அந்த விலங்கின் மறைவைக் கொண்டாடவே, புது வருடத்தைச் சிங்கப்பூர் மக்கள் சிறப்பாக விழா



எடுக்கிறார்கள்.

புது வருட முதல் நாள் அன்றே எல்லோர் வீட்டின் கதவிலும் புதியதாகச் சிவப்பு வர்ணம் அடிப்பார்கள். வண்ண வண்ணக் காகிதங்களால் தோரணங்கள் கட்டி வீடுகளை அலங்கரிப்பார்கள். பல வகைத் தின்பண்டங்கள் செய்து உண்டு மகிழ்வார்கள். எல்லோருக்கும் புத்தாடைகள்தான்! உள்ளூரில் இருக்கும் நண்பர்கள், உறவினர்களுக்கு வாழ்த்துக் கடிதங்கள் என்ன, விருந்துபசாரங்கள் என்ன — அமர்க்களம்தான்!

தந்தையோ, தாயோ வெளியூரில் இருந்தால், புது வருடத்தைக் கொண்டாட, அந் நாளில் நிச்சயம் ஒன்று கூடுவார்கள். முதல் நாள் இரவே வெடிகளும், வாண வேடிக்கைகளும் ஊரில் அமர்க்களப்படும். மறுநாள் காலை உணவின் பொழுது முக்கியமாக கொழுக்கட்டை செய்யத் தவற மாட்டார்கள். அந்தக் கொழுக்கட்டையை அவசியம் எல்லோரும் உண்டு, குடும்பத்தில் சண்டை சச்சரவு இல்லாமல் ஒற்றுமையாக இருப்போம் என்று உறுதி எடுத்துக் கொள்வார்கள்.

சிறுவர்கள் பாடு கொண்டாட்டம் தான். பெரியவர்கள் தங்கள் அன்பை வெளிப்படுத்தச் சிவப்பு நிற உறையிலிட்ட பண முடிப்பைத் தருவார்கள். அதைத் தவிர பரிசுப் பொருட்களும் உண்டு. அன்று மாலை ஊரின் பல்வேறு இடங்களில் நடனங்கள் நடைபெறும். எந்த மாதிரி தெரியுமா? நம் ஊரில் ஆடும் பரதமோ, டிஸ்கோவோ




மாலதி சந்திரசேகரன்

இல்லை. மனிதர்கள், சிங்க உடலமைப்பையும், வேறு கோர உருவமைப்பையும் கொண்ட விலங்கின் முகத்தையும் செயற்கையாக அணிந்து கொண்டு, வாத்தியங்களின் இசைக்கேற்ப விலங்கைப் போல் தாவிக் குதித்து ஆடுவார்கள்.

இந்த உடலமைப்பைக் கொண்டு நடனமாட என்ன காரணம்? டிராகன் **(dragon)** என்ற விலங்கின் உடலும் சிங்கத் தலையும் ஒன்று சேர்ந்தால் நாட்டிற்கு நன்மை ஏற்படும் என்று நம்பி வருகிறார்கள் அம்மக்கள்.

அவர்களின் நம்பிக்கை நல்லபடியாக நிறைவேற நாமும் வாழ்த்தலாமே!



நீண்ட நாளைய கோகுலம் வாசகர்களுக்கு அறிமுகமான ஒரு தம்பியின் பெயர்: புகழொளி.

புதியவர்களுக்காகவும் புகழொளியை இப்போது அறிமுகப்படுத்துகிறேன்.

மயிலாடுதுறையைச் சேர்ந்த நல்லாசிரியர் ஒருவரின் பிள்ளை இந்தப் புகழொளி. சாதுவாய்த் தெரியும் இந்தத் தம்பியின் சாதனைகள் பிரமிப்பூட்டுகின்றன. ஆறு வயதில் பரிசு பெற ஆரம்பித்து, தற்போது பொறியியற் கல்லூரியில் அடியெடுத்து வைத்திருக்கும் இந்த நாள் வரை புகழொளி பெற்றிருக்கும் பரிசுகளின் எண்ணிக்கை: நூற்று அறுபது.

என்னென்ன பரிசுகள், யார் யாரிடம் என்ற பட்டியல் தர ஆரம்பித்தால், கோகுலம் வேறு சங்கதிகளுக்கு இடம் தர இயலாது. என்னென்ன துறைகள் என்று மட்டும் குறிப்பிடலாம்: கட்டுரை, கவிதை, மேடைப் பேச்சு, தனி நடிப்பு, காலட்சேபம் ஆகியவற்றில் மாவட்ட, மாநில, இந்திய அளவில் புகழொளி பெற்ற பரிசுகள்தான் 160. தமிழோடு நிற்பதில்லை; ஆங்கிலமும் அதுபடி.

சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும். அப்படிப் புகழொளியை உருவாக்கியவர் யார்? புகழொளியைப் பெற்றவர்தான்.

நீல், கவனி,

இளைய தலைமுறையின் இலக்கியமே, எழுச்சிமிகு இளந்தளிர்க் கனியே, இடையூறுகளை வீழ்த்துகின்ற புன்னகையே, இந்த உலகின் இணையற்ற செல்வமே, இந்த இனிய மடல் மூலம் உன் இதயத்தைச் சற்றே தொட்டுப் பார்க்கிறேன்!

நாளைய உலகை நடத்திச் செல்ல இருக்கின்ற நட்சத்திரமே, உன்னைக் காண்கையில் நம்பிக்கையின் தேரோட்டம் என் நெஞ்சில் நிகழ்கிறது.

உன்னிடம் எனக்கொரு வருத்தம் உள்ளது. கனவுமயமான பொற்காலம் நோக்கிக் கதிரவனின் கதிர்களில் பயணம் செய்ய வேண்டிய நீ இருட்டு மயமான குருட்டறையிலே காலத்தை வீணாக்கலாமா?

நீ பிறந்த மண்ணில் உனக்காகக் கொட்டிக் குவிக்கப்பட்டுள்ள ஏராளமான செல்வங்களை ஏறெடுத்து என்றேனும் பார்த்திருக்கிறாயா? அப்படிப் பார்த்திருந்தால் அனல் பறக்கும் ஒளிச் சுடராக அல்லவா இன்று நீ ஆகியிருப்பாய்! தொட்ட இடம் எல்லாம் தோல்விதானா என்று துவண்டு விழும் நிலை மாறி உன் கைபட்ட இடம் எல்லாம் வெற்றித் தேவனின் கனிந்த அரவணைப்பு உன்னை மெய்சிலிர்க்க வைத்திருக்குமே!

நீ யார்? உன் பாரம்பரியச் சிறப்பு என்ன? உலகமே வியந்து பாராட்டும் இரு பெரும் இதிகாசங்கள் உன் ஒளி மிக்க உடைமைகள் அல்லவா? நீ பிறந்த மண்ணில் மலர்ந்ததுதானே உயரிய குறளும் உன்னத கீதையும்! வேதங்கள் பிறந்த நாட்டின் வீரமிக்க வித்தல்லவா நீ! காளிதாசனும், கம்பனும் உன் காவிய நாட்டின் கண்மணிகளல்லவா! தாகூரின், பாரதியின் தத்துவார்த்தக் கவிமழையில் தழைத்துச் சிரிக்கின்ற தாமரை நெஞ்சமல்லவா நீ! ஆரியபட்டர், வராகமிகிரர், சர் சி. வி. இராமன், ஜகதீச சந்திர போஸ் போன்ற அறிவியல் வித்தகர்களின் பெருமிதக் கோபுரமல்லவா நீ!

உன்னிடம் என்ன இ ல் லை? உயர்ந்தமாட மாளிகைகளை உன் முன்னோர் உனக்காக உருவாக்கி

அந்த உத்தமத் தந்தையைச் சந்தித்து, நான் ஒன்று கேட்டேன்:
'ஐயா, நீர் பெற்ற மகனை மட்டும் சாதனையாளனாய் உருவாக்கியதோடு நிறைவு கண்டால், நீர் இந்த நாட்டுக்குத் துரோகம் செய்வதாகத்தான் அர்த்தம். இந்த நாட்டுப் பிள்ளைகள் அத்தனை பேரும் சாதனை படைக்க நீங்கள் ஒத்தாசை செய்ய வேண்டும். அறிவுரை சொல்ல வேண்டும். வழிப்படுத்த வேண்டும்.' என்றேன்.

தன் மகனைச் சாதனையாளனாய் உருவாக்கக் கையாண்ட உத்திகளை அவர் சொல்லக் கேட்ட போது, இந்த நாட்டின் எதிர்கால வாரிசுகளான உங்களை நெறிப்படுத்தும் தகுதி அவருக்கு இருப்பதாகக் கருதுகிறேன்.

அவர் சொல்லுவதையெல்லாம் அப்படி அப்படியே ஏற்றுக் கொண்டு, உடனுக்குடனே கடைப்பிடித்தாக வேண்டும் என்று இங்கு யாரும் உங்களைக் கட்டாயப்படுத்தவில்லை. கட்டுப்பாடும் கிடையாது. ரிலாக்ஸ். அமைதியான மனநிலையில் அப்படியே கட்டுரையை மேய்ந்து கொண்டு வாருங்கள். சார்ந்த வரை நிச்சயம் லாபம் உண்டு.

— தேசபந்து.

புறப்படு!

யுள்ளார்கள். அந்த மாளிகையில் வெற்றி உலா வர வேண்டிய நீ முற்றிலும் முக்காடு போட்டு மூலையில் ஒதுங்கிக் கிடப்பதேன்? கதிரவப் பொற்கதிர்களின் பளபளப்பை நதி நீரின் அலைப்பரப்பில் நாள்தோறும் கண்டு மகிழ்ந்து நீராட வேண்டிய நீ, இருட்டுப் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு 'எனக்கு என்றுமே விடிவில்லை' என்ற முகாரி ராகத்தோடு தாழ்வு மனப்பான்மைக்குத் தள்ளப்பட்டிருந்தேன்?

உனக்காக 21 ஆம் நூற்றாண்டு காத்துக் கொண்டிருக்கிறது. அதற்கு என்ன பரிசினை அளிக்கப் போகிறாய்?

எவ்வித வசதிகளுமற்ற என்னால் எழுச்சி மிக்க புதிய சாதனைகளை எப்படிப் பரிசளிக்கமுடியும் என்ற ஏக்கவினாவொன்றை, இளஞ்சிட்டே நீ, எழுப்புவது எனக்குப் புரிகிறது! முடியும் என்பதற்கு நடமாடும் சான்றினை ஏற்படுத்திக் கொடுத்த பின்னர் தான் உன்னை முடிசூட அழைக்கிறேன் நான்!

'ஆயகலை அறுபத்து நான்கு' என்



பேரளம் புகழ்ஜி

பார்கள். ஒவ்வொரு சிறுவனும் சில கலைகளிலாவது தேர்ச்சி பெற வேண்டும் என்பது என் இலட்சியமாகும். அந்த வகையில் என் மகன் புகழொளிக்குப்பேச்சு, சிறந்த பயிற்சி அளித்தேன். அதன் பயனாகமாவட்ட, மாநில, இந்திய அளவில் அவன் பெற்ற பரிசுகள் 160 ஆகும்.

'கலைகளில் கொடி கட்டிப் பறப்பவன் கணிதத்தில், அறிவியலில் பேர் சொல்ல முடியாது' என்ற பழமையான நம்பிக்கையை முறியடித்து, 160 பரிசுகள் பெற்ற புகழொளி பிளஸ் 2 தேர்வில் கணிதம், இயற்பியல், வேதியியலில் 99.2 மதிப்பெண்கள் பெற்றுத் தமிழகப் பொறியியல் கல்லூரிகளிலே முதன்மையாக வந்து இன்று அண்ணா பல்கலைக் கழகத்தில் கம்ப்யூட்டர் பொறியியல் பி.இ வகுப்பில் முதலாண்டு பயில்கிறான். இந்த நடமாடும் உண்மையை இளந்தளிராகிய நீ உன் மனத்திலேயே ஆழமாகப் பதித்துக் கொள்ள வேண்டும். 'நம்மால் முடியும்' என்ற எழுச்சி உன் இதயத்தே ஊற்றெடுத்தால் நாளை நீ ஒரு கலிலியோவாகலாம்; நியூட்டனாகலாம்; இராமனாகலாம்; வள்ளுவராகலாம்; தாகூராகலாம்; ஔவையாராகலாம்; சரோஜினி ஆகலாம்; இராணி லட்சுமிபாய் ஆகலாம்; பிரெஞ்சு வீரமங்கை ஜோன் ஆகலாம்; மேரி க்யூரியாகலாம்; எம்.எஸ். சுப்புலட்சுமியாகலாம்; நைட்டிங்கேல் ஆகலாம்; வாலண்டினா ஆகலாம்!

உன்னால் எதுவும் முடியும். இமயத்தைப் பந்தாட உன்னால் முடியும்; கதிரவனோடு கைகுலுக்க உன்னால் முடியும்!

நான் சொல்வது விளையாட்டுக்கல்ல; நன்கு திட்டமிட்டு, அதன் பின்னரே சொல்கிறேன்.

கதிரவனோடு கைகுலுக்க இதோ, நான் தரும் எட்டுக் கட்டளைகளை உன் இதயத்தே ஏந்திக்கொள்!

1. உலகை மாற்றும் எழுச்சி நீ கொள்!
2. உயரிய கலைகளை ஊன்றி நீ கல்!
3. உயர்வினைத் தடுக்கும் தடைகளை வெல்!
4. உற்ற சோம்பலை உடன் நீ கொல்!
5. உதவாப் பொழுது போக்கை உதறி நீ தள்!



• புகழொளி

6. உணர்ச்சி வேகம் உனை வீழ்த்தும் முன்!
7. உடனுக்குடனே வினை முடித்து நில்!
8. உன்னத அழகுடன் எதனையும் சொல்!

உன் எதிர்கால வாழ்க்கையை எழில் மயமாக்க இந்த எட்டுக் கட்டளைகளை நீ கடைபிடித்தால் இவை எட்டுக் கருவூலங்களாக எண்ணும் பொழுதே பிரமிக்க வைக்கும். எட்டு விலை மதிக்கவொண்ணா எழிற் கருவூலங்களாக. உன் எதிர்காலத்தை வளமையாக்கும்.


நீ ஏற்றம் பெற ஏந்த வேண்டிய எட்டுக் கருவிகளை ஒவ்வொன்றாக எடுத்துப் பழகிப்பார். நீ ஏற வேண்டிய எட்டுப் படிகளை — உனக்கு எட்டாப் படிகளல்ல, எட்டும் படிகளை — நன்கு அறிமுகப் படுத்திக் கொள். கொஞ்சம் கொஞ்சமாக ஒவ்வொரு படியாக மெல்ல மெல்ல ஏறு; உறுதியுடன் ஏறு; அண்ணாந்து நாங்கள் பார்க்கும் அளவுக்கு ஏறு!

இந்த எட்டுக் கட்டளைகளை உனக்கு விரிவாக அடுத்தடுத்த மடல்களில் விளக்குகிறேன். நற்கரும்பு இலக்கியமே, நாளைய உலகின் நட்சத்திரமே.... உன் முன் உள்ள எட்டுக் கட்டளைகளை உன் இதயத்தே தேக்கு; உன் உறுதியிலே தோற்கட்டும் தேக்கு; உலகைப் புதிய முறையில் இனி நீ ஆக்கு!

(தொடரும்)


படத்தைப் பார்த்து....

இங்கேயுள்ள படங்களைப் பார்த்து
கட்டங்களைப் பூர்த்தி செய்யுங்களேன்!





		வி	■		த	
	■	■	■	■	■	■
ங்	■		■			■
	தி		■		■	■
■		■		ன்		■
			ரு	■	■	■
■		■		■	சி	■
■		■		■		■
	ம்		■		ந்	
■	■	ளி	■	■		■



ஆழி

(விடை 22-அம் பக்கம்)

மனத்தில் உறுதி

"வணக்கம் ஐயா," என்றவாறு, மாணவர்கள் உள்ளே நுழைந்தனர்.

"வாருங்கள் மாணவர்களே. உட்காருங்கள்," என்று அனைவரையும் அந்தத் துறவியார் வரவேற்றார்.

மாணவர்கள், அவருக்கு எதிரில் தரையில் சம்மணமிட்டு அமர்ந்தனர்.

"மாணவர்களே! நீங்கள் எல்லாம் என்ன படிக்கிறீர்கள்?" என்று வினவினார் துறவி.

மாணவர்கள் தாம் படிக்கும் வகுப்பைச் சொன்னார்கள்.

"அப்படியா...? மிக்க மகிழ்ச்சி," என்ற துறவியார், பல்வேறு விஷயங்கள் பற்றி, அவர்களுடன் உரையாடினார்.

அது ஒரு விசாலமான அறை. அங்கு பல படங்கள் சுவரில் மாட்டப்பட்டிருந்தன. துறவியார் அவற்றை நிமிர்ந்து பார்த்தார். உடனே அவர் மனத்தில் ஏதோ ஓர் உணர்வு பளிச்சிட்டது. டக்கென்று ஒரு படத்தைச் சுட்டிக் காட்டி மாணவர்களிடம் கேட்டார்!

"மாணவர்களே! அதோ படத்தில், இருப்பவர் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?" என்றார்.

உடனே எல்லா மாணவர்களும், "ஓ, தெரியுமே!" என்றனர் ஏககாலத்தில்.

அதற்குள் ஒருவன், "அது பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடைய படம், ஐயா..." என்றான்.

"சரி, பகவான் கிருஷ்ணன் எந்த நிறம் உடையவர்? சொல்லுங்கள் பார்க்கலாம்."

"நீலநிறம் ஐயா," என்றனர் அனைவரும்.

பிறகு துறவி அமைதியாகக் கேட்டார். "ம்....சரி. இதற்குப் பதில் கூறுங்கள்... ஸ்ரீ கிருஷ்ணன் நிறம் நீலம் என்றீர்கள். உண்மை. அவர் நிறம் ஏன் நீலமாக இருக்கிறது...? சொல்லுங்கள் பார்க்கலாம்....."

அதுவரையில் படபடவென்று பதில் அளித்து வந்த மாணவர்கள் வாயடைத்துப் போனார்கள். அதற்குச் சரியான பதில் அவர்களுக்குத் தெரியவில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் வினாக்குறியுடன் பார்த்துக் கொண்டனர்.

அவர்கள் கிருஷ்ணனின் லீலைகளை விவரிக்கும் பல்வேறு கதைகளைப் படித்து அறிந்திருந்தனர். பிறர் சொல்லக் கேட்டும் உள்ளனர். ஆனால், கண்ணனின் நிறம் நீலமாக இருப்பதன் காரணத்தை அவர்கள் அதுவரையில் கேள்விப்பட்டதே இல்லை.

எல்லா மாணவர்களும் விடை தெரியாமல் விழித்துக் கொண்டிருந்த போது, அவர்களில் ஒருவன் மட்டும் தன் பார்வையை உயரே ஏதோ ஒரு புள்ளியில்நிறுத்தி, தனக்குள் அமைதியாக ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். அந்தத் துறவி சிறிது நேரம் அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அதற்குள் வேறொருவன், சற்று மேலோட்டமாகப் பதில் அளிக்க முயன்று, "ஸ்ரீ கிருஷ்ணன் ஒரு நாகப் பாம்புடன் போரிட்டார் அல்லவா? அப்போது, அந்த நாகப் பாம்பின் சிறல் மூச்சு, அவர் மீது பட்டது."

"ம்.... சொல்."

"அந்த மூச்சுக் காற்று விஷத் தன்மை உடையது. அந்தக் கொடிய

ஜானகி மணாளன்



வேண்டும்

விஷம் அவருடைய உடலை நீல நிறமாக்கியிருக்கலாம்,'' என்றான் அந்த மாணவன்.

அதற்குள், சிந்தனையில் ஆழ்ந்திருந்த அந்த அமைதியான மாணவன் பளிச்சென்று, ''அதெல்லாம் இல்லை,'' என்றான்.

உடனே துறவியார், ''அப்படியானால் உண்மையான காரணம் தான் என்ன? நீயே சொல்லேன்,'' என்று கேட்டுக் கொண்டார்.

சிறிதும் பதற்றமோ அல்லது பயமோ இல்லாத அந்த மாணவன் எழுந்து நின்று சொல்லத் தொடங்கினான்:

''இறைவனின் படைப்பு எல்லையில்லாதது என்பதை, இந்த உலகில் உள்ள நீல நிறம் குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறது,'' என்றான்.

''அப்படியா? சரி, அதற்கு எடுத்துக் காட்டு ஏதாவது கூறேன்,'' என்று உற்சாகப் படுத்தினார், அந்தத் துறவி.

''சொல்கிறேன் ஐயா. கடற்கரையில் நின்று கொண்டு நாம் கடலைப் பார்த்தால், அதன் மறு கரை தெரியவில்லை. கடலில் பயணம் செய்தாலும் கூட, அதன் எல்லை தோன்றுவதில்லை. இவ்வாறு, எல்லையற்று விரிந்து கிடக்கும் அந்தக் கடல் நீரின் நிறம் நீலம்தானே ஐயா?''

''ம்...சரியாகச் சொன்னாய். மேலும் சொல்,'' என்றார் துறவி.

''அதே போல், விண்ணை நோக்கினாலும் அதற்கும் எல்லை கிடையாது. தொடுவானை நோக்கி நாம் எத்தனை தூரம் நடந்து போனாலும் எல்லை எது என்பது தெரிவதில்லை. எனவே, விண்ணும் எல்லையற்றதாகவே இருக்கிறது. அந்த ஆகாயமும் நீல நிறமாகத்தானே ஐயா இருக்கிறது! என்வேதான், இறைவன் படைப்பு எல்லை இல்லாதது என்பதை இந்த உலகின் நீல நிறம் குறிக்கிறது என்று நான் சொன்னேன்,'' என்று விளக்கினான், அந்த மாணவன்.



துறவியிடம் மிகுந்த மகிழ்ச்சி. மற்ற மாணவர்களும் வியப்புடன் அவனையே நோக்கினர்.

அம்மாணவன் தொடர்ந்து, ''நீல நிறம் எல்லாயற்ற தன்மையைக் குறிப்பிடுகிறது என்றால், எல்லாயற்ற இறைவனும் நீல நிறம் உடையவனாகத் தானே இருக்க வேண்டும்? எனவே நான், பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் நீல வண்ணச் சியாமளனாக இருக்கிறான்,'' என்று உரைத்தான்.

அம்மாணவனின் விளக்கம் துறவிக்கு மிகவும் பிடித்திருந்தது. அவர் மனம் மகிழ்ச்சியில் துள்ளியது. சட்டென்று, தன் இருக்கையை விட்டு எழுந்து, நேராக அந்த மாணவன் நின்றிருந்த இடத்துக்கு வந்தார். அவனது முதுகில் தட்டிக் கொடுத்து, தன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்.

''தம்பி, நீ மிகவும் புத்திசாலி. இவ்வளவு தெளிவான சிந்தனை ஆற்றல் பெற்றுள்ள நீ, பிற்காலத்தில் மேலும் சிறந்து விளங்குவாய். இந்த உலகம் உன்னை ஓர் அறிஞர் என்று போற்றும். நீ அனைவராலும் புகழப் படுவாய். இது திண்ணம்,'' என்று அந்தத் துறவி, மனம் திறந்து, அந்த

மாணவனைப் பாராட்டினார்.

சரி, அந்தத் துறவி யார் என்று உங்களால் ஊகிக்க முடிகிறதா?

நானே சொல்லிவிடுகிறேன். அவர் வேறு யாருமல்ல. இந்தியாவின் ஆன்மீக உயர்வை மேலை நாடுகளில் பரப்பிய சுவாமி விவேகானந்தர் அவர்களேதான்!

இந்த நிகழ்ச்சி 1897ல் நடந்தது. அப்போது சுவாமிஜி சென்னை வந்திருந்தார். அவரைச் சென்னை மாநிலச் சட்டக் கல்லூரியின் மாணவர் தங்கும் விடுதியில் தங்க வைத்திருந்தனர். அங்கு, அவர் தங்கியிருந்த அறைச் சுவரில் மாட்டியிருந்த ஒரு படத்தைப் பார்த்துத்தான், அந்த மாணவர்களுடன் அவர் உரையாடினார்.

அந்தக் கெட்டிக்கார மாணவனைப் பற்றி விவேகானந்தர் கூறிய பாராட்டுரைகள் பிற்காலத்தில் பலித்தனவா என்பதை அறிய விரும்புகிறீர்கள் அல்லவா?

ஆம், பலித்துவிட்டது. அந்த மாணவன் பெரிய மூதறிஞராகவே ஆகிவிட்டார்! யார் தெரியுமா? மூதறிஞர் ராஜாஜி அவர்களேதான். அப்போது அவருக்குப் பத்தொன்பது வயது.

ராஜாஜி மிகவும் நேர்மையும் நாணயமும் மிக்கவர். அத்துடன் மன உறுதியும் கொண்டவர். யாராலும் அவரது மன உறுதியிலிருந்து அவரை அசைத்துவிட முடியாது. ஆனால், அவர் மற்றவரின் உறுதியை மிக எளிதில் குலைத்து விடுவார். அவர்களைத் தன் வசப்படுத்திக்கொள்ளும் சாதுரியம் மிக்கவர்.

தவறு செய்தவர்கள், எத்தனை பெரிய செல்வாக்கும் ஆள்பலமும் கொண்டவராக இருந்தாலும், சிறிதும் அஞ்சாமல், அவர்கள் செய்த தவறுகளைச் சுட்டிக் காட்டிவிடுவார். கண்டித்தும் பேசிவிடுவார். அதனால் பிற்பாடு விரோதம் வருமே என்று கலங்க மாட்டார். அப்படியே விரோதம் வந்தாலும், தீரத்தோடு அதை எதிர்த்து நின்று வெற்றி கொள்வார்.


தவறு செய்தவர்கள் அவரிடம் விரோதம் பாராட்டுவார்கள். ஆனால், அவர் தன்னை அவர்களுக்கு விரோதியாக்கிக் கொள்ள மாட்டார். எந்த வித விருப்பு வெறுப்பும் இன்றி, அதில் வெற்றியும் காண்பார்.


அத்தகைய ஒரு நிகழ்ச்சி இதோ:

1942 ஆம் ஆண்டு. ஆகஸ்ட் மாதம் ஐந்தாம் நாள். ராஜாஜி பம்பாய் சென்றிருந்த சமயம். அங்கு 'மடுங்கா' என்ற ஒரு பகுதி. 'நியூ ஹால்' என்ற இடத்தில் ஒரு கூட்டம். அதில் ராஜாஜி முக்கிய விருந்தினராகக் கலந்து கொள்ள ஏற்பாடாகியிருந்தது.

கூட்டம் துவங்கும் நேரம் வந்தது. ஹால் நிரம்பி வழிந்தது. அதில் ராஜாஜியைப் பிடிக்காதவர்களும் கூடியிருந்தனர். எப்படியாவது அவரைக் கூட்டத்தில் பேசவிடாமல் தடுத்துவிட வேண்டும் என்ற முடிவுடன் அவர்கள் வந்து கூடியிருந்தார்கள்.

தலைவர்கள் ஒவ்வொருவராக மேடைக்கு வந்தனர். இன்னும் ராஜாஜி மட்டும்தான் வந்து அமர வேண்டும். அவருக்காக ஒரு நாற்காலி காலியாக விடப்பட்டிருந்தது.





கூட்டத்தினரிடம் பொறுமை இல்லை. அவரை மேடைக்குள்ளேயே வரவிடாமல் விரட்டியடித்துவிட வேண்டும் என்று திட்டமிட்டிருந்தவர்கள், ராஜாஜிக்கு எதிரான கோஷங்களை எழுப்பத் தொடங்கினர்.

ஒருவன் பலத்த குரலில்., ''ராஜாஜி...'' என்று கூச்சலிட்டான்.

உடனே மற்றவர்கள், ''ஒழிக...'' என்று கோரசாகக் குரல் எழுப்பி ஆரவாரம் செய்தனர்.

இப்படித் திரும்பத் திரும்பக் கூறி, அங்கு ஒரு பெரும் பரபரப்பையே ஏற்படுத்திவிட்டனர். இவ்வாறெல்லாம் செய்தால், ராஜாஜி பயந்து போய் மேடைக்கு வராமலேயே போய்விடுவார் என்று அவர்கள் நினைத்தனர்., அதெல்லாம் ராஜாஜியிடமா நடக்கும்?

கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தவர்களில் ஒருவர் ராஜாஜியிடம் வந்து, ''ஐயா! எதிர்ப்புக் குரல் மிக அதிகமாக இருக்கிறதே... என்ன செய்யலாம்...? '' என்றார் கலக்கத்துடன்.

ராஜாஜி, ''இருக்கட்டுமே! அதனால்என்ன? அவர்கள் தங்களுடைய கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறார்கள். அதற்கு இது ஒரு வழி. தெரிவித்து விட்டுப் போகட்டுமே! என்றார்.

உடனே அந்த நபர், ''ஐயா! இந்தச் சூழ்நிலையில் தாங்கள் மேடைக்கு வந்து அதனால் ஏதாவது அசம்பாவிதம் நடந்து விட்டால்.... என்ன செய்வது...? ஆகவே....'' என்று ஏதோ சொல்லத் தயங்கினார்.

உடனே ராஜாஜி, ''என்னை மேடைக்கு வரவேண்டாம்; திரும்பிப் போய்விடுங்கள் என்கிறீர்களா..? என்றார்.

அந்த நபர் வாய் திறந்து அப்படிச் சொல்லத் தயங்கினாலும், அவருடைய தலை 'ஆம்' என்பது போல் மெல்ல அசைந்தது.

சட்டென்று ராஜாஜி, ''நீங்கள் அப்படிச் சொன்னால், 'ஒழிக, திரும்பிப் போ' என்று அவர்கள் கூச்சலிடுவதற்கும், 'மேடைக்கு வரவேண்டாம், திரும்பிவிடுங்கள்' என்று நீங்கள் சொல்வதற்கும் என்ன வித்தியாசம் இருந்து விட முடியும்? எனவே, நான் மேடைக்கு வரத்தான் போகிறேன். பேசிவிட்டுத்தான் போகப் போகிறேன்.... நடப்பது நடக்கட்டும்'' என்றார் சிறிதும் அச்சமின்றி.

அந்த நபரால் எதுவும் சொல்ல முடியவில்லை.

ராஜாஜி மேடைக்குள் நுழைந்தார். அவரைப் பார்த்ததும், 'ஒழிக' கூச்சலும் 'திரும்பிப் போ' கூச்சலும் அதிகரித்தன.

ராஜாஜி தனது ஆசனத்தை நெருங்கினார். உட்காரக் கூட இல்லை. அதற்குள், இளைஞன், எவரும் எதிர்பாராத விதமாய் மேடையில் ஏறி வந்தான். சுற்றிலும் இருந்தவர்கள் அவனைப் பிடித்துவிட முயன்றனர். ராஜாஜி அமைதியாக அக்காட்சியை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார். அந்த இளைஞன் அனைவரையும் எகிறித் தள்ளி விட்டுவிட்டு, ராஜாஜியை நோக்கி முன்னேறிக் கண் இமைக்கும் நேரத்தில், தன் கையிலிருந்த காகிதப் பொட்டலத்தைப் பிரித்து, அவருடைய முகத்தை நோக்கி ஓங்கி வீசினான்.

அது என்ன தெரியுமா குழந்தை

களே....?

இளகிப் போய் 'கொள கொள' என்றிருந்த கறுப்புத் தார். சாலைக்குப் போடுவார்களே... அதே தார் உடலில் ஒட்டிக் கொண்டால், லேசில் கழுவிச் சுத்தம் செய்துவிட முடியாது. மண்ணெண்ணெய் தடவித் தடவி, இலேசாகத் துடைத்துத் துடைத்து எடுத்துச் சுத்தம் செய்ய வேண்டும்.

அந்த இளைஞன் வீசிய தார், ராஜாஜியின் முகம் முழுதும் அப்பிக் கொண்டது. அந்த வாலிபனின் வெறிச்செயலை, ஏதோ தீரச் செயல் என்று எடுத்துக் கொண்ட எதிர்ப்பாளர்கள், மேலும் உரத்த குரலில் 'ஒழிக' கோஷத்தைக் கிளப்பினர்.

மேடையில் இருந்தவர்களின் நிலைமை மிகவும் தர்மசங்கடமாகி விட்டது. கைகளைப் பிசைந்து கொண்டு நின்றனர். ஆனால், ராஜாஜி மட்டும் எதுவுமே நடக்காதது போல், தன் இருக்கையில் அமர்ந்து விட்டார்.

கூட்டத்தினர் தொடர்ந்து கூச்சல் போட்டனர். ராஜாஜி புன்முறுவலுடன், அதைப் பார்த்து ரசித்துக் கொண்டே இருந்தார்.

அரைமணி நேரம் கடந்தது. விடாமல் கோஷம் போட்டவர்கள், ராஜாஜியிடம் எந்தவிதப் பாதிப்பும் இல்லாததைக் கண்டு, மெல்ல மெல்ல அடங்கிப் போனார்கள்.

கூச்சல் முற்றிலுமாக அடங்கிய பிறகு, எதுவுமே நடக்காதது போல், ராஜாஜி எழுந்து நின்று பேசத் தொடங்கினார்.

"..... உங்களுக்கெல்லாம் என்னைப் பிடிக்கவில்லை. நான் அதைப் புரிந்து கொண்டு விட்டேன். இதை எனக்குப் புரிய வைக்க வேண்டும் என்று தான் நீங்கள் எல்லாம், இத்தனை நேரம் 'ஒழிக' என்றும் 'திரும்பிப் போ' என்றும் கூச்சலிட்டீர்கள்... உங்களில் ஒரு இளைஞருக்கு அளவு கடந்த உற்சாகம்.... என் முகத்தில் தார் எடுத்து வீசித் தனது எதிர்ப்புணர்வை, எனக்குப் புரியவைக்க வேண்டும் என்று தீர்மானித்து விட்டார். கடைசி வரையில், சிறிதும் விட்டுக் கொடுக்காமல், தனது அந்தத் தீர்மானத்தில் உறுதியுடன் நின்று, அதைச் செயலில் காட்டி விட்டார். எனவே, நான் அவரைப் பாராட்டுகிறேன். இவரைப் போன்ற மன உறுதி மிக்க இளைஞர்கள் தான் இப்போது நம் நாட்டுக்குத் தேவை. இங்குள்ள இளைஞர்கள் என்னை விரட்டுவதில் காட்டிய தீரத்தை, உறுதியுடன் ஆங்கிலேயரை நம் நாட்டை விட்டு விரட்டுவதில் காட்டினால் நல்லது....."

ராஜாஜி இப்படிப் பேசவும், கூடியிருந்த அனைவரும் அவர் கருத்தை ஆமோதித்துக்கரவொலிஎழுப்பினர். சிலர் 'ராஜாஜி வாழ்க' என்றும் குரல் எழுப்பத் தொடங்கி விட்டனர்.

சற்று நேரம் முன்பு, 'ஒழிக' என்று குரல் எழுப்பிய அதே கூட்டத்தினரை, ராஜாஜி எப்படித் தனக்கு ஆதரவாகத் திருப்பிக் கொண்டுவிட்டார் பார்த்தீர்களா, குழந்தைகளே!

இதிலிருந்து ராஜாஜியின் பேச்சுச் சாதுர்யம் உங்களுக்கு விளங்கி இருக்குமே...! அவர் வாழ்வில் நடந்த இது போன்ற நிகழ்ச்சிகளை மேலும் படித்தறிந்து, நீங்களும் அவரைப் போல் உயர்வடைய முயற்சி செய்யுங்கள்.

செய்கிறீர்களா?

படத்தைப் பார்த்து.... விடை:

கு	ள	வி		மு	த	லை
ர						
ங்		நா		பூ	னை	
கு	தி	ரை		ரா		
	மி		ப	ன்	றி	
க	ங்	கா	ரு			
	கி		ந்		சி	
	ல		து		ல	
பா	ம்	பு		ஆ	ந்	தை
		லி			தி	



நஞ்சும் அமுதாகும்

ஆசிரியர்கள் கற்பித்த எந்தப் பாடத்திலும் பாலுவின் மனம் ஒன்ற வில்லை. அவனது உடல்தான் வகுப் பறையில் அமர்ந்திருந்தது. உள்ள மெல்லாம் தனது குடிசையையே சுற்றிச் சுற்றி வந்தது. மூன்று நாட்க ளாக மூடிய கண்கள் திறவாமல் முடங் கிக் கிடக்கும் தன் தாயின் மெலிந்த உருவம் அவனது மனக் கண்களில் தோன்றியது.

'இந்த நச்சுக் காய்ச்சல் ஒரு வேளை அம்மாவின் உயிரைப் பலி கொண்டு விட்டால்...' எண்ணிப் பார்க்கும் போதே அவனது இதயம் வெடித்து விடும் போலிருந்தது.

பாலுவுக்கு இவ்வுலகத்தில் ஒரே ஆதரவு அவனது தாய்தான். நகரின் ஒதுக்குப்புறச் சேரியில் உள்ள ஓர் ஓட்டைக்குடிசை தான் அவர்கள் இருப் பிடம். கட்டிடத் தொழிலில் சித்தாள் வேலை பார்த்து வந்த அவன் தாய், கஷ்டத்தோடு கஷ்டமாக மகன் பாலு வையும் படிக்க வைத்துக் கொண் டிருந்தாள்!

"பாலு என்ற பையனை யாரோ தேடி வந்திருக்காங்க சார்!" — ஆசிரி யரிடம் பியூன் வந்து கூற, 'போக லாம்,' என்ற ஆசிரியரின் அனுமதி கிடைத்த அடுத்த கணம் பாலு மிகுந்த பீதியோடு வெளியே ஓடி வந்தான்.

பக்கத்து வீட்டுப் பாக்கியம் பாட்டி பள்ளி வாசலில் நின்று கொண்டிருந் தாள்.

"பாட்டி, அம்மாவுக்கு...? " என்று பதற்றத்துடன் கூவியவாறு அவளை நெருங்கினான்.

"ஒண்ணுமில்லை பாலு. தர்ம ஆஸ் பத்திரி டாக்டர் வந்து பார்த்துட்டு ஓர் ஊசி போட்டார். ஏதோ ஒரு மருந்து எழுதிக் கொடுத்திருக்காரு. இந்தா சீட்டு!" — பாட்டி சீட்டைக் கொடுத்து விட்டுப் போய் விட்டாள்.

'இந்த மருந்தைக் குடிச்சா நாளைக்கே அம்மா நல்லா ஆயிடு வாங்க.' — பாலுவின் மனத்தில் நம் பிக்கை ஊற்றெடுத்தது. 'மருந்து வாங்கப் பணத்துக்கு எங்கே போறது? '

அடுத்த நிமிடமே, கட்டிடக் காண்ட்ராக்டர் கண்ணுச்சாமியின் உருவம் அவனது நெஞ்சத் திரையில் நிழலாடியது. ஒன்றையும் யோசிக்கா மல் ஓட்டமும் நடையுமாகக் கிளம்பி னான்.

வழியில் மருந்துக் கடை ஒன்று அவன் கண்ணில் பட்டது. பையிலி ருந்த மருந்துச் சீட்டை எடுத்துக் கடைக்காரரிடம் நீட்டி, அதன் விலையை விசாரித்தான்.

"பதினான்கு ரூபாய், எண்பது காசு!"

மறுபடியும் சீட்டை வாங்கிப்

பையில் வைத்துக் கொண்டு வேகமாக நடந்தான்.

பலமுறை தன் தாயுடன் சென்று பழக்கப்பட்டிருந்த பாலுவுக்குக் காண்ட்ராக்டர் கண்ணுச்சாமியின் வீட்டைக் கண்டுபிடிப்பதில் சிரமம் எதுவும் இருக்கவில்லை.

போக்குவரத்து நெரிசல் மிகுந்த நெடுஞ்சாலையின் ஓரத்தில் அமைந்திருந்தது, அந்தப் பெரிய வீடு. படிகளில் ஏறி வராந்தாவை அடைந்த பாலுவின் கால்கள் அதற்கு மேல் முன்னேற முடியாமல் தயங்கி நின்றன.

இரண்டு வயதுள்ள அழகான ஆண் குழந்தையொன்று நடைவண்டியை உருட்டி விளையாடிக் கொண்டிருந்தது. பெரியவர்கள் யாரையும் காணோம். 'உள்ளே இருப்பார்கள்; எப்படி அழைப்பது?' என்று எண்ணமிட்டவாறு அங்கேயே நின்று விட்டான்.

''யாருடா நீ? யாரைப் பார்க்கணும்?'' என்று கனிவே இல்லாத கண்டிப்பான விசாரணையோடு வெளியே வந்தாள் காண்ட்ராக்டரின் மனைவி.

''நான் சித்தாளு சின்னம்மாவின் மகன். எங்கம்மா ஒடம்புக்குச் சொகமில்லாமே கெடக்குது. மருந்து வாங்கப் பதினஞ்சு ரூபா தேவைப்படுது. ஐயாவைப் பார்த்து வாங்கிட்டுப் போகணும்....'' — மிகவும் பணிந்து, கெஞ்சும் குரலில் பேசினான் பாலு.

''ஐயா வெளியூர் போயிருக்காரு. எப்போ வருவாருன்னு சொல்ல முடியாது. போயி வேற எங்காவது கேட்டுப் பாரு போ.''

''வேற யாரையும் தெரியாதுங்கம்மா. ஒங்க காலிலே விழுந்து கேட்கறேன். எங்கம்மா உசிரை நீங்கதான் காப்பாத்தணும். எங்கம்மா சொகமாகி வேலைக்குப் போனதும், ஐயா கிட்டே சொல்லி இந்த ரூபாயைக் கழிச்சிக்கிடச் சொல்லுங்கம்மா.'' — கையெடுத்துக் கும்பிட்டான் பாலு.

அவனது பரிதாபமான வேண்டுகோள் அந்த அம்மாளின் மனத்தில் எள்ளளவு கூட இரக்கத்தை ஏற்படுத்தவில்லை.

''இந்தா பாரு, ஒன்னோட மாரடிக்க என்னாலே முடியாது. நீ பாட்டுக்குக் கூவிக்கிட்டு நில்லு,'' என்று கூறி விட்டு வீட்டுக்குள் போய் விட்டாள்.

அவனது உள்ளத்தில் ஓங்கி உயர்ந்து நின்ற நம்பிக்கை என்ற மரம் ஒரே நிமிடத்தில் வெட்டிச் சாய்க்கப் பட்டு விட்டது. கண்களில் ஊற்றெடுத்த நீரைக் கைகளால் துடைத்துக் கொண்டான்.

எங்கே போவது? எவரைக் கேட்பது? புரியாத குழப்பத்தில் வீதியில் இறங்கி நடந்தான். அவனது நடையில் தயக்கமும் தளர்ச்சியும் மேலோங்கி நின்றன.

''டேய், பையா!'' யாரோ கூப்பிடும் குரல் கேட்டுத் திரும்பினான் பாலு.

''இந்தா, இந்தப் பெட்டியை பஸ் ஸ்டாண்ட் வரைக்கும் தூக்கியா. ரெண்டு ரூவா தாரேன்!''



பாலுவின் மனத்தில் ஒரு புதுத் தெம்பு துளிர் விட்டது. தனக்கு உதவி செய்யக் கடவுளே அவர் வடிவில் வந்திருப்பது போலத் தோன்றியது அவனுக்கு. அழைப்பு விடுத்த பெரியவரை நோக்கி ஆவலோடு ஓடினான். அவர் நீட்டிய பெட்டியை ஆர்வத்துடன் வாங்கித் தலையில் வைத்துக் கொண்டான். மற்றொரு பெட்டியை எடுத்துக் கொண்டு பெரியவர் முன்னால் கிளம்பினார். பாலு அவரை வழி மறித்து, ''ஐயா, அந்தப் பெட்டியையும் மேலே வையுங்க; நானே கொண்டாரேன்,'' என்று பணிவோடு கேட்டான்.

''வேண்டாம் தம்பி, நானே கொண்டாரேன்,'' என்று அவர் மறுத்தாலும் பாலு விடவில்லை.

''சும்மா வையுங்கய்யா; கூலி ஒண்ணும் கூடத் தர வேணாம். ரெண்டுக்கும் ரெண்டு ரூவா போதும்; எனக்கு இது பாரமாவே தோணலை!''



அவனது அன்பு கலந்த பேச்சுக்குக் கட்டுப்பட்ட பெரியவர் இரண்டாவது பெட்டியையும் அவன் தலை மீது வைத்து விட்டு நடந்தார். பாலு அவரைப் பின் தொடர்ந்தான்.

'இது போல நாலு பேருக்குச் சுமை தூக்கி உதவினால் கூட மருந்துக்கான பணத்தைச் சம்பாதிச்சிடலாம் போலிருக்கே!' என்ற நம்பிக்கை அவனது அடிமனத்தில் தெம்பூட்டிற்று.

பஸ் ஸ்டாண்டில் இரண்டு பெட்டிகளையும் இறக்கி வைத்த பெரியவர், தன் பையிலிருந்து ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து நீட்டி, ''இந்தா தம்பி; ரொம்ப நல்ல பையனா இருக்கே. இந்த அஞ்சு ரூவாயையும் வச்சிக்கோ,'' என்று கூறினார்.

இவ்வளவு தொகையை அவன் எதிர்பார்க்கவே இல்லை. தனது வேலைக்கு அந்தக் கூலி அதிகமென்று தெரிந்தாலும், அவசரத் தேவை அவனைக் கையேந்த வைத்தது. நன்றியோடு பெற்றுக் கொண்டு நகர்ந்தான்.

பஸ் ஸ்டாண்டின் ஒவ்வொரு பிளாட்பாரத்திலும் ஏறி இறங்கிப் பம்பரமாகச் சுழன்றான். சுமைகளோடு நிற்கும் பயணிகளை நெருங்கி, ''ஐயா, எங்கே போகணும்? சுமையைத் தூக்கியாரேன். நீங்க கொடுக்கிறதைக் கொடுங்க,'' என்று கெஞ்சிக் கூத்தாடினான்.

அவனது முயற்சி வீண்போகவில்லை. பலர் மறுத்தாலும், சிலர் அவனது பரிதாப நிலை கண்டு இரக்கப் பட்டுச் சுமையைக் கொடுத்தனர்.

அங்கிருந்து இரயில்வே ஸ்டேஷன், டவுன்ஹால், கோபுர வாசல் என்று ஏழெட்டு வாய்ப்புகள் தொடர்ந்து கிடைத்தன. இருட்டத் தொடங்கி விட்டது. வீதி விளக்கின் வெளிச்சத்தில் ஒதுங்கிப் பையில் கிடந்த நோட்டுக்களையும் சில்லறைகளையும் எண்ணிப் பார்த்தான். பதினேழு ரூபாய் சில்லறை! பாலுவின் மனத்தில் ஆனந்த வெள்ளம்.

இரயில்வே மணிக்கூண்டு மணி எட்டைக் காட்டியது. தாயின் நினைவு

தலை தூக்கியது. மருந்துக் கடையைத் தேடி ஓடினான். அந்தப் பெரிய கடையில் மருந்து வாங்குவோர் கூட்டம் தேனீக்களாய் மொய்த்து நின்றது. சீட்டைக் கொடுத்து மருந்தை வாங்கிக் கொண்டு, முண்டியடித்து வெளியேறுவதற்கே பத்து நிமிடங்கள் ஆகிவிட்டன. பையில் கிடந்த மீதிக் காசில் ரொட்டியை வாங்கிக் கொண்டு வீட்டை நோக்கி ஓட்டமெடுத்தான். அம்மா அந்த மருந்தைக் குடித்துக் குணமாகி, எழுந்து நடமாடப் போவதைக் கற்பனை செய்து பார்த்ததும், அவனது கால்கள் இயந்திரமாக இயங்கிப் பறந்தன.

வாகனங்களின் நடமாட்டமும் போக்கு வரத்து நெரிசலும் இன்னும் ஓய்ந்த பாடில்லை. பாலு விலகி விலகி ஓடினான்.

'ஐயோ, இது என்ன விபரீதம்!' பாலு ஒரு கணம் பதறிப் போய்விட்டான்.

சாலையோரத்திலுள்ள ஒரு வீட்டிலிருந்து வெளியே உருண்டு வந்த நடை வண்டியொன்று சரிவான ரோட்டின் மையப் பகுதியை நோக்கி வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. அந்த வண்டியை எட்டிப் பிடிப்பதற்காக அதைப் பின் தொடர்ந்து தளர் நடையில் வந்து கொண்டிருந்தது ஒரு குழந்தை. அதே சமயம் எதிர்த்திசையில் பத்து மீட்டர் தூரத்தில் லாரியொன்று வேகத்தைக் குறைக்காமல் காற்றாகப் பறந்து வந்தது.


பாலு ஒரு நொடி கூடத் தாமதிக்கவில்லை. அவன் கையில் ஏந்தி வந்த மருந்துப் புட்டியும் ரொட்டிப் பொட்டலமும் எங்கோ போய் விழுந்தன. ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து குழந்தையை லாவித் தூக்கிக் கொண்டு வீட்டின் படியருகே ஒதுங்கவும், எமனாக வந்த லாரி நடை வண்டியைச் சுக்கு நூறாக்கி விட்டுக் 'கிரீச்' என்ற ஒலத்துடன் பிரேக் போடவும் சரியாக இருந்தது.

அடுத்த நிமிடமே அவ்விடத்தில் குய்யோ முறையோ என்ற கூக்குரலுடன் பெருங்கூட்டம் கூடி விட்டது. நடந்தது என்னவென்று அறியத் துடிப்போரின் ஆயிரமாயிரம் வினாக்கள். பாலுவோ இறுக அணைத்த குழந்தையுடன் பதட்டம் தணியாத படபடப்போடு கைகால்கள் நடுங்க நின்றான்.

'ஐயோ, என் குழந்தை! என் புள்ளையைக் காணோமே; என்னாச்சு தெரியலியே?'' என்று பதறிப் புலம்பியவாறு லாரிச் சக்கரங்களின் கீழே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஒரு பெண்.

லாரி டிரைவர் அவளைப் பார்த்து மிகவும் கோபத்தோடு, ''ஏம்மா இதென்ன ரோடா? இல்லே பிளேகிரௌண்டா? புள்ளையை நடுத் தெருவிலே விட்டுவிட்டு வேடிக்கை பார்க்கிறியே!'' என்று கத்தியவாறு கூட்டத்திற்குள் குழந்தையுடன் நின்று கொண்டிருந்த பாலுவை அடையாளம் கண்டு கொண்டார்.

''இந்தப் பையன் மட்டும் சமயத்தில்





வந்து, புள்ளையைத் தூக்காமே போயிருந்தா என்னவாகியிருக்கும் தெரியுமா? அந்த நடை வண்டி நொறுங்கின மாதிரி உன் புள்ளையும் நொறுங்கியிருக்க வேண்டியது தான். தன் உசிரைப் பெரிசா நினைக்காம குறுக்க பாய்ந்து குழந்தையைத் தூக்கினான் பாருங்க,'' என்று பாலுவின் முதுகில் தட்டிக்கொடுத்தார் டிரைவர்.


லாரிச் சக்கரங்களின் கீழே பிள்ளையைத் தேடிக் கொண்டிருந்த அந்தப் பெண் ஓடி வந்து, பாலுவின் பிடியிலிருந்த குழந்தையை ஆவலுடன் அள்ளித் தனது நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள். தூரத்து விளக்கின் வெளிச்சத்தில் அந்தப் பெண் யாரென்று பாலுவுக்கு அடையாளம் தெரிந்து விட்டது. அன்று மாலை தான் உதவி கேட்டுச் சென்றபோது மறுத்து விரட்டிய காண்ட்ராக்டரின் மனைவியேதான்!

''எத்தினி வாட்டி ஒனக்குச் சொல்றது? இப்ப ஒரு நிமிசத்துலே புள்ளையை எமன் கையிலே கொடுத்திருப்பே! யார் செஞ்ச புண்ணியமோ!'' என்று அங்கலாய்த்தவாறு அங்கே வந்து சேர்ந்த காண்ட்ராக்டர் கண்ணுச்சாமியையும் பாலுவால் அடையாளம் காண முடிந்தது.

திரண்டு நின்ற கூட்டம் சிறிது சிறிதாகக் கரைந்தது. லாரி டிரைவர், கட்டிடக் காண்ட்ராக்டர், அவர் மனைவி, பாலு ஆகியோர் மட்டுமே அங்கே நின்றிருந்தனர்.

அதுவரை எங்கோ ஓடி ஒதுங்கி





நின்ற தன் தாயின் நினைவு பாலுவின் மனத்திற்குள் திடீரென்று புகுந்ததும், தான் வாங்கி வந்த மருந்துச் சீசாவையும் ரொட்டிப் பொட்டலத்தையும் தேட ஆரம்பித்தான்.

அவனை நெருங்கிய காண்ட்ராக்ட் கண்ணுசாமி, ''தம்பி நீ நல்லா இருக்கணும். யாரப்பா நீ? என்ன தேடறே?'' என்று நன்றியுணர்வுடன் கேட்டார்.

''உங்ககிட்டே சித்தாள் வேலை பார்க்கிற சின்னம்மாவின் மகன். அம்மாவுக்கு நாலஞ்சு நாளா விஷக் காச்சல். அதுக்குத்தான் மருந்து வாங்கியாந்தேன். குழந்தையைத் தூக்கப் போன அவசரத்திலே எங்கேயோ வீசிட்டேன்,'' என்று கூறியபடி இங்கும் அங்குமாக நடந்த பாலு, சாலையின் ஓரத்தில் கிடந்த ஒரு புட்டியை ஆவலுடன் ஓடி எடுத்தான்.

கழுத்துக்கு மேலே மூளியாகக் காட்சி தந்த அந்தச் சீசாவில் ஒரு சொட்டு மருந்து கூட இல்லை. அவன் முகத்தில் உடனே வாட்டம் படர்ந்து, மனத்தில் கவலை கப்பத் தொடங்கியது.

''தம்பி, நீ சின்னம்மாவின் மகனா?'' என்று பாசத்துடன் கேட்ட கண்ணுச்சாமி, ''கவலைப்படாதேப்பா. அந்த மருந்து போனால் போகட்டும். நானே வந்து புது மருந்து வாங்கித் தர்றேன்,'' என்று அவன் முதுகைத் தடவிக் கொடுத்தார்.

அவர்களை நெருங்கி வந்த அவர் மனைவி, ''பாவம், இந்தப் பையன் சாயங்காலம் உங்களைத் தேடிப் பணம் கேட்க நம்ம வீட்டுக்கு

வந்தான். நான் ஒரு பாவி; பணம் இல்லேன்னு வெறுங்கையோட விரட்டிட்டேன்,'' என்று திருந்திய தன் உள்ளத்தின் வருத்தத்தை வெளிப்படுத்தினாள்.

அதே சமயம் 'சர்'ரென்று வந்த சைக்கிள் ஒன்று, அவர்கள் அருகில் வந்ததும் பிரேக் போட்டு நின்றது. சைக்கிளிலிருந்து வேகமாக இறங்கிய இளைஞன், பாலுவின் முகத்தை உற்றுக் கவனித்துவிட்டு, ''டேய் தம்பி, எங்க கடையிலே பத்து நிமிஷத்துக்கு முன்னாடி காய்ச்சலுக்குன்னு டானிக் வாங்கியாந்தது நீதானே? '' என்று படபடப்புடன் கேட்டான்.

பாலுவும்,''ஆமாம்,'' என்று தலையாட்டினான்.

''அந்தமருந்துஎங்கேப்பா? யாருக்காவது கொடுத்து குடிக்கச் சொல்லிட்டியா? '' என்று பதற்றம் தணியாமல் கேட்டான் சைக்கிள் இளைஞன்.

''இன்னும் இல்லே; என்ன விஷயம்? '' குறுக்கிட்டார் கண்ணுச்சாமி.


''கடையில் கூட்டம் அதிகம் இருந்துச்சி. வியாபாரச் சந்தடியிலே நான் தான் மருந்தை மாத்திக் கொடுத்திட்டேன். இவனுக்கு நான் கொடுத்தனுப்பின மருந்து உடல் அரிப்புக்கு வெளியில் பூசிக்க வேண்டியது. தப்பித் தவறி ஒரு சொட்டுக்குடிச்சிருந்தாலும் உசிருக்கே ஆபத்து. ஆமா; அது ஒரு விஷ மருந்து,'' என்றான் மருந்துக் கடைக்கார இளைஞன்.

பாலுவுக்கு நடப்பதெல்லாம் ஒரே அதிசயமாகத் தோன்றியது.

'இந்த விபத்து மட்டும் நடக்காதிருந்தால் அம்மாவுக்கு அந்த மருந்தைக் கொடுத்து, நானே அவளைச் சாகடிச்சிருப்பேனோ? ' என்று எண்ணிய போது, அழுகையும் ஆனந்தமும் அவன் கண்களில் நீரைப் பெருகச் செய்தன.

''தம்பி, உன் தங்கமான மனசுக்கு நஞ்சு கூட அமுதமா மாறிடுச்சு பார்த்தியா? '' என்று அவன் தலையைத் தடவிக் கொடுத்த கண்ணுச்சாமி, தம் பையிலிருந்து ஐம்பது ரூபாய் நோட்டை எடுத்துக் கடைக்கார இளைஞனிடம்நீட்டினார். பிறகு பாலுவைப் பார்த்து, ''நீ மருந்து வாங்கிக்கிட்டு எங்க வீட்டுக்கு வந்திடுப்பா. நான் ரெடியா இருக்கேன். இரண்டு பேரும் உங்க வீட்டுக்குப் போகலாம்,'' என்று அன்பொழுகப் பேசினார்.


பணத்தை வாங்கிப் பையில் வைத்துக் கொண்ட மருந்துக் கடை இளைஞன், பாலுவையும் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு கடையை நோக்கிப் பறந்தான்.





எட்டுக்கு எட்டு
8
கதை: தேசபந்து
படம்: ஜெ...
எட்டு கன்னையாவின் பேச்சுக்கு ரஞ்சித் கட்டுப்பட்டான். கமிஷனர் வீட்டில்-
ஹலோ, ஆன்ட்டி, அங்கிள் எங்கே? ஆபீஸ்லயா?
வா ரஞ்சித். உன்னைத் தான் நினைச்சேன். வந்துட்டே. எங்கே வாயைத் திற...
இன்னிக்கு என்ன ஆன்ட்டி விசேஷம்?
இன்னிக்கு எங்க கல்யாண நாள். இன்னிக்காவது ஆபீசை மறந்து வீட்டிலே இருக்கணும்னு அவரைக் கேட்டுக்கிட்டேன்.
மெனி ஹேப்பி ரிட்டர்ன்ஸ் ஆஃப் த டே! நான் இடைஞ்சலா...?
சேச்சே.. இல்லே!


கன்னையா! நீ காத்திட்டிருக்க வேணாம். போகலாம்!
இல்லேம்மா, நான் ஐயாவைப் பார்த்ததுக்கப்புறம் போறேன்.
ஹலோ ரஞ்சித்! போன காரியம் என்னாச்சு?
ஆல்மோஸ்ட் சால்வ்ட்!
சார், அந்த ஜமீந்தாரோட வாட்ச்மேனைப் பார்த்தோம்!
இஸிட்?
ஆரம்பிச்சாச்சா! கன்னையா, நீ போகலாம். நீங்க ரெண்டு பேரும் டைனிங் டேபிளுக்கு வாங்க சொல்றேன்!


விருந்து முடியும்வரை ஆபீஸ் விஷயம் பேசக் கூடாது என்று கண்டிஷன்! கமிஷனர் ஒரு கல்யாணப் பத்திரிகையை மேஜைக்கடியில் ரஞ்சித்திடம் நீட்டினார்!
அதில்—
8-7=1
சாப்பாடு முடிந்ததும்—
இதுவரை இந்த மாதிரி எச்சரிக்கை, துண்டுக் காகிதத்தில் வந்தது. இந்த முறை கல்யாணப் பத்திரிகையில் வந்திருக்கு!
அங்கிள், நாம் இந்தக் கல்யாண மண்டபத்துக்கு போனால் புரியும்!
யெஸ்!
கல்யாண மண்டபத்தில்— மேடையில் பாட்டுக் கோஷ்டி ஸ்தம்பித்து நிற்க, கமிஷனர் மைக்கைப் பிடித்துக் கொண்டு—
யுவர் அட்டென்ஷன் ப்ளீஸ்! குழந்தைகளோட வந்திருக்கிறவங்க, உங்க பிள்ளைகள் பத்திரமா இருக்கான்னு சரிபாருங்க!


அங்கே சசிவர்ணம் கலவரத்துடன் ரஞ்சித் திடம் வந்து—
அன்னிக்கு நீங்க வந்திருந் தப்பவே சொல்லி யிருந்திருக் கணும்...
இது உங்க வீட்டுக் கல்யாணமா? உங்க சொந்தக்காரங்கள்ளாம் வந்திருப்பாங்களா?
ஆமாங்க, ஏன்?
என் கணிப்புச் சரியா இருந்தா உங்க சொந்தக் காரங்க பிள்ளைங்கள்லே ரெண்டு கிட்நாப் ஆகி யிருக்கணும்.
ரஞ்சித்தின் ஊகம் பொய்க்கவில்லை—
சசி அண்ணா, என் ரெட்டைப் பிள்ளைங் களை காணோம்..
தொடரும்.



இது என்ன? எதுனிக்கும் இல்லாம இன்னிக்கு முட்டையைப் பச்சை கலர்ல இடறே?
பாவம்! டாக்டர் அவரைத் தினம் பச்சை முட்டை சாப்பிடச் சொல்லி இருக்காராம் அதனால்தான்!
அண்ணே! கல்யாண விருந்துக்குப் போனியே, விருந்து பிடிச்சுதா?
இல்லை! எளிமையான விருந்து தான்
உன்னுடைய உடம்புக்கு என்ன?
கொள்ளு கொள்ளுனு இருமுது!
அந்த ஆசாமிகிட்டே இருந்து தலைதெறிக்க இந்த ஓட்டம் ஓடி வர்றியே, அவனை கடிச்சிட்டு ஓடி வர்றியா என்ன?
இல்லை! அவன் தான் கடிச்சிட்டான்!
உனக்கு ஜலதோஷம் பிடிச்சு இருக்குனு சொல்றியே, மழையிலே நனைஞ்சியா என்ன?
இல்லை! அந்த பால்காரர் வீட்டு தண்ணி கலந்த பாலை குடிச்சுத் தொலைச்சிட்டேன்!
ஐந்து பாம்... ஐந்து பாம்
கருத்து: கடலூர் கன்னியப்பன்
உன்னுடைய முகத்தில் தவக்களை தெரியுதே, என்ன விஷயம்?
கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தான் ஒரு தவக்களையை விழுங்கினேன் அதான்!
அண்ணே! அந்தக் கரும்புக்கடைக்காரரை அப்படித் தூக்கி எறிஞ்சிட்டியே, என்ன விஷயம்?
கரும்பு விலை கேட்டேன்! யானை விலை சொன்னான்—அதான்!
செ

2 ஒரு மரத்துப்

அந்த வெள்ளை மாருதி கார் மலர் மகள் உயர்நிலைப் பள்ளி வாசலில் நின்ற போது, பள்ளிக்குள் வகுப்புக்கள் நடந்து கொண்டிருந்தன. காரை விட்டு இறங்கிய பவித்ரா வேகமாகத் தன் வகுப்புக்கு ஓடினாள்.

வகுப்பிலே ஆசிரியை எழில் வதனி கரும் பலகையிலே ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். ஆசிரியை திரும்பிப் பார்க்கும் வரை வகுப்புக்கு வெளியே நின்றபடி இருந்தாள். அவள் கண்கள் கரும்பலகையைக் கவனித்தன. குனிந்து எழுதிக் கொண்டிருந்த ஆசிரியையின் தலைக்கு மேலே கரும்பலகையில் தெரிந்த வாசகங்களைப் படித்தாள். அந்த வார்த்தைகள் அவளைக் குத்திக் காட்டுவது போல், அவளுக்கென்றே எழுதியதாகவே தோன்றியது பவித்ராவுக்கு.

'நேரம் தவறாமை என்பது ஒரு சிறந்த கொள்கை. இழந்து விட்ட மணித் துளிகளை இழுத்து வந்து நம் கையில் கொடுக்க யாராலும் முடியாது.'

தலைகுனிந்து நின்று விட்டாள் பவித்ரா. உடன்படாமலும் மாணவிகள் சிலர், 'ஆசிரியை இன்னும் வருகைப் பதிவேட்டைத் திறக்கவே யில்லை. நீ உள்ளே வந்து விடு' என்பது போல் பலவிதமாகச் சைகை காட்டினார்கள். புரிந்து கொள்ளாதவள் போலவே அமைதியாக நின்றிருந்தாள் பவித்ரா.

ஆசிரியை கரும் பலகையிலிருந்து கண்களைத் திருப்பியதும், வகுப்பு வாயிலிலே பவித்ரா நிற்பதைப் பார்த்து விட்டு, ''ஓ! வகுப்புத் தலைவியா? தலைவி என்றால் நேரத்தோடு வர வேண்டும் என்று கட்டாயமா என்ன?'' என்று குத்தலாகக் கேட்டார்.

''வந்து... வருகிற வழியில்...'' வார்த்தையை முடிக்கவில்லை...

ஆசிரியை கையைத் தூக்கி ''நிறுத்து! வழியில் ஆயிரம் நடக்கும். உனக்குப் பள்ளி வரும் நேரம் முக்கியம் இல்லையா? அதிலும் வகுப்பு மாணவத் தலைவி...! போன வாரம் தான் தலைமைப் பதவி... இந்த வாரமே தலைக்கனமா?'' என்று கேட்டுக் கொண்டே அருகே வந்தாள் ஆசிரியை.

அப்போதுதான் அவள் ஆடைகளும் நனைந்திருப்பதை அவர் பார்த்தார்.

''என்னம்மா இது, அலங்கோலம்?'' என்று ஆசிரியை கேட்டதற்குப் பவித்ரா பதில் சொல்லவில்லை. பின்னாலிருந்து ஏதோ ஒரு குரல் ஒலித்தது.

''தலைவிக்குக் குளிக்க நேரம் இருந்திருக்காது. காரிலேயே குளிச்சிட்டு வந்திருப்பாங்க...'' என்ற அந்தக் குரலுக்குப் பிறகு சில பெண்கள் சேர்ந்து சிரிப்பதையறிந்து சினத்தோடு அந்தப் பக்கம் பார்வையைச் செலுத்தினார் தமிழ் ஆசிரியை எழில் வதனி. உடனே வகுப்பு மௌன நிலையமாகி விட்டது.

''உள்ளே வா! ஏன் லேட்டு? சீருடை எல்லாம் ஏன் ஈரமாயிருக்கு?'' என்று கேட்டபடி தம் இருக்கையில் அமர்ந்தார் ஆசிரியை.

பவித்ரா தன் இடத்துக்குச் சென்று நின்றாள். ஆசிரியை அவளையே கவனித்துக் கொண்டிருந்தார். அவள் கண்கள் கலங்கியதையும் கண்டார்.

''சரி சரி... இனிமேல் நேரம் கழித்து வராதே. வகுப்புத் தலைவி நீ...! முதலில் நீதான் முன் மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும். நீயே ஒரு மாதிரியாக நடந்து கொண்டால், அப்புறம் மற்றவர்கள் பல மாதிரியாகத்தான் நடந்து கொள்

பூவை அமுதன்

பறவைகள்



வார்கள். சரி உட்கார்!'' என்றார் ஆசிரியை.

பவித்ரா இடத்தில் அமராமல் நின்று கொண்டேயிருந்தாள். மற்ற மாணவிகள் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''நான் காரணத்தைச் சொல்லிட றேனே, மேடம்'' என்றாள் பவித்ரா.

''என்ன சொல்லப் போறே...?'' என்று ஆசிரியை கேட்ட போது,

''காரு வழியிலே மக்கர் பண்ணி டிச்சின்னு சொல்லுவா. பெருமை தான்!'' என்று பழித்தாள் ஒரு மாணவி. அவள் சொன்னது ஆசிரி யைக்கும் கேட்டு விட்டது.

''ஏய்... திவ்யா! வாயை மூடிக் கிட்டுச் சும்மாயிரு! கோள் சொல் வது, குறை சொல்வது, உனக்கு வாடிக்கையாகி விட்டது'' என்று அவளை அதட்டி அடக்கினார் ஆசிரியை.

''நேரத்தோடு வந்திருப்பேன். வழி யில் ஒரு குழாயில் தண்ணீர் வீணா கக் கொட்டிக் கொண்டு இருந்தது. அதை நிறுத்தி விட்டு வருவதற்குள் நேரமாகி விட்டது'' என்று உண் மையை உரைத்தாள் பவித்ரா.

''சரி சரி.. நல்ல காரியத்தைத்தான் செய்திருக்கே. சில சமயம் இப்படி ஆகிறது உண்டுதான். குடி தண்ணீருக் குப் பஞ்சமான இந்தக் காலத்திலே குழாயிலே தண்ணீர் வீணாகக் கொட்டக் கூடாதுதான். நீ செய்த இந்த நல்ல காரியத்துக்காக, நேரம் கழித்து வந்ததைத் தாராளமாக மன்னிக்கலாம்'' என்றார் ஆசிரியை.

''நான் அஞ்சு நிமிஷம் லேட்டா வந்ததுக்கு எரிஞ்சி விழுந்தீங்களே டீச்சர்...? நான் மட்டும் என்ன வேண்டுமென்றா நேரம் கழித்து வந் தேன்?'' என்று எழுந்து நின்று கேட் டாள் ரம்யா.

''ஏய் ரம்யா... நீ உட்காருடி! தலைவி லேட்டா வரலாம்... நீயும் நானும்தான் வரக் கூடாது'' என்று அமர்ந்தபடியே முணுமுணுத்தாள் தினமும் தாமதமாகவே வரக்கூடிய தங்கமயில்.

''சரி சரி... தலைக்குத் தலை பேச ஆரம்பிச்சிடாதீங்க. அப்புறம் வகுப் புச் சந்தைக் கடையாக மாறிடும். மாணவிகளே! உங்களுக்குப் பொது வாக ஒன்றைச் சொல்கிறேன். யாரும் தெரிந்தே தவறு செய்யக் கூடாது. நல்லதைச் செய்வதில் நாட்டம் கொள்ள வேண்டும். அதற்குப் போட்டியும் போடலாம். ஆனால் பாராட்டுப் பெறுகிறவரைப் பார்த் துப் பொறுக்காமல் புழுங்கிக் கொண் டிருக்கக் கூடாது. அது ஆரோக்கிய மான பழக்கம் ஆகாது. உங்கள் பிஞ்சு நெஞ்சங்களிலே இப்படிப் பட்ட அழுக்குகளுக்கெல்லாம் இடம் கொடுக்காதீர்கள்'' என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினார் ஆசிரியை.

ஆசிரியை மறைமுகமாக யாரைச் சாடுகிறார் என்று எல்லோருக்குமே புரிந்தது. தங்கமும், ரம்யாவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விட்டுத் தலைகளைத் தாழ்த்திக் கொண்டார்கள்.

''அது சரி... வெள்ளிக் கிழமை மாலையிலே பள்ளித் திடலிலே... ஏதோ நடந்தது என்று கேள்விப் பட்டேனே... என்ன அது?'' என்று அதையும் பொதுவாகத்தான் கேட்டார் ஆசிரியை.

''அது உங்களுக்கும் தெரிந்து விட்டதா?'' என்று மெதுவாக எழுந்து கேட்டாள் பவித்ரா.

''நீதான் யாருக்கும் தெரியக் கூடாது என்று கூடச் சொன்னாயாமே!'' என்று அவளைக் கேட்டார் ஆசிரியை.

''ஆமாம் மேடம்! எதிர்பாராமல் எப்படியோ நடந்து விட்டது. சம்பந்தப்பட்டவள் தன் தவறையும் உணர்ந்து விட்டாள். அதை அதோடு விட்டு விட வேண்டும் என்றுதான் நான் கேட்டுக் கொண்டேன். ஆனால் அது உங்கள் காதுக்கும் எட்டி விட்டிருக்கிறதே!'' என்றாள் பவித்ரா.

அப்போது ஆசிரியையின் பார்வை மீனாவின் மீதும் வஹிதாவின் மீதும் திவ்யாவின் மீதும் மாறி மாறிப் பாய்ந்து கொண்டிருந்தது.

அவர்கள் தங்கள் இருக்கையில் நெளிந்து கொண்டிருப்பதைப் போல் தோன்றியது ஆசிரியைக்கு.

புரியாத மற்ற மாணவியர் என்னவோ ஏதோ என்று குழம்பிக் கொண்டிருந்தார்கள்.

''தலைவி பவித்ராவேதான் உங்களுக்குச் சொல்லியிருக்க வேண்டும்!'' என்றாள் திவ்யா.

''அவள்தான் லேட்டாக வந்திருக்கிறாளே... அவளுக்கும் மீனாவுக்கும் ஒரு பரிசைப் 'பிரேய'ரில் அறிவித்தாரே தலைமை ஆசிரியை. அது கூட பவித்ராவுக்கு இன்னமும் தெரியாதே'' என்றார் ஆசிரியை.

''என்ன பரிசு மேடம்? '' என்று ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டே எழுந்தாள் பவித்ரா.

''வெள்ளிக் கிழமை மாலை ஐந்தே கால் மணிக்கு நீங்கள் இருவரும் ஒரு விலையுயர்ந்த கைக் கடியாரத்தை மைதானத்தில் கண்டெடுத்து, தலைமை ஆசிரியையிடம் சேர்த்தீர்கள் இல்லையா? அதை, உரியவள் அடையாளம் சொல்லிப் பெற்றுக் கொண்டாள். அதற்காகத் தலைமை ஆசிரியை உங்கள் இருவரையும் 'அசெம்பிளி'யில் பாராட்டினார். பரிசுகள் வழங்கப் போவதாகவும் சொன்னார். அது இருக்கட்டும். அதற்கும் முன்னே அன்றைக்கு இந்த வகுப்பு மாணவிகள் சில பேருக்கு இடையே ஏதோ நடந்திருக்கு. என் கவனத்துக்கும் வந்திருக்கு. ஆனால் அது சரியான செய்தியாக இருக்க வேண்டும். அது நடந்த போது வகுப்புத் தலைவி பவித்ராவும் இன்னும் சில பேரும் இருந்திருக்கிறார்கள். அதனாலே... பவித்ரா... நீயே....''



''நான் சொல்லி விடுகிறேன் மேடம்!'' என்றாள் பவித்ரா.


''வேண்டாம் டீச்சர்!'' என்றாள் மீனா.

இருவருமே எஸ்தர் முகத்தை நோக்கினார்கள். எஸ்தர் மேரியோ ஆசிரியை முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். ஆசிரியையோ வஹிதா முகத்தையே கவனித்துக் கொண்டிருந்தார். வஹிதா மற்ற மாணவிகளைப் போல், என்ன விஷயமாக இருக்கும் என்று தனக்குள் குழம்பிக் கொண்டிருந்தாள்.

''இதை மீனாதான் சொல்ல வேண்டும். ஆனால் அவள் இதைச் சொல்ல மாட்டாள். இது மற்ற யாருக்கும் தெரியக் கூடாது என்பதுதான் அவள் வேண்டுகோள். இருந்தாலும் நம் தமிழ் ஆசிரியை அவர்கள் காதுக்கு எப்படியோ எட்டி விட்டது...'' என்று ஆரம்பித்தாள் பவித்ரா.

''அது எப்படி எட்டியது என்பதைப் பின்னால் நானே சொல்கிறேன். நீ நடந்ததைச் சொல்'' என்றார் ஆசிரியை.





''வெள்ளிக் கிழமை விளையாடி முடிந்ததும் நான், மீனா, எஸ்தர்மேரி, ரம்யா, திவ்யா, வஹிதா, வடிவழகி எல்லோரும் திடலின் மேற்குப் புறமிருக்கும் கலை மண்டபத்திலே சற்று நேரம் உட்கார்ந்தோம். திவ்யா 'ஜோக்' சொல்லிக்கிட்டிருந்தாள். வடிவழகிக்குத் தாங்க முடியாத சிரிப்பு. அவள்தான் 'ஆ'ன்னாலும் சிரிப்பாள், 'ஊ'ன்னாலும் சிரிப்பாளே! சிரித்துக் கொண்டே பின் கழுத்தில் கையை வைத்து அண்ணாந்து வாயைப் பிளந்தவள் அப்படியே அலறி விட்டாள்.

'ஆ! என் கோல்டு செயினைக் காணோமே!' என்று கூவினாள் வடிவு.

நாங்களும் அப்போதுதான் கவனித்தோம். எல்லோருமாகச் சேர்ந்து ஆடிய இடம், ஓடிய இடம் எல்லாம் தேடினோம். கிடைக்கவில்லை. தனித் தனியாகப் பிரிந்து ஆளுக்கொரு பக்கம் தேடினோம். அப்போது வஹிதா எங்கள் கூட இல்லை. நாங்கள் கலை மண்டபத்துக்கு வந்து உட்காருவதற்கு முன்பாகவே அவள் போய் விட்டாள் தனியாக. எல்லோரையும் விட அவள் அதிக தூரம் நடக்கணும், அவள் வீட்டுக்கு! அதனால் தான்!

'மூணு சவரன் சங்கிலிடி. பத்தாயிரம் ரூபாய்க்கு மேலே இருக்குமே. அம்மா மொத்து மொத்து என்று மொத்துவா. அப்பா கத்து கத்துன்னு கத்துவார்' என்று கண்ணீர் விட்டு அழுதாள் வடிவழகி.

'விலையுயர்ந்த நகைகளை ஸ்கூலுக்கு ஏண்டி போட்டுக்கிட்டு வந்தே? நான் இத்தனை நாளும் அவ்வளவு பெரிய சங்கிலியைக் கில்ட்டு நகைன்னுதான் நினைச்சுக்கிட்டிருந்தேன். ஏன்னா என் காதிலேயிருக்கிற வளையம் கில்ட்டுதான்!'' என்றாள் திவ்யா.

எவ்வளவு நேரம் தேடியும் கிடைக்கவில்லை. வடிவழகி அழுவதையும் எங்களால் நிறுத்த முடியவில்லை. அப்போது திடீரென்று, எஸ்தர் ஒவ்வொருவர் பையாகப் பிடுங்கி, புத்தகங்களைக் கொட்டி ஆராயத் தொடங்கினாள். அதுவும் ஒரு வகையில் நல்லதுதான் என்று எல்லோருக்குமே தோன்றியது.

பையை ஆராய்ந்து கொண்டிருந்த எஸ்தர் மேரி, 'எனக்கு ஒரு சந்தேகம்டி' என்று ஆரம்பித்தாள்.

'என்ன?' என்று ஏக காலத்தில் எல்லோரும் அவளைக் கேட்டோம்.

'வஹிதா முன்னதாகவே போய் விட்டாளே!' என்றாள் எஸ்தர்.

'வடிவழகியின் சங்கிலி அறுந்த விஷயமே அவளுக்குத் தெரியாது இல்லே?' என்றேன் நான்.

'ஒருவேளை... அறுந்து கீழே விழுந்து கிடந்த செயினை அவள்தான் எடுத்துக் கொண்டு போயிருப்பாளோ?' என்ற ஐயத்தைக் கிளப்பினாள் எஸ்தர்.

மீனா அதை வன்மையாக மறுத்தாள். வஹிதா மீது அபாண்டமாகப் பழி போட வேண்டாம் என்று எரித்து விடுபவளைப் போல எஸ்தரைப் பார்த்தாள் மீனா.

மீனாவுக்கு அவ்வளவு கோபம் வந்து நான் பார்த்ததே இல்லை. போன வருஷம் கூட அவளும் நானும் ஒரே வகுப்பிலேதான் படிச்சோம்'' என்று கூறி விட்டுச் சற்று நிறுத்தினாள் பவித்ரா. பேசிக் கொண்டே அவள் மீனாவைப் பார்த்த போது, மேலே ஏதும் சொல்ல வேண்டாம் என்று அவள் சைகையாலேயே கெஞ்சிக் கேட்டுக் கொண்டதைப் புரிந்து கொண்டு தான் தன் பேச்சை நிறுத்தினாள்.

ஆசிரியையும் மீனா நடத்திக் கொண்டிருந்த மௌன நாடகத்தை அவ்வப்போது கவனித்துக் கொண்டு தான் இருந்தார்.

உலகிலேயே மிகச்சிறிய தொகைக்கான கரன்சி நோட்டு ஃபிஜி நாட்டில் உள்ள 'ஒரு பென்னி' நோட்டுதான். அளவிலும் இதுமிகச் சிறியது. அகலம் இரண்டரை அங்குலம், உயரம் ஒன்றரை அங்குல அளவு தான். பஸ் டிக்கட் அளவுதான் இருக்கும். இரண்டாம் உலகப் போரின் ஆரம்ப நாட்களில் இந்த ஒரு பென்னி நோட்டுக்கள் புழக்கத்திற்கு வந்தன.

— மு. திருநாவுக்கரசு, மொரப்பூர்.

''மீதி விஷயத்தை மீனா, நீ சொல்லப் போகிறாயா? அல்லது பவித்ராவே தொடர்ந்து சொல்லட்டுமா...? இல்லே... எஸ்தரையே சொல்ல வைக்கட்டுமா?'' என்று விழிகளை உருட்டி, ஆசிரியை உறுதியாகக் கேட்ட போது மீனாவால் ஏதும் பேச முடியவில்லை.

அவள் ஏன் மேலே பேச விடாமல் தடுக்கிறாள் என்பது பவித்ராவுக்குப் புரிந்தது. மற்ற மாணவிகளுக்குப் புரியவில்லை. அவர்கள் எல்லோருமே விஷயம் முழுவதையும் சீக்கிரமாகத் தெரிந்து கொள்வதில் ஏராளமான ஆர்வம் காட்டி, காதுகளைத் தீட்டி வைத்துக் கொண்டிருந்தார்கள்.

''எங்கள் பைகளையெல்லாம் சோதனை போட்ட எஸ்தரின் பை, சோதனையிடப்படாமல் அவள் தோளிலேயே தொங்கிக் கொண்டிருப்பதைக் கவனித்து விட்டாள் மீனா. அவள் கோபம் கூடி விட்டது.

''ஏம்மா எஸ்தர்மேரி! எங்கள் பேரிலேயும் ஏதோ கொஞ்சம் சந்தேகம் இருக்கவேதானே நீ சோதனை போட்டாய்? அது போல உன் பேரிலேயும் எனக்குக் கொஞ்சம் சந்தேகம்மா. எந்தப் புற்றிலே எந்தப் பாம்பு இருக்குமோ, யார் கண்டார்கள்?'' என்று கூறிக் கொண்டே, வெடுக்கென்று அவள் பையைப் பிடுங்கிக் கொண்டாள் மீனா.

எஸ்தர் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்த போதும், மீனா விடவில்லை. புத்தகங்களை எல்லாம் கொட்டினாள். உள்ளேயிருந்த டிபன் பாக்ஸும் கீழே விழுந்தது. விழுந்தவுடனே அது வாயைப் பிளந்தது. அதற்குள்ளே வடிவழகியின் செயின் இருந்தது!''

''அது எப்படி... டிபன் பாக்ஸுக்குள்ளே போச்சு?'' என்று மூலையிலேயிருந்து ஒரு குரல் கிசுகிசுத்தது.

தனியாகத் தேடிய போது, எஸ்தர் மேரிக்கு அந்த அறுந்த செயின் கிடைத்திருக்கிறது. கொஞ்சத்திலே அவள் புத்தி கோணலாகிப் போய் விட்டது. ஏன்தான் அப்படிச் செய்தாளோ...? அதை யாருக்கும் தெரியாமல் ரகசியமாக எடுத்து, தன் டிபன் பாத்திரத்தில் வைத்து மூடிக் கொண்டாள். மீனாவுக்கு எப்படித்தான் அப்படி ஒரு யோசனை வந்ததோ! மொத்தத்தில் வடிவழகிக்குப் போன உயிர் திரும்பி வந்ததைப் போல செயின் கிடைத்தது. அதோடு என்றைக்கும் மறக்க முடியாதபடி ஒரு பாடமும் கிடைத்தது'' என்று முடித்தாள் பவித்ரா.

''விலையுயர்ந்த நகைகளை மாட்டிக்கிட்டுப் பள்ளிக்கூடம் வரவும் கூடாது. அதை மறந்து விளையாடித் தொலைக்கவும் கூடாது. அநியாயமாக யார் பேரிலேயும் பழி போடவும் கூடாது. மற்றவர்கள் பொருள் மீது ஆசைப்படவும் கூடாது...'' என்று ஆசிரியை அடுக்கிக் கொண்டு போன போது, ஒரு மாணவி எழுந்து நின்றாள்.

''எஸ்தர்தான் அதை எடுத்துத் தன் பாத்திரத்தில் வைத்துக் கொண்டாளா... அல்லது... யாராவது...'' என்று அவள் நீட்டிக் கேட்டு முடிக்கு முன், ஆசிரியையே தொடர்ந்தார். ''இதே மாதிரிதான், எசகு பிசகாகச் சிக்கிக் கொண்ட எஸ்தர் மேரியும் சொல்லிச் சமாளிக்கப் பார்த்திருக்கிறாள். மீனா விடவில்லை. ஏனென்றால் மீனாவுக்கு வஹிதாவின் குடும்பத்தைப் பற்றி நன்றாகத் தெரியும். அண்மையில்தான் நடந்தது ஒரு சம்பவம்! வஹிதாவின் அப்பா டாக்ஸி டிரைவர். அவர் குடிகாரர் கூட. ஒரு நாள் ராத்திரி டாக்ஸியோடு வீட்டுக்கு வந்த போது, வண்டியில் யாரோ ஒரு சிறிய சூட் கேஸை மறந்து விட்டுப் போயிருப்பதைப் பார்த்தார். உள்ளே எடுத்துக் கொண்டு ஓடினார். அதைத்



திறக்க முயன்றார். பார்த்துக் கொண்டிருந்த வஹிதா தடுத்துப் பார்த்தாள். அவர் கேட்கவில்லை. எப்படியோ பூட்டில் கம்பியை விட்டு ஆட்டித் திறந்து விட்டார்.

பார்த்தால் அவ்வளவும் பணம்...! நிறைய நகைகள்! குடி வெறியில் அவர் அந்தப் பெட்டியோடு எழுந்து கூத்தாடினார். மொத்தத்தையும் தன் தலை மீது கவிழ்த்துக் கொண்டு பொத்தென்று கீழே விழுந்தார்.

வஹிதா எல்லாவற்றையும் பொறுக்கி எடுத்துச் சூட்கேஸில் வைத்து மூடிய போது, அவள் தந்தை அன்வர் உசேன் கண்களை மூடிக் கொண்டிருந்தார். பயங்கரமான குறட்டையோடு அவர் தூங்கிக் கொண்டிருந்த போது, வஹிதா தன் அம்மாவைக் கூட்டிக் கொண்டு, ஸ்டேஷனுக்கு ஓடிச் சென்று அதை அங்கே ஒப்படைத்து விட்டுத் திரும்பினாள். அதற்காக வஹிதாவைக் கமிஷனரே அழைத்துப் பாராட்டியிருக்கிறார். அந்த விஷயத்தைக் கூட யாரிடமும் சொல்லித் தம்பட்டம் அடித்துக் கொள்ளவில்லை. நெருங்கிய சிநேகிதி மீனாவிடம் மட்டுமே சொல்லியிருக்கிறாள். அதை மீனா எனக்கு மட்டுமே சொன்னாள். இப்போது அதை நான் உங்களுக்கு மட்டுமே சொன்னேன்" என்று அவள் உட்கார்ந்த போது, எழுந்த சிரிப்பலைகளிலே அந்த வகுப்பே மிதந்தது.

"இதை எல்லாம் உங்களுக்கு யார் டீச்சர் சொன்னது?" என்று மறக்காமல் எழுந்து நின்று கேட்டாள் ஒரு மாணவி.

"எஸ்தர் மேரியே இதையெல்லாம் காலையில் என்னிடம் சொன்னாள். அவள் கர்த்தரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதோடு அமையாமல் கல்வி நிலையத்தில் உள்ள உங்களிடமும் மன்னிப்பை விரும்புகிறாள். இப்படித்தான்... சில சமயங்களில் எப்படியோ புத்தி மாறி விடுகிறது...! ஆனால் உணர்ந்து திருந்துவதே உயர்ந்த உள்ளம்" என்றார் ஆசிரியை.

அதுவரை ஏதோ ஒரு கதையைப் போலக் கேட்டுக் கொண்டிருந்த வஹிதா, எழுந்து நின்று மீனாவை நன்றியோடு பார்த்தாள்.

"டீச்சர்... எனக்கு எதுவுமே இதுக்கு முன்னே தெரியாது டீச்சர். மீனா கூட என்னிடம் ஏதும் இதைப் பற்றிப் பேசவே இல்லை" என்றாள் வஹிதா.


"என்னுடைய மாணவிகள் எல்லோருமே நல்லவர்கள்தாம். நல்ல வேளை... எஸ்தர் வெளியே ஹாஸ்டலில் தங்கிப் படிக்கிறாள். இந்த விஷயம் அவள் வீட்டாருக்குத் தெரியாது. இதை இப்போதே மறந்து விடுங்கள்... மற்ற வகுப்பிலே யாருக்கும் தெரிய வேண்டாம்" என்று ஆசிரியை கேட்டுக் கொண்ட போது எஸ்தர் விக்கி விக்கி அழுதாள். வஹிதா அன்போடு அவள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

"சரி, நாளைக்கு இலக்கிய விழாவிலே நம் வகுப்பு நாடகம் இருக்கே.. எஜமானி மீனா... வேலைக்காரி பவித்ரா... மியூசிக் டீச்சர் எஸ்தர் தயாராயிருக்கிறீர்களா?" என்று சூழ்நிலையை மாற்றப் பேச்சைத் திருப்பினார் ஆசிரியை. அப்போது பள்ளிக்கூடப் பியூன் வந்து, "தமிழம்மா, இந்த வகுப்பிலே லீடர் பவித்ராவாமே...எஸ்தர்மேரியாமே...ரெண்டு பேரையும் எட்மாஸ்டர் அம்மா கூப்பிடறாங்க" என்றார்.

இருவரும் எழுந்து நின்றார்கள். ஆசிரியையும் எழுந்து நின்றார்.


பரிசு விஷயமாக இருந்தால் பவித்ராவை மட்டும்தானே அழைத்திருப்பார்? ஒருவேளை... இது தங்கச் சங்கிலி விஷயமாக இருக்குமோ? என்ற ஐயம் எல்லோரையும் குழப்பிக் கொண்டிருந்தது.


(தொடரும்)




ஸ்ரீ கிருஷ்ண துலாபாரம்


கதை: ஆனந்தி
படம்: வினு




கிருஷ்ணர் அதை ருக்மிணிக்குக் கொடுத்தார்...
இந்தா, இந்த மலர் உன் அழகுக்கு அழகு செய்யும்!
கலகக்கார நாரதர் சத்தியபாமா வீட்டுக்குச் சென்றார்...
நலந்தானா?
கிருஷ்ணர், மற்ற எல்லாரையும் விட என்னிடம் தான் அதிக அன்பு வைத்திருக்கிறார்! எனக்கு என்ன குறை?
இவ்வளவு நம்பிக்கையோடு பேசுகிறாயே... உனக்கு விஷயம் தெரியாது போலிருக்கிறது....
ஏன்? என்ன நடந்தது?
இந்திரன் தந்த பாரிஜாத மலரை நான் கண்ணனுக்கு அளித்தேன்... அதை அவர் உடனே ருக்மிணிக்குக் கொடுத்து விட்டார்...!
ஆ! என் சுவாமிக்கு என்னைவிட ருக்மிணி முக்கியமானவளாகி விட்டாளா!
நாரதர் விடை பெற்றுப் போய் விட்டார். கண்ணன் பாமாவைக் காண வந்த போது...
என்ன பாமா? உடம்புக்கு என்ன?
ஒன்றுமில்லை!



அப்படியானால் மனம்தான் சரியில்லை என்று அர்த்தம்! என்ன குறை? சொல், உடனே தீர்க்கிறேன்!...
பாரிஜாத மலரை எனக்குத் தந்தீர்களா?.....
பூ! இவ்வளவு தானா? மலர் என்ன, மரத்தையே உனக்குத் தருவதாக இருக்கிறேனே!
அப்படியா!
ஆமாம்! அதற்கு முன்பு நாம் ப்ராக்ஜோதிஷபுரம் செல்கிறோம்.
எதற்கு?
அங்கே நரகாசுரன் அட்டகாசம் செய்துவருகிறான். அவனை வெல்ல நீதான் எனக்கு உதவி செய்யவேண்டும். என்னால் தனியாக ஒன்றும் செய்ய முடியாது!
தங்களுக்கு உதவுவது என் பாக்கியம்... ஆனால் யார் இந்த நரகாசுரன்?



மகாவிஷ்ணு வராக அவதாரம் எடுத்தபோது அவருக்கும் பூமிதேவிக்கும் பிறந்த பிள்ளை அவன். மகாபலசாலி. மமதை காரணமாக எல்லோரையும் கொடுமைப்படுத்துகிறான்...
கண்ணனும் சத்யபாமாவும் பிராக்ஜோதிஷபுரத்தை அடைந்தனர்....
யாரடா அது? ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு வந்து என்னை யுத்தத்துக்குக் கூப்பிடுகிறவன்?
நரகாசுரா! நீ சிறை வைத்திருக்கும் பெண்களை விடுவித்து விடு! இந்திரனுடைய பொருள்களைக் கூடக் கொள்ளையடித்து வந்து வைத்திருக்கிறாயே, திருப்பிக் கொடுத்து விடு! உன்னை மன்னிக்கிறேன்!
நரகாசுரன் கோபமுற்று கண்ணனைத் தாக்கினான்...
அற்ப மானிடனே! எனக்குப் புத்தி சொல்ல நீ யாரடா!
வெகுநேரம் யுத்தம் நடந்தது. சத்தியபாமா சாமர்த்தியமாகத் தேரைச் செலுத்தினாள்..
என்னை மன்னிப்பதற்கு முன் நீ மரணத்தைத் தழுவுவாய்!


சுவாமி! என்ன தயக்கம்? எதிரியை அடித்து வீழ்த்துங்கள்!
முடியவில்லையே, பாமா!
பகவான் தோல்வி அடைவதைச் சகிக்க முடியாத பாமா... வில், அம்பு, எடுத்து...
என்னை ஆசீர்வதியுங்கள்!
பாமா எய்த பாணம், நரகாசுரன் மார்பில் தைத்து வீழ்த்தது!
ஹா!
தேவர்கள் புஷ்பமாரி பெய்தனர்...
அம்மா! என்னை அடித்த நீங்கள், என் தாய் பூமாதேவியாகத்தான் இருக்க வேண்டும்!
வேறு யாராலும் என்னை வீழ்த்த முடியாது....
அப்போது கண்ணன்...
பாமா! நரகாசுரன் கூறுவது உண்மை. அப்படி வரம் பெற்றிருக்கிறான். அதனால்தான் உன்னை அழைத்து வந்தேன்! என் வராக அவதார காலத்தில் பூமிதேவி நீயே!


பாமா
மனமிரங்கி...
குழந்தாய்! உனக்கு என்ன வரம் வேண்டும்?
இன்று எனக்கு அறிவு வந்ததும், பகவான் தரிசனமும் கிடைத்ததும், அதனால்....
... இந்த நாளை மக்கள் விளக்கேற்றித் தீபாவளியாகக் கொண்டாட வேண்டும்... புத்தாடை அணிந்து சந்தோஷமாக இருக்க வேண்டும்!
அப்படியே ஆகட்டும்.
நரகாசுரன் ஜோதிவடிவமாக ஸ்ரீ கிருஷ்ணனுடன் ஒன்று கலந்தான்...
நரகாசுரன் மகன் பகதத்தனுக்குப் பட்டாபிஷேகம் செய்தார் கிருஷ்ணன்.
ஜய விஜயீ பவ!
பகதத்தன் கிருஷ்ணரையும் பாமாவையும் வணங்கினான்.
பகதத்தா!... உன் தகப்பனார் சிறைப்படுத்தியிருந்த நல்லோரை விடுவித்து விடு. இந்திரனிடம் கவர்ந்த பொருள்களை என்னிடம் கொடுத்து விடு....


இந்திரனுடைய செல்வத்துடன் கிருஷ்ணரும் பாமாவும் தேவலோகத்தை அடைந்தனர். தேவர்கள் உபசரிக்க... இந்திரன்...
நரகாசுரனை வதம் செய்து எங்களைக் காப்பாற்றினீர்கள்....
நாரதர்கலகம் நன்மையில் முடிந்தது!
இந்திரா! நரகாசுரன் கவர்ந்து சென்ற உன் செல்வத்தைத் திரும்பக்கொண்டு வந்து சேர்த்து விட்டேன்.
நன்றி கூறி உபசரித்து அவர்களை வழியனுப்பினார் இந்திரன்.
பாரிஜாத மரத்தைப் பெற்றுத் தருவதாகச் சொன்னீர்களே?
இந்திரனை நான் எப்படி கேட்பேன்? அவனாகக் கொடுத்திருக்க வேண்டும்!
துவாரகை திரும்பியதும் கண்ணன் நாரதரை அழைத்து...
முனிவரே! இந்திரனிடம் சென்று பாரிஜாத மரத்தை நான் கேட்பதாகச் சொல்லுங்கள்!
அவ்வாறே நாரதர் தூது செல்ல...
அழகுதான்! தேவர்களில் உள்ள மரத்தைப் பூவுலகுக்கு அனுப்புவதாவது?
கண்ணன் கேட்டு இல்லை என்கிறாய்! விபரீதம் தான்!



நாரதர் திரும்பி வந்து நடந்ததைக் கூற, கிருஷ்ணர் பொங்கி எழுந்தார்...
இந்திரனுடைய அகம்பாவத்தை அடக்கியே ஆக வேண்டும்!
கண்ணனுக்கும் இந்திரனுக்கும் இடையில் பெரும் போர் நடந்தது...
நாரதர் மூலம் காசியபமுனிவர் விவரம் அறிந்தார்...
உங்கள் பிள்ளைகள் ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டுக் கொள்கிறார்களே, தடுக்கக் கூடாதா?
ஓடோடி வந்தார் காசியபர்....
நிறுத்துங்கள்! கிருஷ்ணா! உன் அண்ணன் மீது பாணத்தைப் போடாதே!
இந்திரா! கிருஷ்ணர் யாரென்று உனக்குத் தெரியாதா? வாமனாவதாரம் செய்து உனக்கு இந்திர பதவி கிடைக்கச் செய்த மகாவிஷ்ணுவே அல்லவா!



இந்திரன் தந்தையை வணங்கி...
முன்பு என் தம்பியாக அவதரித்து என்னைக் காத்தவர், இன்று கண்ணனாக அவதரித்திருப்பதை அறியாமல் போனேன்.
பாரிஜாத மரத்தை உடனே துவாரகைக்கு அனுப்புகிறேன்.
பாமாவின் இல்லத்தில் பாரிஜாத மரம் நாட்டு விழா...
இங்கேதான் நட வேண்டுமா...?
ஆமாம்... ருக்மிணியின் வீட்டுக்குப் பக்கத்தில் அவள் பார்வையில் படும் படி இருக்கட்டும்!
பாமா மரத்துக்குத் தன் கையாலேயே தண்ணீர் ஊற்றினாள்...
நான் எவ்வளவு பாக்கியசாலி! மலர்தான் கேட்டேன்; மரமே கிடைத்து விட்டது!



சில தினங்கள் சென்று...
கிளைகளில் மொட்டு கட்டி விட்டது; நாளை நிறைய மலர்கள் பூக்கும். ருக்மிணிக்குக் காட்டுகிறேன்!
மறுநாள் காலை...
என்ன அநியாயம்! மரம் இங்கு இருக்க, மலர்களெல்லாம் அங்கே உதிர்கிறதே!
கண்ணன் பாமாவைக் காண வந்த போது...
பாமா! இன்னும் என்ன கோபம்? மரம்தான் கிடைத்துவிட்டதே!
என்னை ஏமாற்றி, மலர்களெல்லாம் ருக்மிணிக்குச் சேரும்படி செய்து விட்டீர்களே!
நீதானே ருக்மிணி வீட்டுக்குப் பக்கத்தில் மரத்தை நட வேண்டும் என்றாய்...?
என்னைக் குறை சொல்வதே உங்கள் வழக்கம்!
போனால் போகட்டும்! ருக்மிணி வீட்டுக்குப் போய் வரலாம், வா!


ருக்மிணி இருவரையும் வரவேற்று, ஊஞ்சலில் அமரச் செய்தாள்.
ருக்மிணி! நீ பாரிஜாத மலர்களைச் சூடிக்கொள்ள வில்லையா?
இல்லை பிரபு! தங்கள் மார்பில் தவழ்வதைப் பார்ப்பதே எனக்கு மகிழ்ச்சி!
பாமா வெட்கம் அடைந்து....
கண்ணா! நான் அறியாமல் செய்த பிழைகளை மன்னியுங்கள்...
மலர்களை இருவரும் பகிர்ந்து கொண்டு சந்தோஷமாயிருங்கள்.
ஆயினும் பாமாவின் கர்வம் அடங்கவில்லை... ஒரு நாள்...
நாரதரே! பகவானுடைய எடைக்குச் சமமான பொன்னைத் துலாபாரமாக நிறுத்துத் தானம் செய்ய விரும்புகிறேன்! ஏற்றுக்கொள்ள வேண்டும்.
நாரதர் தந்திரமாக...
எனக்கு எதற்கு அம்மா பொன்னும் பொருளும்?... ஆனாலும் உன்னுடைய திருப்திக்காக ஏற்றுக் கொள்கிறேன்!



ஸ்ரீ கிருஷ்ண துலாபாரம்...
இதென்ன சோதனை! என்னுடைய நகைகளையும் தங்கப் பாத்திரங்களையும் பொற்காசுகளையும் வைத்தும் தட்டு இறங்கவில்லையே?
தான் அணிந்திருந்த நகைகளையும் கழற்றி வைத்தாள் பாமா....
இது தான் கடைசி பொன்னாபரணம்!
நான் இவ்வளவு கனமா?
பாமா, ருக்மிணி வீட்டுக்கு ஓடினாள்...
உன் நகைகளைக் கடனாகக் கொடு! என்னுடைய அத்தனை நகைகளை வைத்தும் தராசுத் தட்டு இறங்கவில்லை...
ருக்மிணி, தான் பூஜித்த துளசிச் செடியிலிருந்து சில இலைகளைக் கிள்ளிக் கொண்டாள்...
பகவானை நீ இலேசானவர் என்று நினைத்தாயா?... வா போகலாம்.
பக்தியுடன் துளசி தளங்களைத் தராசுத் தட்டில் வைத்தாள் ருக்மிணி. தராசு நேராயிற்று...
சுவாமி! அகில புவனங்களை உள்ளடக்கிய உங்களை எடை போட முடியுமா? பாமாவை சோதித்தது போதும். சமமாக வேண்டும்!


இவ்வளவுக்கும் பிறகும் பாமாவின் அகம்பாவம் குறையவில்லை... ஒரு நாள் கண்ணன்...
நாரதரே! பாமாவுக்குத் தன் அழகைப் பற்றிய கர்வம்... அண்ணா பலராமனுக்குத் தன் பலத்தைப் பற்றிய கர்வம்....
...இவர்களின் கர்வத்தைப் போக்க நீங்கள்தான் உதவ வேண்டும்...
கிருஷ்ண பகவானாகிய நீங்களே என் உதவியைக் கோரும் போது... மறுப்பேனா?
நாரதருக்கும் கர்வம் இருப்பதை உணர்ந்து, அதையும் அடக்கத் தீர்மானித்தார் கிருஷ்ணர்...
நீங்கள் தீர்த்த யாத்திரை செய்ய வேண்டும் என்றீர்களே... முதலில் அதை முடித்துக் கொண்டு வந்து விடுங்கள்...
அனுமனிடம் போனால் மிகச் சுலபமாகத் தீர்த்த யாத்திரையை முடித்துத் தருவார்...
அப்படியா? இதோ கிளம்புகிறேன்!...
நாரதர், அனுமனிருக்குமிடம் சென்று...
ராம ராம ராம ராமராம்!
ஆஹா! அமுதமான ராமநாமத்தைச் சொன்ன உமக்குத் தீர்த்த யாத்திரை செய்து வைக்கிறேன்!


நாரதரை வாயில் சுற்றிக் கொண்டு ஆகாயத்தில் பாய்ந்தார் அனுமார்...
ஆ! இதென்ன விபரீதம்! பயமாயிருக்கே... ...!
இது தெற்குக் கடல்! மூழ்கி எழுந்தாச்சா?
இது பொதிகை மலையில் குற்றால அருவி.. குளிச்சாச்சா?
பாரதம் முழுதும் புண்ணிய தீர்த்தங்களில் நாரதரை முக்கி எடுத்து அனுப்பினார் அனுமார்...
இது கங்கை...
நாரதர் கண்ணனிடம் திரும்பி...
பரந்தாமா! நல்ல ஆசாமியிடம் அனுப்பி வைத்தீர்! திணறித் திக்கு முக்காடிப் போனேன்! என் கர்வம் அடங்கியது!



அப்போது அங்கு பலராமர் வர...
அது சரி, அனுமானை இங்கு அழைத்து வரச் சொன்னேனே?
'அது யார், கிருஷ்ணன்? நான் வரமாட்டேன்' என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டார்! அவர் ராமருக்கு மட்டும்தான் கட்டுப்படுவாராம்!
பலராமர் கோபம் கொண்டு...
கிருஷ்ணரைத் தெரியாதவன், மதிக்காதவன் துவாரகையில் இருக்கிறானா? அந்தக் குரங்கைக் கட்டி இழுத்து வருகிறேன்!
ஆம் அண்ணா! நீ பெரிய பலசாலி ஆயிற்றே, உன்னால் முடியாதா!
பலராமர் அனுமாரிடம் சென்று...
ஏய், குரங்கே! கிருஷ்ணர் அழைத்தால் உடனே வர வேண்டியது தானே?
யாரடா நீ! மரியாதை தெரியாத பயல்?
பலராமன்!
ஆ! என் ராமபிரானைவிட பலசாலி உண்டா, என்ன? உன் பெயரை மாற்றிக் கொள்!
பலராமர் திரும்பி வந்து...
கிருஷ்ணா! என்னைத் தள்ளாடி விழும்படி அனுமன் அடித்து விட்டான். என்னை விடப் பலசாலியை இன்று கண்டேன். என் கர்வம் அடங்கியது!


பாமாவுக்குப் பாடம் கற்பிக்கக் கண்ணன் திருவுளம் கொண்டு...
நாரதரே! ஆஞ்சநேயரிடம் ஸ்ரீராமர் அழைப்பதாகச் சொல்லும். ஓடோடி வருவார்!
அவர் சென்றதும் கண்ணன்...
பாமா! ருக்மிணி! சீக்கிரம் சீதை போல அலங்காரம் செய்து கொண்டு வாருங்கள்!
பாமா சர்வாலங்காரங் களுடனும் ருக்மிணி எளிமை யாகவும் வந்தனர்...
பேஷ்! உங்களில் யாரை சீதை என்று அனுமார் வணங்குகிறாரோ, பார்ப்போம்!
கண்ணன் கணப் போதில் ராமராக உருமாற அனுமார் வந்ததும் முதலில் ருக்மிணியை வணங்கினார்...
ஜெய் சீதா ராம்! அன்னையே ஆசீர்வதியுங்கள்...
பாமாவின் கர்வம் அடங்கியது. ராமர் மகாவிஷ்ணு வடிவில் தோன்றி...
ஆஞ்சநேயா! வாக்களித்தபடி உனக்கு இந்தத் துவாபர யுகத்திலும் தரிசனம் தந்தேன்!
சுவாமி, எனக்குப் புத்தி வந்தது! நீங்களே ராமர்! நீங்களே கிருஷ்ணர்! நீங்களே பரந்தாமனான ஹரி! ராம கோவிந்த ஹரி!

மூலம் :
ஹென்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்ஸன்

3 நாய்களும் ஒரு தீப்பெட்டியும்

தமிழில்: எஸ் சித்ரா



போர் முடிந்து அந்த இராணுவ வீரன் கம்பீர நடை போட்டு அந்தக் கிராமத்தை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

வழியில் பட்டுப் போயிருந்த ஒரு மரத்தின் பக்கத்தில் கிழவி ஒருத்தி நின்று கொண்டிருந்தாள். அவள் ராட்சஸி போன்ற அகோரமான தோற்றத்தில் இருந்தாள்.

அவள் அந்த வீரனைப்பார்த்து ''மகனே! எவ்வளவு அழகான உடையெல்லாம் தரித்திருக்கிறாய்! கத்தியுடன் இருக்கும் நீ ஒரு கம்பீரமான வீரனாகத் தெரிகிறாய். உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. எவ்வளவு தூக்க முடியுமோ அவ்வளவு செல்வத்தை உனக்குக் கொடுக்க ஆசைப்படறேன்,'' என்றாள்.

''ரொம்ப சந்தோஷம். நன்றி. நான் என்ன செய்ய வேண்டும்?'' என்றான் அவன்.

''அதோ ஒரு பெரிய மரம் தெரிகிறது பார். அங்கே போ. அதிலே ஒரு ஆள் நுழைகிற அளவுள்ள பொந்து இருக்கும். அதிலே நுழைந்து உள்ளே போ. உன்னை ஒரு கயிற்றில் கட்டி இறக்குகிறேன். அப்போதுதான் உனக்கு வெளியே வரும்போது சுலபமாய் இருக்கும். என்ன?'' என்றாள் கிழவி.

''அது சரி. அங்கே போய் நான் என்ன


செய்யட்டும் பாட்டி?'' என்று வீரன் கேட்டான்.

''அங்கேதான் உனக்குத் தேவையான செல்வமே இருக்கிறது. கவனமாய் கேள். நீ அந்த பொந்தின் கீழே போனதும் ஒரு பெரிய அறையைப் பார்ப்பாய். அது நிறைய நூற்றுக் கணக்கான விளக்குகள் எரிந்து பிரகாசமாய் இருக்கும். சாவியைத் திருப்பி முதல் கதவு வழியாக உள்ளே நுழைந்தால் ஒரு பெரிய பெட்டி இருக்கும். அதன் மேலே ஒரு நாய் உட்கார்ந்திருக்கும். அந்த நாய்க்குத் தட்டுப் போன்ற பெரிய பெரிய கண்கள் இருக்கும். அதைப் பார்த்து பயப்படாதே. இந்தா, இந்த நீலத் துணிகளைக் கையில் வைத்துக் கொள். அந்த நாயின்கிட்டே போய் இந்த நீலத் துணியைப் போட்டு எப்படியாவது அந்த நாயை இதன் மேலே உட்கார வைத்து விடு, நாய் அசையாது. அப்புறம் பயப்படாமல் நீ அந்தப் பெட்டியைத் திற. அதனுள் ஏராளமாய்ச் செம்புக் காசுகள் இருக்கும். வேண்டிய அளவு எடுத்துக் கொள்,'' என்று செம்புக் காசுகளைப் பெறுவதற்கான வழியைச் சொன்னாள்.

''உனக்கு வெள்ளிக் காசுகள் வேண்டுமானால், இரண்டாவது கதவைத் திறந்து அடுத்த அறைக்குப் போ. அங்கேயும் முன்போலவே பெரிய பெட்டியும் அதன் மேலே நாயையும் பார்ப்பாய். இந்த நாயின் கண்கள் பெரிய பெரிய சக்கரம் போல இருக்கும். பின்னடையாதே. நான் தந்த நீலத் துணியைப் போட்டு அதன் மேலே இந்த நாயையும் சாமர்த்தியமாய் உட்கார வைத்து விடு. நாய் கப்சிப். பெட்டியைத் திறந்தால் நிறைய வெள்ளிக் காசுகள் இருக்கும். உனக்குத் தேவையான அளவு எடுத்துக் கொள்,'' என்று கூறினாள்.

''மூன்றாவது அறையில் என்ன இருக்கும்?'' என்று கேட்டான் ராணுவ வீரன்.

''மூன்றாவது அறையில் உனக்குத் தங்கக் காசுகள் கிடைக்கும். பெரிய பெட்டி. அதற்குத் தகுந்தபடி அதன் மேல் இருக்கும் நாயும் பெரிய நாய். இந்த நாய் எல்லாவற்றையும் விட



பயங்கரம். கோட்டை போலக் கண்கள் இருக்கும். இதற்கும் நீலத் துணியைப் போட்டு அதன் மேல் உட்கார வைத்து விடு. அப்புறம் எவ்வளவு தங்கக் காசு வேணுமானாலும் எடுத்துக்கலாம்,'' என்று விவரித்தாள்.

எல்லாவற்றையும் விளக்கமாகக் கேட்ட வீரன், ''இவ்வளவு செல்வத்தையும் என்னிடமிருந்து நீ எதையும் எதிர்பார்க்காமல் நிச்சயம் கொடுக்க மாட்டாய். உண்மையைச் சொல்லு, உனக்கு என்ன வேணும்?'' என்று கேட்டான்.

''ஆமாம். சரியாய்ச் சொன்னேப்பா. எனக்கு என்ன வேணும்? பெரிசா ஒண்ணும் இல்லை. ஒரு பழைய நெருப்புப் பெட்டி எங்க பாட்டியோடது. அவள் முன்னே அந்தப் பொந்துக்குள் போனபோது மறந்து விட்டது. அதை எடுத்துக் கொண்டு வந்தால் போதும்,'' என்றாள் கிழவி.

''அதானே கேட்டேன்! சரி, நான் நீ சொன்னது போலப் போய் வெற்றியோட வெளி வரேன். கயிற்றைக் கட்டு இப்போ,'' என்றான் வீரன்.


பிறகு மரத்தின் மேலே ஏறிப் பொந்திலே இறங்கி, கிழவி சொன்னபடியே விளக்குகள் எரிந்து ஒளி வீசும் அறைக்குள் நுழைந்தான்.

முதல் கதவைத் திறந்தவுடன் பெரிய நாயைப் பார்த்தான். தட்டு முழி நாய் அவனையே முறைத்தது. அதனிடம் பேசினான், ''நீ எவ்வளவு

அருமையான நாய்!'' என்று புகழ்ந்து கொண்டே நீலத் துணியைப் போட்டு அதை உட்கார வைத்தான். நாய் அசையவில்லை. தேவையான அளவு செம்புக் காசையும் எடுத்துக் கொண்டான். பெட்டியையும் பழையபடி மூடி விட்டு நாயையும் மேலே உட்கார வைத்து விட்டுத் திரும்பினான்.

இரண்டாவது கதவு இருந்த அறைக்குச் சென்றான். அங்கே பெட்டி மேலே இருந்த நாயைப் போல அவன் இதுவரை பார்த்ததேயில்லை. பெரிய பெரிய சக்கரம் போன்ற விழிகளை வைத்துக் கொண்டு அது அவனை அப்படியே வெறித்தது.

உடனே வீரன், ''அருமை நாயே,



நீ ஏன் இப்படி முறைத்துப் பார்க்கிறாய்? உன் விழிகள் இரண்டும் வெளியே தெறித்து விழுந்து விடும் போலிருக்கே! அதனாலே நீ அப்படிப் பார்க்காதே!'' என்றான்.

இப்படிச் சொல்லிக் கொண்டே நீலத் துணியைப் போட்டு அந்த நாயையும் உட்கார வைத்து, தனக்கு வேண்டிய அளவு வெள்ளி நாணயங்களையும் அள்ளிக் கொண்டு வெளியே வந்தான்.

மூன்றாவது அறையில் நுழைந்ததும், அவன் மிக மிக அதிசயமான நாயைப் பார்த்தான். அது பெரிய கோட்டையைப் போன்ற பெரிய கண்களை உடையதாக இருந்தது. மிகவும் ஆச்சரியமாகப் போய் விட்டது வீரனுக்கு.

எப்படியோ அந்த மூன்றாவது நாயையும் அடக்கி விட்டுப் பெட்டியைத் திறந்தான். அத்தனையும் தங்க நாணயங்கள்! ஏற்கெனவே சேகரித்து வைத்திருந்த செம்பு, வெள்ளிக் காசுகளையெல்லாம் எடுத்துக் கவிழ்த்து வெளியே கொட்டி விட்டுத் தங்கக் காசுகளாகத் தன் கோட்டுப் பை, தொப்பி, காலணி என்று சேகரித்து எடுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

இனி, தான் ஒரு பெரிய பணக்காரன்தான் என்று நினைத்துக் கொண்டு, பெட்டி மேலே பழையபடி நாயை உட்கார வைத்து விட்டு வெளியே வந்தான்.

பொந்தின் வாசலில் போய் நின்று, ''என்னை வெளியே இழுபாட்டி!'' என்று கூவினான்.

கிழவியும் அவனை வெளியில் இழுத்தாள்.

''நெருப்புப் பெட்டி எங்கே? எடுத்து வந்தாயல்லவா?'' என்று கிழவி கேட்டாள்.

''அடடா! மறந்து விட்டேன்,'' என்று பொய் சொன்ன வீரன், ''ஆமாம், அந்த நெருப்புப் பெட்டியால் உனக்கு என்ன நன்மை?'' என்று கேட்டான்.

''அதைப் பற்றி உனக்கென்ன? உனக்குத் தேவையான பணம் கிடைத்து விட்டது. எனக்குத் தேவை



யான நெருப்புப் பெட்டியை நீ கொடுக்க வேண்டியதுதானே?'' என்று கிழவி சத்தம் போட்டாள்.

''நீ இவ்வளவு முக்கியமாகக் கேட்பதால் அந்தப் பெட்டியில் ஏதோ விஷயம் இருக்கிறது. அது என்ன என்று சொல். சொல்லா விட்டால் உன் தலையை வெட்டி விடுவேன்,'' என்று உடைவாளை ஓங்கினான் வீரன்.

''முடியாது.'' என்று கிழவி முரண்டு பிடிக்கவே, வீரனின் வாள் அவள் தலையை வெட்டி வீழ்த்தியது.

வீரன் மறைத்து வைத்திருந்த நெருப்புப் பெட்டி, தங்க நாணயம் இவற்றோடு அடுத்த நாடு நோக்கி நடந்தான்.

அங்கு ஓர் அழகான ஊரை அடைந்தான். அங்கிருந்த ஓர் பெரிய உணவு விடுதிக்குச் சென்றான். தேவையான உணவை வயிறு புடைக்க உண்டான்.

அவன் அணிந்திருந்த ஷூ மிகவும் மோசமாக இருந்தது. அடுத்த நாள் நல்ல ஷூக்களையும், உடைகளையும் வாங்கி அணிந்தான். பெரிய பணக்காரனாக ஊரில் உலா வந்தான்.

ஊரில் உள்ளவர்களும் அவனைப் பார்த்து, ''நீதான் பெரிய பிரபுவாக இருக்கிறாயே! ஏன் இந்த நாட்டு இளவரசியைப் போய்ப் பெண் கேட்கக் கூடாது? '' என்று ஆசை வார்த்தை கூறினார்கள்.

வீரனுக்கும் நாம் ஏன் அவ்வாறு செய்யக் கூடாது என்று தோன்றியது. ''எப்படி நான் இளவரசியைப் பார்ப்பது?'' என்று கேட்டான்.

''அவளை யாரும் இதுவரை பார்த்தது கிடையாது. அவள் ஒரு பெரிய கோட்டையில் அடைத்து வைக்கப் பட்டிருக்கிறாள். அவள் தாய் தந்தையைத் தவிர வேறு யாரும் அவளைப் பார்த்ததில்லை. யாரும் உள்ளே நுழையவும் முடியாது,'' என்று கூறினார்கள் அவர்கள்.

அவ்வளவு அதிசயமான இளவரசியை நாம் நிச்சயம் பார்க்க வேண்டும் என்று வீரன் தீர்மானித்தான்.

பணக்காரனான வீரன் பணக்காரர்களுக்கே உரிய ஆடம்பரத்தோடு வாழ்ந்தான். கேளிக்கைகள் என்ன, விருந்தென்ன என்றிருந்தான். நண்பர்கள் பலர் அவனைச் சந்தித்தனர். அவனைச் சுற்றி எப்பொழுதும் ஒரு கும்பல். வீரனுக்கோ ரொம்பச் சந்தோஷம். அவன் பணமும் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து, கடைசியில் கடன் வாங்கும் நிலைமைக்கு வந்து விட்டான்.

ஒரு நாள் மாலை மிகவும் இருட்டி விட்டது. வீட்டில் விளக்கு கொளுத்தலாம் என்று நினைத்து முன்பு பொந்திலிருந்து கொண்டு வந்த நெருப்புப் பெட்டியை எடுத்துப் பற்ற வைத்தான். அடுத்த கணம் அவன் முதன் முதலில் சந்தித்த அந்த நாய் பெரிய தட்டு விழிகளோடு அவன் முன் நின்றது. ''என் எஜமானரே! உங்களுக்கு நான் என்ன சேவை செய்ய வேண்டும்?'' என்று கேட்டது.

வீரனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. ''நீ உண்மையாகத்தான் சொல்கிறாயா? எனக்கு இப்பொழுது பணம் தேவை உடனே கொண்டு வா!'' என்றான்.

உடனே மறைந்த நாய், பணப் பையை வாயில் கவ்விக் கொண்டு நொடியில் தோன்றியது.

ஒருமுறை நெருப்புப் பெட்டியை



''எங்க.. தாத்தா இறந்துட்டார்னு சொல்லி ஆபிசுக்குப் 10 நாட்கள் லீவு போட்டது தப்பாப் போச்சு...''

''ஏன்?''

''டெத் சர்டிஃபிகேட்' டைக் கொண்டு வந்து கொடுத்தால்தான் லீவ் சாங்ஷன் பண்ணுவேன்னு மானேஜர் சொல்லிட்டார்!''



பற்ற வைத்ததும் முதலில் சந்தித்த நாய் வந்ததும், இரண்டு முறை பற்ற' வைத்ததும் இரண்டாவது நாய், இப்படியாக மூன்றாவது முறை மூன்றாவது நாய் வந்தது.

தங்கம் தந்த மூன்றாவது நாய் வந்ததும்தானே முதலில் அவனுக்கு அதிர்ஷ்டம் அடித்தது! அதேபோல் இப்போதும் தங்கக் காசுகளைப் பெற்றுப் பெரிய செல்வந்தனாக ராஜ போக வாழ்க்கை வாழ்ந்தான்.

பழையபடி சினேகிதப் பட்டாளம் சேர்ந்தது. அவர்களும் இளவரசியைப் பற்றிச் சொல்லி ஆசை மூட்டினார்கள். வீரனும் ஒருநாள் —

நெருப்புப் பெட்டியை எடுத்துப் பற்ற வைத்து, முதல் நாயை வரவழைத்து, செம்புக் கோட்டையில் இருக்கும் இளவரசியைத் தான் எப்படியாவது பார்க்க வேண்டும் என்று தன் விருப்பத்தை வெளியிட்டான்.

அடுத்த நொடியில் நாய் மறைந்து இளவரசியைத் தன் தோளில் சுமந்து வந்து அவன் எதிரில் வைத்தது.

அவள் அப்படி ஒரு பேரழகியாக இருந்தாள். அவள் அப்பொழுது அந்த நடு இரவில் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். அவளைப் பார்த்ததும் ஆவலோடு வீரனும் முத்தம் கொடுத்தான். பிறகு சிறிது நேரத்தில் அவளைத் தூக்கிக் கொண்டு நாயும் சென்று விட்டது.

மறு நாள் காலை பொழுது விடிந்ததும், இளவரசி தன் தாய் தந்தையோடு அமர்ந்து தேனீர் அருந்திக் கொண்டிருந்தாள். 'அவள் தான் முதல் நாள் இரவு ஏதோ ஒரு நாயின் தோளில் ஏறிச் சென்றதாகவும், அங்கு ஓர் அழகான வாலிபனைச் சந்தித்ததாகவும். ஆனால் அது ஓர் விசித்திரமான கனவு போல் இருந்தது என்று சொன்னாள்.

"நல்ல கதையாக இருக்கிறது மகளே!" என்றாள் ராணி.

அடுத்த நாள் இரவு பணிப் பெண்ணை உடன் அனுப்பி இளவரசி கனவு என்று விவரித்தது உண்மையிலேயே கனவுதானா என்று கண்காணிக்க ஏற்பாடு செய்தாள். அவள் இளவரசியின் படுக்கையருகேயே காவலுக்கு நின்றாள்.

வீரனோ முந்தின நாள் இரவு

இளவரசியைக் கண்டது முதல் அதே நினைவாக இருந்தான். எப்படியாவது அவளை மறுபடியும் காண வேண்டும் என்று அடங்காத ஆவலாக இருந்தான். அதனால் மறுபடியும் நாயை அழைத்து, அவளைத் திரும்பக் கொண்டு வர ஏற்பாடு செய்தான்.

நாய் இளவரசியைத் தூக்கிச் செல்வதைக் காவலுக்கு இருந்த பணிப் பெண் பார்த்து விட்டாள். விடுவாளா?

அந்த நாயின் பின்னாலேயே போனாள். அடையாளத்திற்காக வழியெல்லாம் வேர்க்கடலைப் பருப்பைப் போட்டுக் கொண்டே போனாள். வீரனின் மாளிகையை அடைந்ததும் அடையாளத்திற்காக அந்தக் கதவின் மேல் ஒரு பெருக்கல் குறி போட்டு வைத்து விட்டுத் திரும்பினாள்.

விடிவதற்குள் இளவரசி அரண்மனை வந்து சேர்ந்து விட்டாள்.

மறுநாள் வீரன் வெளியே வந்த போது, தன் கதவின் மேல் இருந்த குறியைப் பார்த்துச் சந்தேகப்பட்டு, தன்னை கண்டுபிடிக்கும் அடையாளமாகத்தான் இருக்கும் என்று ஊகித்து அந்தத் தெருவில் இருந்த எல்லாக் கதவின் மேலும் அதே போலக் குறியைப் போட்டு வைத்தான்.

ராஜாவும், ராணியும் பணிப் பெண்ணோடு வீரனின் மாளிகையைக் காண வந்தனர். அங்கு முதல் கதவைக் காண்பித்து, ''அதோ, அந்த வீடுதான். குறியோடு இருப்பதைப் பாருங்கள்,'' என்றாள்.

''அதோ அந்த வீட்டிலும் குறி இருக்கிறதே!'' என்றாள் ராணி.

இப்படி எல்லா வீட்டிலும் குறி இருக்கவே, எந்த வீடு என்று தெரியாமல் யாவரும் திகைத்து நின்றனர். இந்தக் குறி வேலையால் பிரயோஜனமில்லை என்று தீர்மானித்து அனைவரும் திரும்பினர்.

இரண்டாவது நாள், ராணி வேறொரு உபாயம் செய்தாள். இளவரசியின் கழுத்தில் அவளுக்குத் தெரியாமல் சிறு சிறு மணிகளைப் போட்டுக் கட்டிய ஒரு சின்னப் பையைத் தொங்கச் செய்தாள். அதில் ஒரு சிறிய துளையையும் போட்டு வைத்தாள். இளவரசி வெளியே சென்றால் — அதிலிருந்து மணிகள் சிறிது, சிறிதாகக் கொட்டும்.

அடுத்த நாள் இரவும் நாய் வந்து இளவரசியை அழைத்துச் சென்றது. வழியில் மணிகள் கொட்டிக் கொண்டே போய் பாதையைக் காட்டிக் கொடுத்தது.

ராஜாவும், ராணியும் மறுநாள் வந்து வீரன் இருக்கும் இடத்தைச் சுலபமாகக் கண்டுபிடித்தனர். அவனைச் சிறை பிடித்தனர்.

பாதாள சிறையில் அடைக்கப் பட்டான் வீரன். தூக்குத் தண்டனை அளிக்க வேண்டும் என்று அரசன் உத்தரவிட்டான்.

வீரனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மந்திரத் தீப்பெட்டி வேறு அவனிடம் இல்லை. எப்படியாவது அதை எடுத்துவரச் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டான்.

அவன் அடைக்கப்பட்டிருந்த அறைக்கு வெளியே ஒரு செருப்புத் தைக்கும் பையனைப் பார்த்தான். அவனை அருகில் அழைத்தான். ''பையா! நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். நான் தங்கியிருந்த இடத்துக்குப் போய், அந்த வீட்டு

* இன்றைய டென்னிஸ் போல பூர்வீகச் செவ்விந்தியர்கள் ஒரு விளையாட்டு விளையாடினார்கள். அதன் பெயர் லாக்ராஸ்.
* பாக் ஜலசந்தியை முதன் முதலாக நீந்திக் கடந்தவர் மிஹிர் சென். 1966 ஏப்ரல் ஐந்தாம் தேதி இச் சாதனையைப் புரிந்தார். 25 மணி 36 நிமிடத்தில் கடந்தார்.
* அமெரிக்காவின் பிரபலமான விளையாட்டு — பேஸ்பால்.
* போலோ விளையாட்டில் ஒரு கோஷ்டிக்குப் பதின்மூன்று பேர் இருப்பார்கள்.
* ஒலிம்பிக் விளையாட்டு முதன் முதல் ஒலிம்பியாவிலுள்ள மைதானத்தில் விளையாடப்பட்டது.
* கிரிக்கெட் மட்டை 'வில்லோ' மரத்தில் செய்யப்படுகிறது.
* அம்பு, வில் எறிதல் விளையாட்டுக்கு 'டாக்ஸா பிலி' என்று பெயர்.
* ஒலிம்பிக் விளையாட்டுகளில் ஹாக்கி

மாடத்தில் ஒரு தீப்பெட்டி இருக்கும். அதை எப்படியாவது எடுத்து வந்து என்கிட்டே கொடுத்தால் உனக்கு நிறையப் பணம் கொடுப்பேன். வேக மாகப் போய்விட்டு வா!'' என்று சொன்னான்.

செருப்புத் தைக்கும் பையனுக்கும் சந்தோஷம் பிடிபடவில்லை. எப்படியாவது பணம் பெற்று விட வேண்டும் என்று நினைத்து வீர னுக்கு உதவ ஓடினான்.

ஓடிய வேகத்திலேயே தீப்பெட்டி யோடு திரும்ப வந்தான்.

வீரனுக்குத் தீப் பெட்டி கிடைத்து விட்டது.

மறுநாள் அவனைத் தூக்கில் போட எல்லோரும் தயாராகக் கூடி விட்டனர். தூக்குக் கயிற்றை அவன் கழுத்தினருகே கொண்டு போனதும், அவன் அங்கிருந்த ஆட்களைப் பார்த்து, ''கொஞ்சம் இருங்கள். சாவதற்கு முன் பாவப்பட்ட கைதி யின் கடைசி வேண்டுகோளை நிறை வேற்ற வேண்டும் அல்லவா? எனக் கொன்றும் பெரிதாக ஆசையில்லை. ஒரே ஒரு சுருட்டுப் புகைத்துக் கொள் கிறேன். என் வாழ்க்கையில் கடைசி ஆசை ஒன்றே ஒன்று...'' என்று கேட் டான்.

''பாவம், ஏதோ சரி,'' என்று அரசனும் அனுமதித்தான்.


தீப்பெட்டியை எடுத்து ஒருமுறை, இரண்டு முறை, மூன்று முறை என்று மெதுவாகப் பற்ற வைத்தான். அவ் வளவுதான், மூன்று நாய்களும் வரிசையாகப் பெரிய, பெரிய கண்க ளோடு தோன்றி விட்டன.

வீரனும் நாயைப் பார்த்து, ''நாய் களே! இதோ இங்கு இருப்பவர்கள் என்னைத் தூக்கில் போட்டுச் சாகடிக்கப் பார்க்கிறார்கள். உடனே இவர்களை விரட்ட வேண்டும்,'' என்று கட்டளையிட்டான்.

எஜமானருக்கு எப்பொழுதும் கீழ்ப்படியும் மூன்று நாய்களும் உடனே அங்கிருந்தவர்களை நோக் கிப் பாய்ந்தன. யாவரும் அலறிக் கொண்டு திசைக்கொருவராக ஓடி னர்.

ராஜா உடனே, ''எங்களை விட்டு விடு வீரா! நீ ஆசைப்பட்டது போலவே இளவரசியை உனக்குத் திருமணம் செய்து தருவோம், இது சத்தியம்,'' என்றான்.

இளவரசி — வீரன் திருமணம் இனிதே நடந்தது. அவர்கள் சந்தோஷ மாகப் பல்லாண்டு வாழ்ந்தனர்.




முதன் முதலில் 1908 ஆண்டில் இடம் பெற்றது. அந்த வருடம் வெற்றி பெற்ற நாடு பிரான்ஸ்.

* கல்கத்தாவில் கிரிக்கெட் டெஸ்ட் ஆடும் மைதானத்தின் பெயர் ஈடன் தோட்டம்.
* முதன் முதலாகத் துவிச்சக்கர வைசைக் கிள் பந்தயம் 31.5.1868ஆம் ஆண்டு பாரிஸில் நடந்தது.
* ஸ்பெயின் நாட்டின் புகழ்பெற்ற விளை யாட்டு, காளையுடன் சண்டை போடு வது.
* 'ஒலிம்பியாடு' என்றால் கிரேக்க மொழி யில் நாலு வருடத்திற்கு ஒருமுறை என்ப தாகும்.
* டென்னிஸ் விளையாட்டு 1050ஆம் ஆண்டில் பிரான்ஸில் பாதிரியார்க ளால் விளையாடப்பட்டது. அப்போது இவ்விளையாட்டுக்கு 'ஜூடிபாமே' என்று பெயர்.
* ஒலிம்பிக் சுடர் முதன் முதலில் 1936ஆம் ஆண்டு பெர்லின் ஒலிம்பிக் விளையாட் டில் ஏற்றப்பட்டது.
* பண்டைய ஒலிம்பிக்கில் 'ஸ்டேடியம் ரேஸ்' என்ற 176 மீட்டர் ஓட்டப்பந்தயம் மட்டுமே இடம்பெற்றது.
* அயர்லாந்தில் பிரபலமான கிரிக்கெட் ஆட்டத்தை முதலாம் எலிசபெத் ராணி காலத்தில் துருப்புக்கள் பார்த்து விட்டு வந்து அதனை இங்கிலாந்தில் பரப் பினார்கள்.
* 1744இல் தான் கிரிக்கெட் சட்டங்கள் அமுலுக்கு வந்தன.

— எஸ். விஜயா சீனிவாசன்,
திருச்சி — 14.



Colour transparency : Shrihari





இந்தியாவிலேயே மிக உயரமான கல் கோபுரம், குதுப்மினார், டில்லியில் இருக்கிறது. 242 அடி உயரமுள்ள இந்தக் கோபுரம் ஐந்து அடுக்குகளை உடையது. கோபுரத்தின் உச்சியை அடைய மொத்தம் 379 படிக்கட்டுகள் ஏறவேண்டும். இந்தப் படிக்கட்டுகள் மணல், கல்களாலும் கட்டப்பட்டன. கூம்பு வடிவில் உள்ள இந்தக் கோபுரத்தின் அடிப் பாகத்திற்கும் உச்சிக்கும் உள்ள விகிதம் 10 : 1. இந்தியாவின் மீது படையெடுத்து வெற்றி கொண்ட அப்கானிஸ்தான் நாட்டு அரசன், குத்புதீன் ஐபக் என்பரால் கி. பி. 1199 ல் கட்டப்பட்டது.



இந்தக் கோபுரத்திலிருந்து ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 22 ஆம் தேதி அன்று மட்டும் நிழல் பூமியில் விழாது. சூரியனின் ஒளிக்கதிர்கள் ஜூன் 22 அன்று இந்தக் கோபுரத்தின் மீது நேர் செங்குத்தாக விழும். சாய்வாக விழாது. அதனால்தான் நிழல் விழுவதில்லை என்று பொறியாளர்கள் கூறுகிறார்கள்.

எஸ். ஹலிமா ஸயீதியா, திருச்சி — 1



பாம்புகளிலேயே பறக்கும் பாம்பு என்று ஒரு வகைப் பாம்பு உள்ளது. இப்பாம்பு மலேஷியாக் காடுகளில் காணப்படுகிறது. இது ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்குத் தாவுவதற்குத் தன்னுடைய உருளை வடிவமான உடலைத் தட்டையாக மாற்றிக் கொண்டு தாவுகிறதாம்!

இதை வளர்க்கலாம் என்று பிடித்துச் சென்றவர்கள் எல்லாம் தோல்வியே சந்தித்தனராம். காரணம் பாதி வழியிலே இறந்துவிடுகிறதாம்.

எல். முத்து, ஊத்தங்கரை.



தலைபோகும் வேலை இருந்தாலும் தினமும் ஐந்து பக்கங்களாவது எழுதிவிட்டுத் தான் படுப்பார் பெர்னாட்ஷா! பேனாவை அவர் தொடாத நாளே இல்லையாம்!

* கடல் தண்ணீரின் கொள்ளளவு எவ்வளவு இருக்கும்?

140 கோடி கியூபிக் கிலோ மீட்டராம்!

* இந்தியாவிலேயே அதிகமாகப் பல்கலைக் கழகங்கள் உள்ள மாநிலம் எது?

ஜனத் தொகை அதிகம் உள்ள உத்தரப் பிரதேச மாநிலம்தான் இந்தப் பெருமையைப் பெறுகிறது. இந்த மாநிலத்தில் மொத்தம் பதினான்கு பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன.

* உலகிலேயே அதிகமாக வங்கிக் கிளைகள் நிறுவியுள்ள வங்கி எது?

நம்முடைய ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா வங்கிதான்! இந்த வங்கிக்கு மொத்தம் 10,841 கிளைகள் இருக்கின்றன.

* இந்தியாவிலேயே மிகப் பழைமையான பள்ளி எங்கே இருக்கிறது?

சிம்லாவில்தான். இங்கே உள்ள பிஷப் கார்டன் பள்ளி 1847 — ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதாம்.


பா. நா. நாகராஜன், நாகமங்கலம்.

அம்பலத்தரசே!

* தமிழ் நாட்டில் ஆண்டவன் நடனமாடிய ஐந்து அம்பலங்கள் எதுவென்று தெரியுமா?

அவை: 1. திருவாலங்காடு — இரத்தின அம்பலம், 2. சிதம்பரம் — பொன்னம்பலம், 3. மதுரை — வெள்ளியம்பலம், 4. நெல்லை — செப்பு அம்பலம், 5. குற்றாலம் — ஓவிய அம்பலம் (சித்திரை சபை).

ஆ. ராஜேந்திரன், குமாரமங்கலம்.



அமெரிக்க ஜனாதிபதியாக பல வருடம் இருந்தவர் ஆபிரகாம்லிங்கன். திறமைசாலி. அவர் முகம் அழகற்று விகாரமாக இருக்கும். அவர் முகத்தைப் பார்க்கச் சகிக்காத ஒரு சிறுமி அவரிடம், "நீங்கள் ஏன் அசிங்கமாக உள்ளீர்கள்?" என்றாள்.

அதற்கு அவர், "நான் சின்னக் குழந்தையாக இருந்த பொழுது ரொம்பவும் அழகாக இருந்தேன். ஒருநாள் என் அம்மா என்னைக் கட்டிலில் படுக்கவைத்து விட்டு வெளியில் சென்று விட்டாள். அப்போது என் வீட்டுக்கு வந்த திருடன் என் அழகில் மயங்கி என்னை எடுத்துக் கொண்டு அதற்கு பதில் அசிங்கமான வேறொரு குழந்தையைப் போட்டு விட்டுப் போய் விட்டான். அதிலிருந்து நான் இப்படி அசிங்கமாக இருக்கிறேன்," என்று குழந்தைத் தனமாகவே பதிலளித்தார்.

சா. இரா. மணி, வந்தவாசி.



நஸ்ருதீன் சிறுவனாக இருந்த போது ஒருநாள் அவருடைய தந்தை அவருக்கு அறிவுரை கூறினார்: "மகனே, விடியற்காலையில் எழுந்திரு."

"எதற்காக அப்பா?"

"அது நல்ல பழக்கம். லாபரமானதும் கூட. ஒரு நாள் நான் பொழுது புலர்வதற்கு முன் எழுந்து வெளியே உலாவச் சென்றேன். வழியிலே பொற்காசுகள் நிறைந்த ஒரு பையைக் கண்டெடுத்தேன்."

சிறுவன் நஸ்ருதீன் ஒரு நிமிடம் சிந்தனையில் ஆழ்ந்தான். பிறகு கேட்டான்: "அப்பா, தாங்கள் கண்டெடுத்த தங்கப் பையை முந்திய இரவிலே யாராவது தொலைத்திருக்கலாம் அல்லவா?"

"நிச்சயமாக இல்லை. முந்தைய இரவில் வெகுநேரம் கழித்து அந்த வழியாகத்தான் நான் வீட்டுக்கு வந்தேன். அப்போது அந்தப் பை இல்லை.

நஸ்ருதீன் திரும்பவும் சிந்தித்தான். பிறகு, "புரிந்தது," என்று தலையசைத்தான்.

"என்ன புரிந்தது?" தந்தை கேட்டார்.

"அந்தப் பையை விடியற்காலையில்தான் யாரோ தொலைத்திருக்கிறார்கள். அதனால் விடியற்காலையில் எழுந்தால் தங்கப் பையைத் தொலைக்க நேரும் என்பது புரிந்தது," என்றான் சிறுவன் நஸ்ருதீன்.

— சோமங்கலம் ராமு.



கண்டுபிடித்தவர்களும் (அ) உருவாக்கியவர்களும், பொருட்களும் கீழே உள்ளது. ரொம்பச் சிறு பொருட்களும் இதில் அடக்கம்.

1. சைக்கிள் — மாக்மில்லன்
2. வைட்டமின் — ஃபங்க்
3. பலூன் — மாண்ட் கோல்ஃபியர்
4. பேனா — வாட்டர் மேன்

5. எக்ஸ்ரே — ராண்ட் ஜென்
6. டெலிவிஷன் — ஜெ. எல். பெர்டா
7. ஆக்ஸிஜன் — ஜே. பி. பிரிஸ்டலி
8. ஸ்டெதஸ்கோப் — லேனக்
9. டிரான்ஸிஸ்டர் — ப. ஷாக்லே
10. மாற்று இருதய சிகிச்சை — கிறிஸ்டின் பெர்னாட்.

— மு. திருநாவுக்கரசு, மொரப்பூர்

11 வயது விமானி!



இளம் விமானி சிறுவனை டோனி அவெய்ன் ஜென்னாவிற்கு இதோ நம் பாராட்டு.

11 வயதே ஆன அமெரிக்க கலிபோர்னியா நாட்டின் இச் சிறுவன் ஒரே என்ஜின் கொண்ட விமானத்தில் உலகைச் சுற்றி வருகிறான்.

இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் அமெரிக்கச் சிறுவர் சிறுமியரிடமிருந்து நட்புரிமைப் பத்திரத்தில் கையெழுத்து வாங்கிக் கொண்டு, இந்த மாதம் லெனின் கிரேடியிலிருந்து மாஸ்கோ போய்ச் சேர்ந்தான்.

ரஷிய மரபுப்படி ரொட்டியும் உப்பும் கொடுத்து மாஸ்கோ மக்கள் சார்பில் அவன் வரவேற்கப்பட்டான். அமெரிக்கச் சிறுவர் சிறுமியர் நட்புரிமைப் பத்திரங்களை (2.50 லட்சம்) ரஷ்ய அதிபரிடம் வழங்குவான்.

அதே போல் அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ்ஷிடம் தருவதற்காக 1000 (ஆயிரம்) ரஷ்யச் சிறுவர், சிறுமியரிடம் நட்புரிமைப் பத்திரத்தில் இந்தச் சிறுவன் கையெழுத்து வாங்கி இருக்கிறான்.

— மா. தா. ஸ்ரீதர், சென்னை — 106.




இடம் பார்த்துச் சிரிப்பவன் எத்தன்.
இருக்கும் இடமெல்லாம் சிரிப்பவன் கோமாளி.
கண் பார்த்துச் சிரிப்பவன் காரியவாதி.
காணாமல் சிரிப்பவன் கஞ்சன்.
கற்பனையில் சிரிப்பவன் கவிஞன்.
கோபத்தில் சிரிப்பவன் சிந்தனையாளன்.
நீதியோடு சிரிப்பவன் அறிஞன்.
நினைவோடு சிரிப்பவன் வறிஞன்.
மகிமையில் சிரிப்பவன் மன்னன்.
மாண்பில் சிரிப்பவன் பண்பாளன்.
செயல் கெட்டுச் சிரிப்பவன் பசசோந்தி.
அருளுக்குச் சிரிப்பவன் ஆண்டி.
கூட்டத்தில் சிரிப்பவன் சாமார்த்தியன்
வளையாமல் சிரிப்பவன் உதவாக்கரை.
கொடுக்கும் போது சிரிப்பவன் சூழ்ச்சிக்காரன்.
துன்பத்தில் சிரிப்பவன் மனிதன்.

— எஸ். நீலகண்டன், புதுக்கோட்டை — 2.

செங்கழுநீர் எங்கே?

செங்கழுநீர்ப்பட்டு என்று ஓர் ஊர் புதுச்சேரிக்கு அருகில் இருந்தது. ஆனால், இந்த ஊர் எங்கே உள்ளது என்று நாம் திகைப்புறக் கூடும். செங்கழுநீர் என்பது ஒரு பூவின் பெயர். அப்பூக்கள் நிறைந்து காட்சியளித்த அவ்வூருக்குச் செங்கழுநீர்ப்பட்டு என்று முன்னையோர் பெயரிட்டனர். ஆனால், இப்பொழுது அவ்வூர் செங்கழுநீர்ப் பூவின் மென்மையும், மணமும் இழந்து, செங்கற்பட்டாக மாறியிருக்கிறது.

இரா. நடராசன், மேலையூர்.



இந்தியாவிலேயே 100க்கு 100 பேர் படித்தவர்களாக உள்ள ஊர் எது தெரி

யுமா? கேரளா மாநிலத்தில் உள்ள கோட்டயம்தான். முனிசிபாலிட்டி பட்டியலில் உள்ளபடி இந்த ஊரைச் சேர்ந்த அனைவரும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் என்பது சமீபத்தில் வெளிவந்துள்ள தகவல்.

— அ. நவ்சாத், மொரப்பூர்.

10989 இந்த எண்ணை ஒன்பதால் பெருக்கினால் என்ன விடை வரும் எனச் சட்டென கூறுங்கள் பார்க்கலாம்.

விடை என்ன?

விடை:

98901. அந்த எண்ணை அப்படியே திருப்பி எழுதி விடுவதுதான் விடை.

— பி. கோவிந்தசாமி (5,703),
ஊத்தங்கரை.



பகைவனுக்கருள்வாய்

தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த போது காந்திஜி அங்குள்ள இந்தியர்களின் உரிமைக்காக மிகவும் போராடியிருக்கிறார். இதனால் அங்குள்ள ஐரோப்பியர்களின் எதிரி ஆனார். அவர் முதலில் தன் குடும்பத்தை அங்கு அழைத்துச் செல்லவில்லை. பிறகு டர்பன் என்னுமிடத்திற்கு தன் குடும்பத்தை அழைத்து வரத் திட்டமிட்டார். அவர் தன் மனைவி குழந்தைகளுடன் டர்பனின் இரவுக் கப்பலில் வந்திறங்கத் திட்டமிட்டார்.

ஆனால் காந்திஜியின் நண்பர் லாஃப்டன் என்பவர் அவரிடம், "நீங்கள் திருடரைப் போன்று இரவு வரத் தேவையில்லை. உங்கள் மனைவி குழந்தைகளை நண்பர் ஒருவர் வீட்டில் விட்டு விட்டு நாம் இருவரும் நடந்து போய் விடலாம்," என்றார்.

அவரின் யோசனைப்படி காந்திஜி செய்தார். ஆனால் சில ஐரோப்பிய இளைஞர்கள் அவரை அடையாளம் கண்டு கொண்டு அவரைக் கற்களாலும் அழுகின முட்டைகளினாலும் தாக்கி அடித்துத் துன்புறுத்தினார்கள். அவர் மயங்கி விழுந்து விட்டார்.

அப்போது அலெக்ஸண்டர் என்ற போலீஸ் அதிகாரியின் மனைவி தற்செயலாக அங்கு வந்தார். தன் குடையை விரித்துக் கொண்டு அவரைத் தாக்கும் கூட்டத்திற்கும் அவருக்கும் இடையே நின்று கொண்டார்.

இந்தியர் ஒருவர் இதைப் பார்த்து விட்டு உடனே போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று தகவல் சொன்ன மறு கணமே போலீஸ் அதிகாரி அலெக்ஸாண்டர், காந்திஜியைக் காப்பாற்ற ஒரு பெரிய படையை அனுப்பி வைத்தார்.


காந்திஜிக்குப் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. ஆனாலும் வெறி கொண்ட கும்பலின் தீவிரம் அடங்கவில்லை. அதனால் போலீஸ் அதிகாரி ரகசியமாகக் காந்திஜியைப் பாதுகாப்புடன் போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பி விட்டார்.

மறுநாள் காலை தினசரிகளில் காந்திஜி தாக்கப்பட்டது குறித்த விவரம் அறிந்த அனுதாபிகள் பலர், காந்திஜியைத் தாக்கிய வெறியர்களைக் கைது செய்து தண்டனை தர வேண்டும் என்று அரசை வேண்டினர். தென்னாப்பிரிக்க அரசும் அவரைத் தாக்கியவர்களை அடையாளம் காட்டச் சொல்லிற்று.

ஆனால் பெருந்தன்மை மிகுந்த காந்திஜி, 'நான் அந்தக் கூட்டத்தினரைப் பழி சொல்ல மாட்டேன். அவர்களுக்கு என்னைப் பற்றி ஒன்றும் தெரியாது. அவர்களுடைய தலைவர்கள் என்னை அவர்களின் எதிரி என்று நம்பவைத்திருக்கிறார்கள். ஆனால் நான் ஒருவரையும் தண்டிக்க விரும்பவில்லை. அவர்களுக்கு உண்மை தெரிய வரும் போது அவர்களே தாங்கள் செய்தது தவறு என்று உணர்வார்கள்," என்று கூறிவிட்டார்.

அவருடைய கூற்றைப் படித்த காந்திஜியின் எதிரிகளுக்கு அவரிடம் பல மடங்கு மதிப்புப் பெருகியது. தங்களின் செய்கைக்காக மிகவும் வருந்தினார். தன் உயரிய பண்பால் ஐரோப்பியர்களைத் தன் நண்பர்களாகக் காந்திஜி அடைந்தார்.

இந்திரா கோபாலன், திருச்சி — 14.



"நர்சரி ஸ்கூல் புத்தகங்களைச் சுமக்க கழுதை வாங்கினது தப்பாப் போச்சு."

"ஏன்... என்னாச்சு?"

"ஸ்கூலுக்குப் போகிற வழியிலேயே பாதி புத்தகங்களைத் தின்னுடுச்சே...!"

— சீர்காழி ஸ்ரீராம்.

ஆரண்யத்தில் ஓர் ஆபத்பாந்தவன்



திடீரென்று பயங்கரமான அந்தச் சத்தத்தைத் தொடர்ந்து மான்கள், முயல்கள், காட்டுக் கோழிகள் யாவும் அவர்களுக்கு முன்னே பாதை. யைத் தாண்டி ஓடிக் கொண்டிருந்தன.

அவர்களின் உடல்கள் நடுங்கத் தொடங்கின. சடாரெனப் பாறை மறைவில் ஒளிந்து கொண்டனர்.

அது என்ன சத்தம், அவை எதற்காக ஓடின என்றே தெரியவில்லை.

''சரி, வாங்க, இப்ப ஒண்ணும் இல்லை, ரெண்டு புலிகள் சண்டை கிண்டை போட்டிருக்கும். அதைப் பார்த்துத்தான் இந்த மிருகங்கள் இப்படி ஓடியிருக்கு.'' தோட்ட ஏஜெண்ட் கூறியதும் முத்து, சங்கர், குமார் மூவரும் எழுந்து நடக்கத் தொடங்கினர்.

சுற்றிலும் அடர்வனம். மேலே மேகம் போர்த்திய வானம்.

மரஞ்செடி கொடிகளில் இலைகள் தான் எத்தனை விதம், அதன் பச்சை நிறங்களில்தான் எத்தனை வேறுபாடுகள்! வண்ண வண்ணப் பூக்கள், மெல்லிய குளிர் காற்று, சுற்றிலும் அமைதி, அதை உடைக்கும் மெல்லிய சில் வண்டுகளின் ஒலி!

இந்த அழகில் மெய்மறந்து, ஆனாலும் பயந்து கொண்டே நடந்தனர்.

மேற்குத் தொடர்ச்சி மலையின் அந்த வட்டாரத்திலுள்ள ஒரு காப்பித் தோட்ட உரிமையாளரின் மகன்தான் சங்கர். இவ்வாண்டு மேல் நிலைக் கல்வியை முடிக்கப் போகிறார்கள். அடுத்த ஆண்டு கல்லூரியில் சேரப் போகிறார்கள். அந்தக் கல்லூரியில் குறிப்பிட்ட மாணவர்களுக்கு மலை ஏற்றப் பயிற்சி அளிக்கிறார்கள். முன் அனுபவம் இருந்தால் அந்தக் குழுவில் எளிதாகச் சேர்ந்து விடலாமே என்ற ஆசையில்தான் சங்கரும், நண்பர்களும் விடுமுறையில் அவர்கள் தோட்டத்திற்கு வந்துள்ளனர்.

தோட்டம் முடிந்து, உச்சி மலையில் தமிழக எல்லை முடிந்து, மேல் பக்கம் கீழிறங்கினால் கேரள மாநில மலைவனங்கள். அங்கே படுகையாறு என்ற ஆறு ஓடி நீண்ட தூரம் சுற்றிப் பெரியாறு அணையில் கலக்கிறது. அதைக் காணத்தான் செல்கிறார்கள்.

மேகமூட்டம் அவர்களைத் தழுவிக் கொண்டு வேகமாக எங்கோ சென்று கொண்டிருந்தது.

''அந்தா வந்திரிச்சி படுகையாறு,'' ஏஜெண்ட் சுட்டிக் காட்டிய இடத்தைப் பார்த்தனர்.

மேற்கேயிருந்து வந்து ஒரு குன்று

கொ.மா.கோதண்டம்



ஓர் இடத்தில் வடக்கே திரும்பிப் போய்க் கொண்டிருந்தது ஓர் ஆறு. அவர்கள் ஓட்டமாக ஓடிக் கரையை அடைந்தனர். அகலமான நதி. ஆளுயரத்திற்குத் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது.

கீழே மணல் தெரியும் அளவிற்குத் தெளிவான நீர். அந்தச் சூழ்நிலையே அருமையாக இருந்தது.

''என்ன ஏஜெண்ட், ஆத்துல விழுந்து குளிக்கலாமா?'' என்று சங்கர் கேட்டான்.

''குளிங்க தம்பிகளா. ஆனா, சுத்து முத்தும் பாத்துக்கிட்டே குளிக்கணும். யானைங்க, 'புலிங்க, இங்கே தண்ணி குடிக்க வரும். சரி, நான் கரையிலே பார்த்துக்கிட்டு இருக்கேன். நீங்க குளிச்சிட்டு வாங்க,'' என்றார்.


அவர்கள் உடைகளைக் களையத் தொடங்கினார்கள்.

''மொதலாளி தம்பி, உங்க வைர மோதிரத்தைக் கழட்டிப் பத்திரமா வச்சிடுங்க. ஆத்துக்குள்ள உருவி விழுந்துருச்சின்னா மணலுக்குள்ள பொதஞ்சிடும்.''

ஏஜெண்ட் கூறியதும் சங்கர் தன் கையிலுள்ள விலை உயர்ந்த வைர மோதிரத்தைக் கழற்றி ஒரு பாறை மேல் வைத்தான். சூரிய ஒளி பட்டு அம்மோதிரக் கல் விளக்குப் போலப் பிரகாசித்தது. அருகில் உடைகளும், ஒரு பாறையில் பிஸ்கட் முதலிய சிற்றுண்டிப் பொட்டலங்களும் வைத்து விட்டு அவர்கள் ஆற்றில் இறங்கி நீந்திச் சென்றனர்.

''ஆமா, இந்த ஆறு இங்க இருந்தா பெரியாறு அணையிலே போய்க் கலக்குது?'' முத்து விசாரித்தான்.

''ஆமாம், கன்னட நாட்டுக் குடகு மலையில உற்பத்தியாகி காவிரி நதி எங்கெங்கோ சுத்தி நம்ம பூம்புகார்ல



கலக்கலையா? அப்படித்தான் இதுவும்,'' என்றார் ஏஜெண்ட்.

அப்படி அடிங்க,'' என்று கூச்சல் போட்டான் குமார்.

திடீரென்று எங்கிருந்தோ ஒரு பறவை வந்தது. கீழே விழுவது போல நெத்திக் குத்தாகக் கீழே பாய்ந்தது. இவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே வைர மோதிரத்தை அலகால் கொத்திக் கொண்டு மேலே பறந்தது.

அதே சமயத்தில் மரங்களில் தாவி ஓடி வந்த குரங்குக் கூட்டமொன்று தபதபவென்று இறங்கி இவர்கள் வைத்திருந்த சிற்றுண்டிப் பொட்டலங்கள், உடைகள் இவற்றைத் தூக்கிக் கொண்டு தாவி மரங்களில் ஏறி ஓடி விட்டன.

''ஐயோ,வைர மோதிரம்...'' அலறினார் ஏஜெண்ட்.

''பேண்ட் சட்டையெல்லாட் போச்சே...'' என்றான் குமார்.

''அடடா! டிபனையெல்லாம் தூக்கிக்கிட்டுப் போயிடுச்சே!'' என்றான் முத்து.

மாணவர்கள் கரை ஏறி ஓடி வந்தார்கள். பறவை சென்ற திசையில் ஏஜெண்ட் ஓடினார். அவர்களும் பின்னால் ஓடினார்கள். ஓரிடத்தில் மிகப் பெரிய பாறை தனித்து நின்றிருந்தது. பாறையின் உச்சியில் அப்பறவை அமர்ந்தது. ஏஜெண்ட் கீழே நின்று கொண்டார். அவர்களும் வந்து நின்றனர். மூன்று மாணவர்களும் ஜட்டி மட்டுமே அணிந்திருந்தனர்.

பறவை டக்கென்று பறந்து ஒரு மரக்கிளையில் அமர்ந்து அதிலிருந்த பழத்தைக் கொத்திக் கொண்டிருந்தது.

''தம்பிகளா, பறவை வாயிலே மோதிரம் இல்லே. இந்தப் பாறையிலே வச்சிட்டுப் போயிருச்சி. மேலே ஏற முடியுமா பாருங்க,'' என்று கூறி விட்டுப் பாறையைச் சுற்றிச் சுற்றி வந்தார்.

அந்தப் பாறை சுமார் முன்னூறு அடி வட்டத்தில் பத்து மாடி உயரத்தில் பயங்கரமான தூணைப் போன்று இருந்தது. ஏறுவதற்கான தடமே இல்லை. ஓர் இடத்தில் மட்டும் நெட்டுக் குத்தலாகப் பிளந்திருந்தது. வேறு பிசிறு ஏதும் இல்லை.

எப்படி ஏறுவது? எப்படி மோதிரத்தை எடுப்பது? விலை உயர்ந்த மோதிரமாச்சே! அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

''ஏஜெண்ட்டு! அப்பா என்னை அடிச்சே கொன்னு போடுவாரே! போட்டுட்டுப் போகாதேன்னாரு. நான்தான் கேக்கல்ல. இப்ப என்ன செய்ய?'' சொல்லும்போதே சங்கரின் கண்களில் கண்ணீர் தளும்பியது.

''கயிறு போட்டு ஏறவும் வழியில்லை. என்ன செய்யறது? 'ஏய்யா மோதிரத்தைப் பத்திரமா வாங்கி வக்கலே'ன்னு மொதலாளி என்னக் கூடச் சத்தம் போடுவாகளே!'' ஏஜெண்ட் மிக வருத்தமாகக் கூறி

னார்.

ஆற்றில் தூரத்தில் ஏதோ படகு வருவது போலத் தெரிந்தது.

"வனத்துக்குள்ள ஆத்துல படகு எப்படி வந்தது?" என்றான் குமார்.

"அது வள்ளம் தம்பிகளா, ஆதிவாசி ஜனங்க ஆத்தைக் கடக்கவும் மீன் பிடிக்கவும் இதுலதான் வருவாங்க. வாங்க, யாரு வராகன்னு பார்க்கலாம்."

தொடை அளவு, ஆளுயர மூங்கில்களை வரிசையாக மூன்று அடுக்கில் கட்டிய வள்ளம் அது. ஒரு வரிசை மூங்கில் தடிகள் நீருக்குள்ளும் மற்ற இரண்டு வரிசை, படகு போல மேலும் இருந்தது. அதில் ஓர் அதிவாசிச் சிறுவன் நின்று கொண்டு நீண்ட மூங்கிலால் தரையை அமுக்கி வள்ளத்தைத் தள்ளிக் கொண்டு வந்தான்.

நெருங்கி வந்ததும் ஏஜெண்ட், "தம்பி யாரு?" என்றார்.

"மலைப்பளியங்க. நீங்க எங்கிட்டு சாமி வந்தேக?" என்று கேட்டபடி, கரையோரம் குதித்த சிறுவன், வள்ளத்தை மரத்தில் கட்டி விட்டு மேலே வந்தான்.

"தம்பி, நாங்க தோட்டக்காரங்க. படுகையாத்தைப் பார்க்க வந்தோம். மொதலாளி தம்பி வைர மோதிரத்தை ஒரு பறவை தூக்கிக்கிட்டுப் போய் அதோ அந்தப் பாறையில உச்சியில வச்சிடிச்சு. எங்களால ஏற முடியல. நீ ஏறலாமாப்பா?"

"அதுல இது வரக்கி யாரும் ஏறனது இல்லே சாமி," என்று சொல்லி விட்டு, "சரி, வாங்க போய்ப் பார்க்கலாம்," என்றவாறே முன்னால் நடந்தான்.

"வட்டப் பாறையில எப்படி ஏறுறதுங்குற நேக்கெல்லாம் இந்தக் காட்டுப் பயலுக்கு எப்படித் தெரியும்?" அலட்சியமாகக் கூறினான் சங்கர்.

"தம்பி, நம்மூரு சஞ்சீவி மலையில உச்சியில இப்படித்தான் நாமக்கல்லுன்னு பெரிய பாறை இருக்குபாருங்க. அதுல மனுசங்களால ஏறவே முடியாது. ஆனா தேச விடுதலைப் போராட்ட காலத்துல காமாட்சி ராஜா, அரங்கசாமி ராஜா, வசந்தன் போன்ற சில கலைஞர்கள் அதுல எப்படியோ ஏறி, பெரிய கதர்க் கொடியைக் கட்டி வச்சிட்டாங்க. வெள்ளைக்கார அரசாங்க ராணுவத்தால கூட அதுல ஏறிக் கொடியைத் தொட முடியல்லே. இன்னிக்கி வரக்கி வேற யாருமே அதுல ஏற முடியல்லேன்னா பாருங்களேன். ஆனா யாருக்கோ ஒருத்தருக்காவது அந்தத் திறமை இல்லாமப் போகாது. இவன் எப்படின்னுதான் பாப்போம், வாங்க," என்றார்.

அவர்கள் பாறைப் பக்கம் வந்தனர். அவன் பாறையைச் சுற்றி சுற்றிப் பார்த்தான்.

"உம் பேரு என்னப்பா?" என்றார் ஏஜெண்ட்.

"நீலங்க. நான் ஐயனார் கோவில் பளியங்க. சும்மா இதுல மீனெல்லாம் பெருசா இருக்குமேன்னு பிடிக்க வந்தேன்," என்றவன் பாறைப் பிளவைப் பார்த்ததும் நின்றான். பிளவுக்குள் பாறையைக் கையால் தடவிப் பார்த்தான்.

இரண்டடி அகலத்தில் உச்சி வரை பாறை பிளந்திருந்தது. நீலன் உள்ளே சென்றான். ஒரு பகுதிப் பாறையில் முதுகை அழுத்தமாக வைத்தான். கைகளை எதிர் பாறைப் பிளவில் அழுத்தமாக வைத்துக் கொண்டு கால்களைத் தூக்கிப் பாறையில் வைத்துக் கொண்டு முதுகைச் சிறிது தூக்கி மேலே வைத்து அழுத்திக் கொண்டு கை கால்களை மேலே தூக்கி வைத்தான். இப்படியாக



"இப்பல்லாம் உங்க தலைவரின் பேச்சில் சூடே இருப்பதில்லையே?"

"நிறைய உரை 'ஆற்றி, ஆற்றி'ச் சூடு குறைந்து விட்டது!"

— க. இராமலிங்கம்.

மெல்ல மெல்ல மேலே ஏறினான்.

அதைக் கண்ட அவர்கள் வாய் பிளந்து நின்றனர். ஒரு பிளவு வழியாக இப்படியும் ஏற முடியும் என்று அவர்களுக்குத் தெரியவில்லை.

நீலன் உச்சியில் ஏறி, மோதிரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, "மோதிரம் இங்கன இருக்கு சாமியோவ்!" என்று கத்தினான்.

"எடுத்துக்கிட்டு இறங்குப்பா," என்று எதிர்க் கூச்சல் போட்டார் ஏஜெண்ட்.

நீலன் முதுகாலும் கை கால்களாலும் அழுத்திக் கொண்டு கீழே இறங்கி மோதிரத்தை ஏஜெண்ட் கையில் கொடுத்தான்.

"உன்னைத் தவிர யாராலும் இந்தப் பாறையில ஏறவும் முடியாது. மோதிரமும் எங்களுக்குக் கெடச்சிருக்காது. நீலா, இப்படியே வா, தோட்ட ஜாகைக்குப் போவோம். சாப்பிட்டுட்டு அப்புறம் வந்திரு," என்று அழைத்தார் ஏஜெண்ட்.

"சரி சாமி, டிபன் எல்லாம் கொரங்குக தூக்கிட்டுப் போயிருச்சின்னு சொன்னீகளே, இப்ப சாப்பிட என்ன செய்வீங்க? இன்னும் நாலு மைலு மலை ஏறிப் போறதுக்குள்ள பசி உசிரை எடுத்துருமே!"

"என்ன செய்ய? இனி ஜாகைக்குப் போய்த்தான் சாப்பிடணும்."

"சரி சாமி, கொஞ்ச தூரம் என்னோட வாரீகளா? பழம் கிழம் சாப்பிட்டு அப்புறம் போகலாம்."

"சரி நீலன், அப்படியே செய்யலாம். பாவம், இவங்க சாப்பிடாமெ மலை ஏறுறது கஷ்டம்."

அவர்கள் சிறிது தூரம் சென்றனர். நீலன் ஒரு மரத்தில் ஏறி ஏதோ பழங்களைப் பறித்தான். அங்கே ஒரு பாறை உள்ள இடத்திற்கு அழைத்துச் சென்றான். சின்னச் சின்னப் பாறைக் குழிகளில் வெள்ளையாக ஏதோ படிந்திருந்தது.

"சாமி அந்தப் பழங்களைச் சாப்பிட்டுட்டு இதை எடுத்துச் சாப்பிடுங்க சாமி," என்ற நீலன் அவற்றை எடுத்தான். கட்டியாகக் கையில் வந்தது. அப்படியே சாப்பிட்டான்.

"இது என்ன நீலா?"

"நீங்க மொதல்ல சாப்பிடுங்க சாமி. இது ருசியா இருக்கும். நல்ல சத்து."



அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் இடத்தில் உள்ளதை எடுத்துச் சாப்பிட்டனர்.

ஒரு மரத்தின் உச்சியில் குரங்குகள் காச் மூச்சென்று சத்தம் செய்தது. அவன் குரங்குகளைக் கல்லை எடுத்து வீசி விரட்டி விட்டு விடுவிடுவென்று மரமேறினான். இறங்கும் போது சிறுவர்களின் உடைகள் அவன் கையில் இருந்தன.

அவர்களுக்கு வியப்புத் தாங்கவில்லை. நீலனைச் சங்கர் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

"சரி, வெள்ளையாச் சாப்பிட்டமே, அது என்னன்னு சொல்லு."

"சாமி, காட்டு எருமைக இருக்கே, மடியில அதிகமாப் பால் சுரந்தா இந்தப் பாறையில வந்து உரசும். அப்ப பால் தானாச் சுரந்து இந்த கிடங்குகள்ள கட்டிக்கிடும். இங்கன குளிர்ச்சியினால பாலு கெடாது. அதோட கட்டியாகி ருசியாவும் இருக்கும். சரி, எனக்கு நேரமாவுது. ஆத்தா தேடும். நான் போறேன் சாமி," என்று சொல்லி விட்டு விடுவிடுவென்று நடந்து ஆற்றுப்பக்கம் சென்றான் நீலன்.

எதுவும் தோன்றாமல் அவர்கள் விக்கித்து நின்றனர்.

விந்தையான வண்ணத்துப் பூச்சிகள்


ஆழி




வண்ணத்துப் பூச்சிகளில் சுமார் 10,000 இனங்கள் உள்ளன. ஒவ்வோர் இன வண்ணத்துப் பூச்சியும் அதன் இனத்திற்கென்று உள்ள ஒரு செடியின் இலையில்தான் முட்டையிடும்! 10,000 இன வண்ணத்துப் பூச்சிகள் முட்டையிட வேண்டுமானால் 10,000 வகையான செடிகள் தேவைப் படும்! தவறிப்போய் கூட, ஒரு வண்ணத்துப் பூச்சி, மற்ற இன வண்ணத்துப் பூச்சிக்குரிய செடியில் முட்டையிட்டு விடாது!

அமெரிக்காவில் 'நாய்த் தலை வண்ணத்துப் பூச்சி' என்று ஓர் இனம் இருக்கிறது. அதன் முன்பக்கத்து இறக்கைகளில் நாயின் தலை போன்ற உருவங்கள் இருக்கின்றன!





கோண்டாரிகா நாட்டில் 'நம்பர் வண்ணத்துப் பூச்சிகள்' இருக்கின்றன. அவற்றின் அடிப்பக்கச் சிறகில் 89 என்னும் இலக்கம் தெளிவாக அமைந்திருக்கிறது!



'மோனார்க்' என்னும் வண்ணத்துப் பூச்சிகள், ஆண்டு தோறும் கிழக்குக் கனடாவிலிருந்து தெற்கு மெக்ஸிகோவுக்குச் சுமார் 3,200 கி.மீ. தூரம் பறக்கின்றன! சராசரியாக மணிக்கு 18 கி.மீ. தூரம் பறக்கின்றன. ஒரு நாளைக்கு 128 கி.மீ. தூரம் வரை பறப்பதுண்டு! காற்று பலமாக வீசா விட்டால் எங்கேயும் உட்காராமல் தொடர்ந்தாற்போல் 1040 கி.மீ. தூரத்தைக் கூட கடக்கின்றன!

சீனாவில் 'உலகப்பட வண்ணத்துப் பூச்சிகள்' இருக்கின்றன. அதன் இறக்கைகளில் பூமியின் எல்லா பரப்புகளும் சமுத்திரங்களும் காணப்படுகின்றன!





ஸ்காட்லாந்தில் இரண்டு இறக்கைகளிலும் சிலுவை உருவம் உள்ள வண்ணத்துப் பூச்சிகள் இருக்கின்றன. அங்கே உள்ளவர்கள் அவற்றைப் பிடித்து வைத்துக் கொண்டு, புனித உயிராக வழிபடுகிறார்கள்!




உலகில் மிகவும் பெரிய வண்ணத்துப்பூச்சி 'பறவைச்சிறகு வண்ணத்துப் பூச்சி' தான். இரண்டு சிறகுகளையும் விரித்தால் 31 செ.மீ. இருக்கும். அது பறக்கும்போது ஒரு பறவை பறப்பது போல இருக்கும்!




மிகவும் சிறியது 'பிக்மி' வண்ணத்துப் பூச்சி. அது 1 செ.மீ. தான் இருக்கும்!




200 துளி நீரில் ஒரு துளி சர்க்கரையைக் கலந்தால், மனிதனால் அதை உணர்ந்து கொள்ள முடியும். ஆனால், வண்ணத்துப் பூச்சிகள், 3 லட்சம் துளி நீரில் ஒரு துளி சர்க்கரையைக் கலந்தால் கூட அதை உணர்ந்து கொள்ளுகின்றன.



வண்ணத்துப் பூச்சிகள், அழகாகப் பூக்கள் மாதிரி இருக்கின்றன அல்லவா? ஆனால், ஆசியநாடுகளில் 'இலைச் சருகு வண்ணத்துப் பூச்சி' என்று ஓர் இனம் இருக்கிறது. இந்த வண்ணத்துப்பூச்சி, காய்ந்த இலைச் சருகு மாதிரியே இருக்கும். இது செடியில் உட்கார்ந்திருந்தால் தெரியவே தெரியாது!



வண்ணத்துப்பூச்சியாவதற்கு முன் உள்ள கம்பளிப்பூச்சி, தன் மிகக் குறைந்த வாழ்நாளில் தன் உடல் அளவைப்போல் 50,00 மடங்கு இலைகளை அரித்துத் தின்று விடும்!



ஒரு பெண் வண்ணத்துப்பூச்சி அதன் முட்டைகளில் ஏதும் அழியாமல் இருந்தால் மூன்று ஆண்டுகளில் சுமார் 100 கோடி வண்ணத்துப் பூச்சிகளைத் தோற்றுவிக்கும்!

பிருந்தாவனம்

செஸ் விளையாடத் தெரியுமா?

அன்று சங்கருடைய நண்பன் பரத்துக்குப் பிறந்த நாள். ஆகையால் பரத் அன்று மாலை சங்கரைத் தன் வீட்டிற்கு வரும்படி அழைத்திருந்தான்.

சங்கர் பத்தாம் வகுப்புப் படிக்கிறான். அவன் படிப்பிலும் சரி, விளையாட்டிலும் சரி, எல்லாவற்றிலும் முதலாவதாக வருவான்.

சங்கருடைய தந்தை சதாசிவம் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர். அவரும் அன்று பரத் வீட்டிற்குக் கிளம்பிக் கொண்டிருந்தார். சங்கருடைய தந்தை சதாசிவமும் பரத்துடைய தந்தை ராமண்ணாவும் நெருங்கிய நண்பர்கள். ராமண்ணா இரு நகைக் கடைகள் வைத்திருந்தார்.

சங்கரும் அவன் தகப்பனாரான காவல் அதிகாரி சதாசிவமும் பரத்தின் வீட்டிற்குச் சென்றார்கள். அங்கு ராமண்ணா — பரத்தின் தந்தை, அழகான சட்டையும் பேண்ட்டுடனும் அவர்களை வரவேற்றார்.

பரத்தினுடைய தாய் சசிகலா கழுத்தில் 32 வைர மணிகளால் செய்யப்பட்டிருந்த மாலையை அணிந்திருந்தாள். சங்கர் அந்த வைர மணியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறான். ராமண்ணா அடிக்கடி அந்த மணி மாலையைப் பற்றிக் கூறியிருக்கிறார்.

திடீரென்று யாரோ ஃப்யூஸைப் பிடுங்கி விட, கரண்ட் கட் ஆனது. இரண்டு நிமிடங்களில் சரிசெய்து விட்டார்கள். அந்த இடை நேரத்தில் பரத்தின் தாய் சசிகலா போட்டிருந்த மணிமாலை காணாமல் போயிருந்தது!

கண்டுபிடித்து ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு சதாசிவத்தினுடையதாயிற்று.

நான்கு நாட்கள் கழித்து, சதாசிவத்திற்கு ஒரு மொட்டைக் கடிதம் வந்திருந்தது. அதிலிருந்த விஷயம் இதுதான்:

ராமண்ணா வசிக்கும் தெருவை அடுத்த் தெருவில் சங்கர் நாராயணன் என்னும் பணக்காரர் வசித்து வருகிறார். அவருக்கு அன்று நாற்பதாவது பிறந்த நாள். ராமண்ணாவின் வீட்டில் திருடப்பட்ட வைர மணி மாலையிலிருந்த 32 மணிகளும் சங்கர் நாராயணனுக்கு இரகசியமாகப் பார்சலில் வருகிறது. மேலும் அந்தப் பார்சல் நீலநிற டப்பாவில் சிவப்பு ரிப்பன் கட்டி வருவதாகவும் அதில் எழுதியிருந்தது.

சதாசிவம் இதைப் படித்தவுடன் சங்கர் நாராயணன் வீட்டுக்குப் புறப்பட்டார். சங்கர், 'நானும் வருகிறேன். எனக்கும் இதில் சம்பந்தம் இருக்கிறது,' என்று அடம் பிடித்துத் தகப்பனாருடன் வந்தான்.

சங்கர் நாராயணன் வீட்டில் விழா நடந்து கொண்டிருந்தது. திடுதிப்பென்று நுழைந்த காவல் அதிகாரி சதாசிவம், ''யாரும் அசையாதீர்கள்,'' என்று கூறிவிட்டு, ஒரு கான்ஸ்டபிளை வெளியே யாரும் ஓடாமலிருக்க நிற்க வைத்தார். வேறொரு கான்ஸ்டபிளைக் கொல்லைப் புறம் நிற்க வைத்தார். சங்கர் நாராயணனுக்கு வந்திருக்கும் பார்சலை ஆராய்ந்தார். கடிதத்தில் எழுதியிருந்தது போல மூன்று பார்சல்கள் மட்டும் நீல நிற டப்பாவில் சிவப்பு ரிப்பன் கட்டியிருந்தது.

ஒன்றில் இருநூறு ரூபாய் விலையுடைய சிடிஸன் கடிகாரமும், இரண்டாவதில் ஒரு செஸ் போர்டும் அதன் காயின்களும் மூன்றாவதில் ஒரு பென் செட்டும் இருந்தன.

வைர மணிகள் எங்கே? கை பிசைந்து சதாசிவம் யோசித்தார்.

அப்பொழுது சங்கர் சதாசிவத்திடம், ''அப்பா, அவருக்குச் செஸ் விளையாடத் தெரியுமா?'' என்று கேட்டான்.



கதையரங்கம்

சதாசிவம் சங்கர நாராயணனிடம் இதைக் கேட்ட போது. ''தெரியாது,'' என்றார் அவர்.

சங்கர் ஆழ்ந்த யோசனையுடன், ''காணாமல் போன மணிகள் 32. செஸ்ஸில் இருக்கும் காய்களும் 32'' என்று கூறிக் கொண்டே அதிலிருக்கும் வெள்ளை ராஜாவைப் பார்த்தான்.

வெள்ளை ராஜாவின் கழுத்தில் பிளேடால் கீறியது போல இருந்தது.


சங்கர் சதாசிவத்திடம் அதைச் சுட்டிக் காட்ட, வெள்ளை ராஜாவின் கழுத்தைத் திருகினார் அவர். பேனாவின் நெக்கைத் திருகுவது போல இருந்தது.

அதைத் திருகியவுடன் உள்ளிருந்து ஒரு வைர மணி வந்தது. அது போல எல்லாக் காய்களிலும் ஒவ்வொரு மணி ஒளித்து வைக்கப்பட்டிருந்தது.

சங்கர் நாராயணன் கைதானார். அரசாங்கம் சங்கரின் திறமையைப் பாராட்டிப் பரிசளித்தது.

— ஏ. ஜெயராமன், மன்னார்குடி.

சொன்னது சரிதானா?



இலங்காபுரியை சுகுமாரன் என்ற ஒரு மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்குச் சோதிடத்தில் நம்பிக்கை இல்லை. அவன் ஆஸ்தான சோதிடர் பதவிக்கு வருபவர்களிடம், ''இந்தப் பதவியை நான் உங்களுக்குக் கொடுக்க நினைத்தேனா இல்லையா?'' என்று கேட்பான்.

சோதிடர் பதவிக்காக வந்தவர்களும், ''தாங்கள் இப் பதவியை எனக்குக் கொடுக்க நினைத்தீர்கள்,'' என்று கூறுவர்.

மன்னன், ''நீங்கள் கூறியது தவறு. நான் உங்களுக்கு இப் பதவியைத் தர நினைக்கவில்லை. அதனால் நீங்கள் போகலாம்,'' என்று கூறி அனுப்பி விடுவான்.

அப்போது இலங்காபுரியில் வாழ்ந்து வந்த சரவண சாஸ்திரி என்பவர் ஆஸ்தான சோதிடர் பதவியை எப்படியும் அடைய வேண்டும் என்று திட்டமிட்டு, அரசவை அடைந்தார்.

மன்னனும் வழக்கம் போல் சரவண சாஸ்திரியிடம், ''நான் உமக்கு இந்தப் பதவியைத் தர நினைத்தேனா இல்லையா?'' என்று கேட்டார்.

அதற்கு சரவண சாஸ்திரி, ''நீங்கள் எனக்கு இப் பதவியைக் கொடுக்க நினைக்கவில்லை,'' என்று கூறினார்.

அதைக் கேட்ட மன்னன், ''நீங்கள் கூறியது தவறு. நான் தங்களுக்கு இப் பதவியைத் தர நினைத்தேன். ஆனால் உங்கள் சோதிடம் சரியாக இல்லாததால் உங்களுக்கு இப் பதவி இல்லை. நீங்கள் போகலாம்,'' என்றார்.

உடனே சரவண சாஸ்திரி, ''நான் சொன்னது சரியாகி விட்டதே! நீங்கள் எனக்கு இப் பதவியைக் கொடுக்கவில்லையே! என் சோதிடம் பொய்யென்று நிரூபிக்க நீங்கள் எனக்கு இப் பதவியைக் கொடுத்தால்தான் சரியாகும்,'' என்றார்.

மன்னன் அவர் அறிவைப் பாராட்டி அவரையே ஆஸ்தான சோதிடராக நியமித்தார்.

— எம். எம். விஜயகுமார், சேலம் — 16.

அரிசி வந்தாச்சு!

பொழுது புலர்ந்தது. பிச்சை முத்து ஊருக்குள் பிச்சை எடுக்கப் புறப்பட்டான். வீடு வீடாகச் சென்று வருமானம் தேடிக் கொண்டிருந்தான்.



மதியம் மாடி வீட்டின் முன் சென்று நின்றான். ''அம்மா தாயே! பிச்சை போடு அம்மணி!''

மனோரஞ்சிதத்தம்மாவின் காதில் விழுந்தது. என்றாலும் பதில் கொடுக்கவில்லை.

''தாயே, கொஞ்சம் அரிசி போடு தாய்! நல்லாருப்பே!''

''சத்தம் போடாதே... இருய்யா... ஏண்டி அலமு.. தெருவிலே பிச்சைக்காரர் பாரு. நாலு அரிசி கொண்டு போய்ப் போடு.''

''இதோ வந்துட்டேம்மா.'' அலமுதான் பதிலிறுத்தாள்.

''அம்மனீ!'' பிச்சை முத்து மீண்டும் சத்தமிட்டான்.

''வருது இருய்யா! அலமு எவ்வளவு நேர... ஏய் இருடி, அதுல எடுக்காதே. அது கடையிலே வாங்கின இட்லி அரிசி. மண் பானையிலே ரேஷன் அரிசி பிச்சைக்குன்னு வாங்கி வச்சிருக்கு. அதிலே எடுத்துட்டுப் போய்ப் போடு'' மனோரஞ்சிதத்தம்மா அலமுவுக்குக் கூறினாள்.

''அம்மா தாயே!''

''எடுத்து வர்றதுக்குள்ளே என்னய்யா அவசரம்? இந்தா பிடி'' அலமு ஆர்ப்பரித்தாள்.

''நல்லா இருப்பே தாயீ!''

''சரி சரி! போய் வா!''

அலமு உள்ளே சென்றாள். மனோரஞ்சிதத்தம்மா அலமுவைக் கடிந்து கொண்டாள்.

''ஏண்டீ! நீதானே கடையிலே போய் இட்லி அரிசி விசாரித்தே. இல்லேன்னுட்டான்னும் வந்து சொன்னே. இருக்கிற கொஞ்ச அரிசியைத் தீத்துப்புட்டு அப்புறம் என்ன பண்றது... உம்?''

''நெனவு இல்லேம்மா.''

''உம்... சரி சரி, போய் வேலையைப் பாரு.''

மாலை நேரம். மளிகைக் கடை ஓரம், போய் நின்றான் பிச்சை முத்து. கூட்டம் கலையும் வரை காத்திருந்தான். அவன் எதிர்பார்த்தவாறு நேரம் கிடைத்தது.

''ஐயா கடைக்காரரே, இந்த வாரம் கெடச்சதைக் கொண்டாந்திருக்கேன். எத்தனை படி இருக்குன்னு அளந்துக்கிட்டுக் காசைக் குடுங்க.''

மளிகைக் கடைக்காரரிடம் பிச்சை முத்து அரிசியை ஒப்படைத்தான்.

''நல்லவேளை, அரிசி இன்னிக்கும் வரல்லேயே என்னடா பண்றதுன்னு பார்த்தேன். நீ கொண்டாந்துட்டே! டேய் பையா... இதை அளு. நாளைக்கு அந்த மாடி வீட்டு வேலைக்காரி அலமு இட்லி அரிசி வாங்க வந்தாலும் வருவா. நல்லவேளையா இன்னிக்கு இந்தச் சாமியார் வந்துட்டார்.''

— ஆர். கே. மூர்த்தி,
பூண்டியாங்குப்பம்.

கோடரிக் கூழ்.

வயது முதிர்ந்த படையாள் ஒருவன் விடுமுறைக்காகச் சொந்த ஊர் போய்க் கொண்டிருந்தான். நடந்து களைத்துப் போய் விட்டான். வயிறு பசித்தது. வழியில் ஒரு கிராமத்துக்கு வந்ததும் முதலாவது குடிசையின் கதவைத் தட்டினான்.

''வழிப்போக்கன், இராப் பொழுதைக் கழிக்க இடம் தாருங்கள்.'' என்று கேட்டான்.

கதவைத் திறந்த கிழவி, ''படையாளே, வா அப்பா.'' என வரவேற்றாள்.

''அம்மணி பசியால் வருந்துகின்ற எனக்குச் சாப்பிட ஏதாவது கிடைக்குமா?'' என்று கேட்டான் படையாள்.

கிழவியிடம் யாவும் நிறையவே இருந்தன. ஆனால், அவள் ஒரு கருமி. பரம ஏழை மாதிரி பாசாங்கு செய்தாள். ''அட பாவமே, என்னிடம் எதுவும் இல்லை. விடிந்தது முதல் நானே உணவின்றிப் பட்டினியாய் இருக்கிறேனே!'' என்று புலம்பினாள்.

''ஒன்றும் இல்லையானால் ஒன்றும் இல்லைதான். என்ன செய்வது?'' என்றான் படையாள்.

பிறகு காம்பு இல்லாத கோடரி ஒன்று பெஞ்சுக்கு அடியில் இருந்ததைக் கவனித்து, ''வேறு எதுவும் இல்லையானால், அதோ அந்தக் கோடரியை வைத்துக் கூழ் செய்யலாமே?'' என்றான்.

கிழவி ஆச்சரியப்பட்டாள். ''கோடரிக் கூழா? அதிசயமாக இருக்கிறதே!'' என்றாள்.

''ஒரேயொரு சட்டி மட்டும் கொண்டு வந்து கொடு. நான் செய்து காட்டுகிறேன்,''

என்றான் படையாள்.

கிழவி ஒரு சட்டியைக் கொண்டு வந்து கொடுத்தாள். படையாள் கோடரியைக் கழுவிச் சட்டியில் வைத்தான். பிறகு சட்டியில் நீரை நிரப்பி அடுப்பில் வைத்துக் காய்ச்சினான்.

கிழவி வைத்த கண் வாங்காமல் படையாளைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

படையாள் ஒரு கரண்டியை எடுத்துக் கொதிக்கும் நீரை நன்றாகக் கலக்கிச் சிறிதளவு வாயில் விட்டு ருசி பார்த்தான்.

"இன்னும் சிறிது நேரத்தில் தயாராகி விடும். ஆனால் உப்புதான் இல்லை."

"உப்பு என்னிடம் இருக்கிறதே! இந்தா கொஞ்சம் எடுத்துக் கொள்" என்றாள் கிழவி.

படையாள் சிறிதளவு உப்புப் போட்டு, மீண்டும் கொதி நீரை வாயில் விட்டு ருசி பார்த்தான். பிறகு, "ஒரு கையளவு கேப்பை போட்டோமானால் எவ்வளவு நன்றாக இருக்கும் தெரியுமா?" என்றான்.

ஒரு சிறு பையிலிருந்த கேப்பையைக் கிழவி கொண்டு வந்தாள். "இந்தா, வேண்டிய அளவு எடுத்துப் போடு." என்றாள்.

படையாள் மும்முரமாய் வேலை செய்தான். அவ்வப்பொழுது கூழைக் கிண்டி சிறிதளவு வாயிலிட்டு ருசி பார்த்தான். கிழவி கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றாள். கணப்பொழுது கூட அவளால் பார்வையை வேறு எங்கும் திருப்ப முடியவில்லை.

கூழ் தயாரானதும் படையாள் அதில் ஒரு கரண்டி அளவு சாப்பிட்டுப் பார்த்து விட்டு, "நன்றாய் அமைந்து விட்டது. கொஞ்சம்



வெண்ணெயும் சேர்த்தோமானால், இந்தக் கூழைக் காட்டிலும் சுவையானது எதுவும் இருக்காது," என்றான்.

கிழவி வெண்ணெயும் கொண்டு வந்து விட்டாள். கூழுடன் வெண்ணெயும் சேர்ந்தாயிற்று.

"நல்லது. ஒரு கரண்டி எடுத்து வா. இருவரும் உட்கார்ந்து சாப்பிடுவோம்!" என்றான் படையாள்.

இருவருமாய்க் கூழைச் சாப்பிட ஆரம்பித்தனர். "பிரமாதமாய் இருக்கிறதே! கோடரிக் கூழ் இவ்வளவு நன்றாய் இருக்குமென நான் நினைக்கவே இல்லை." என்று கிழவி வியந்தாள்.

படையாள் உள்ளுக்குள் சிரித்தவாறு சாப்பிட்டான்.

தமிழில்: சிவகாசி அ. மாதவன்.



சிறியோர் பற்றிப் பெரியோர்

காந்தியடிகள்:

"நாம் மட்டும் தலைவணங்கிக் கேட்டோமானால், குழந்தைகளிடம் இருந்து ஏராளமாகக் கற்றுக் கொள்ளலாம்!"

தாகூர்:

"ஒவ்வொரு தலைமுறையிலும், மனித இனத்தைக் காத்து வரும் கடவுள் குழந்தைகளே!"

நெப்போலியன்:

"குழந்தையின் எதிர்காலம் முழுவதும் தாயின் செயலில்தான் அடங்கி உள்ளது!"

ஜவஹர்லால் நேரு:

"குழந்தையும் மலரும் செழிப்புள்ளவை. அவற்றை மென்மையாகக் கையாள வேண்டும்!"

மு. வரதராசனார்:

"நல்ல சமுதாயமானது குழந்தைகளின் நன்மையையே முதலில் போற்றி மகிழும்!"

முகமது நபி:

"இறைவனின் பூங்காவில் பூத்துக் குலுங்கும் நறுமலர்களே குழந்தைகள்!"

சார்லஸ் டிக்கன்ஸ்:

"தாய் தந்தையரின் நற்குணங்களும், தீய குணங்களும் குழந்தைகளிடம் வருகின்றன!"

திரு. வி. க.:

"தாய் தந்தையிடமிருந்து பிறக்கும் ஆரமுதமே குழந்தை!"

— 'பொன்மொழிகளிலே குழந்தை' என்னும் நூலில் இருந்து.

தொகுப்பு: எஸ். குருமூர்த்தி, காட்டாங் குளத்தூர்.



பாரத ரத்னா ராஜாஜி

சக்கர வர்த்தித் திருமகனார் — உயர்
சத்திய கீர்த்தி; திருவுடையார்!
அக்கறைச் சேவைப் புகழுடையார்! — நல்
அன்பின் சின்னமாம் இராஜாஜி!

மெத்தவும் படித்த மேதையவர் — இந்த
மேதினிக்கே நல்ல பாதையவர்!
உத்தம குணங்கள் அத்தனையும், — பெற்று
உயர்ந்தவர்; நல்லவர் இராஜாஜி!

கூர்த்த மதியினர்; ஞானியவர்! — குறை
கூறிட முடியாக் குன்றனையர்!
பார்த்த மாத்திரம் யாரையுமே, — எடை
பார்த்து மதிக்கும் இராஜாஜி!

கல்விக் கடலாம் அவரென்றும் — அங்கு
கற்பனைக் கலங்கள் ஏராளம்!
பல்வித மாயின உண்மை கனை — இப்
பாரினுக் களித்தவர் இராஜாஜி!

அற்புத சக்தி அவரறிவு; — அதில்
ஆயிர மாயிரம் அறிவுரைகள்!
வற்றிடா ஊற்றாய் ஊறிடவே, — பல
வளமைகள் சேர்த்தவர் இராஜாஜி!

''வெட்டிப் பொழுது போக்காதீர்'' — என
விரும்பிக் கேட்டு, அழகாகக்
குட்டிக் கதைகள் பலசொல்லி — பாலர்
குறைகள் தீர்த்த இராஜாஜி!

தூய சிந்தை கொண்டவராம் — வாழ்வில்
துணிவே என்றும் கண்டவராம்!
மாய மான மனிதரவர் — பிறரை
மடக்க வல்லவர் இராஜாஜி!

வகித்த பதவிகள் எல்லாமே, — இவர்
வசமே ஆயின நல்லாமல்,
வகித்த பதவியின் வசப்பட்டு, — என்றும்
வாடா தவராம் இராஜாஜி!

சீரிய வாழ்க்கை வாழ்ந்தவராம் — பக்திச்
செம்மை நெறியில் உயர்ந்தவராம்!
தேரிய பண்பின் இருப்பிடமாம்! — மக்கள்
நெஞ்சில் நிறைந்தவர் இராஜாஜி!

நாட்டு மக்கள் நலமெண்ணி, — அவர்
நல்ல தொண்டு செய்தவராம்!
பாட்டுப் பாடிச் சிறப்பிப்போம்! — நம்
'பாரத ரத்னா' இராஜாஜி!

நாகலட்சுமி



திருந்தியது எப்படி?



ஜி. மீனாட்சி

"கோகி! கோகி,'' சமையலறையிலிருந்து வந்தனா அழைத்தாள். ம்ஹூம்! கோகிலாவைக் காணோம். ''சே! எத்தனை தடவை சொன்னாலும் புரிய மாட்டேங்குதே இவளுக்கு,'' என்று சலித்தபடி வெளியே வந்தாள், வந்தனா.

கோகிலா பக்கத்து வீட்டு விக்னேஷுடன் விளையாடிக் கொண்டிருந்தாள்.

''ஏ, கோகி! இங்கே வா.'' சற்று அதட்டலாக வந்தனா அழைத்தாள்.

விளையாட்டை, விடப் பிரியமில்லாமல் ஓடி வந்தாள் கோகிலா.

''ஏம்மா கோகி, உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கேன். பள்ளியில் இருந்து வந்தவுடன், யூனிஃபார்மை மாற்றி, ஷூ, சாக்ஸ் எல்லாம் கழட்டிட்டு, கை, கால் கழுவி டிபன், காப்பி சாப்பிட்டுட்டு விளையாடப் போன்னு. ம்ம்... சொன்னால் கேட்கிறதேயில்லை,'' சற்று அதட்டலாகப் பேசியபடி சமையலறைக்குள் நுழைந்தாள்.

கோகிலா பதிலேதும் கூறாமல், எல்லாவற்றையும் கழற்றிவிட்டு, முகம், கை, கால் கழுவி வந்தாள். அதற்குள் அம்மா சுடச்சுடப் பூரியும், குருமாவும் கொண்டு வரவே, விளையாட்டில் மறந்து போயிருந்த பசி எட்டிப் பார்க்க, உண்ண ஆரம்பித்து, முடித்து, காப்பி குடித்து எழுந்தாள்.

''சரி, போய் அரை மணி நேரம் விளையாடிட்டு வா,'' வந்தனா கூறவும் கோகிலா துள்ளிக் கொண்டு ஓடினாள்.

கோகிலாவிடம் ஒரு கெட்ட பழக்கம். அம்மா எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் சில விஷயங்களை மாற்றிக் கொள்வதேயில்லை. வந்தனாவும் நயந்தும் கடிந்தும் பலமுறை கூறிப் பார்த்து விட்டாள். திருந்தினால்தானே? சரி, தன் கணவன் ரமேஷிடம் கூறித் திருத்தலாமென்றாலோ, அவர் காலை எட்டு மணிக்கு வீட்டை விட்டுக் கிளம்பினால் இரவு ஏழரை மணியாகிவிடும், வீடு திரும்ப. நாள் முழுவதும் ஆபீஸ் வேலை. காலை மாலை பஸ் நெரிசல். ஆகவே வரும்போதே களைப்பாக வருவார். இவளைப் பற்றிச் சொன்னால் 'அவ சின்னக் குழந்தைதானே? நீதான் அட்ஜஸ்ட் பண்ணிக்கணும்,' என்று ஒரே வரியில் கூறி விடுவார். மேற்கொண்டு எதுவும் கூற முடியாது. ஆக, எல்லாப் பொறுப்புக்களும் வந்தனாவுக்குத்தான்.

அரைமணி நேரம் கழித்து வந்தனாவே கோகிலாவை அழைத்து வந்தாள். ''கோகி, காலையிலிருந்து ஒவ்வொரு பீரியடாச் சொல்லு. என்னென்ன பாடம் நடத்தினாங்க? என்ன ஹோம் ஒர்க்? சொல்லு,'' என்று அவளருகில் அமர்ந்து கொண்டாள்.

கோகிலாவும் ஒவ்வொரு பீரியடாகச் சொல்லிக் கொண்டே வந்தவள், ''கடைசி பீரியட் சயன்ஸ்மா. எங்க டீச்சர் நோட்டிலே இந்தப் படத்தை வரைஞ்சுக்கிட்டு



வரச் சொன்னாங்க,'' என்றாள்.

இந்த வருடத்திலிருந்துதான் அவளுக்கு சயன்ஸ் நோட்டில் படம் வரைய வேண்டும். இது ஓர் அதிகப்படி வேலைதான் அவளுக்கு.

''சரி, முதல்ல மத்த ஹோம் ஒர்க் கெல்லாம் செய். கடைசியில் நோட்டில் படம் வரையலாம்,'' வந்தனா கூறியபடி, தெரியாத பாடங்களைச் சொல்லிக் கொடுத்தாள். பின்பு சயன்ஸ் நோட்டைப் பிரித்து, ''இங்கே படம் வரை,'' என்றாள்.

''என்ன, நானா படம் வரையறது? எனக்குப் படம் வரைய வராது. நீயே வரைஞ்சு தா,'' என்றாள் கோகிலா.

''என்னது, நானா? நீயே வரைம்மா. அப்போதான் உனக்குப் பழக்கம் வரும். மேலும் உன் பாடத்தை நீயே செய்வதுதான் நல்லது,'' வந்தனா இதமாக எடுத்துக் கூறினாள்.

''போம்மா நான் வரைய மாட்டேன். அசிங்கமா இருக்கும். நீயே வரைஞ்சு தாம்மா...'' கோகிலா பிடிவாதமாகக் கூறினாள்.

''முதலில் அசிங்கமாத்தான் வரும். போகப் போகப் பழக்கமாயிடும். முதலில் ரஃப் நோட்டில் வரைந்து பார். பின்பு சயன்ஸ் நோட்டில் வரைவியாம்,'' அம்மா இதமாக எடுத்துக் கூறினாள். ''வேணும்னா நான் சொல்லித் தரேன்,'' பரிவோடு கூறினாள்.

''மாட்டேன். நீதான் வரைஞ்சு தரணும்,'' கோகிலா அடம்பிடித்தபடி, அழத் துவங்கினாள்.

அந்தச் சமயம் பார்த்து அவள் அப்பா ரமேஷ் உள்ளே நுழைந்தார். ''என்ன, ஒரே கலாட்டா இங்கே? ஏன் அழுறா இவ? நீ அடிச்சியா?'' கோபத்தோடு கேட்டார்.

''இல்லே, இல்லே. சயன்ஸ் நோட்டில் படம் வரையணுமாம்; என்னை வரைஞ்சு தரச் சொல்றா....''

முடிக்குமுன் சீறினார். ''அவதான் குழந்தை. நீதான் வரைந்து கொடேன்.''

சமயம் பார்த்துக் கோகிலா, விசும்பியபடி அப்பாவிடம் முறையிட்டாள். ''பாருப்பா அம்மாவை! வரைஞ்சு தான்னா தரமாட்டேங்கறா.''

''சேச்சே! காத்தாலதான் அவசர அவசரமாகக் கிளம்பி, பஸ்ஸிலே இடிபட்டு மிதிபட்டு ஆபீஸுக்குப் போனா, அங்கே வேலைத்தொல்லை. மேலதிகாரி பிடுங்கல். சாயந்திரம் மறுபடி பஸ்ஸில நசுங்கி, சக்கையா வீட்டுக்கு வந்தா இங்கே ஏக ரகளை. மனுஷனுக்கு நிம்மதியே இல்லை. சேச்சே! குழந்தையை அனுசரிச்சுப் போகத் தெரியலையே உனக்கு.'' காரணத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமலே பொரிந்து தள்ளினார் ரமேஷ்.

கணவனின் கோபத்தைக் கண்டு, தான் மேலே பேசினால் விபரீதம் விளையும் என்று வந்தனா, பேசாமல் படத்தைத் தானே வரைந்து கொடுத்தாள்.

அன்றிரவு உணவு, கனத்த மௌனத்தோடு முடிந்தது.

ஆனால் ஒவ்வொரு முறையும், படத்தை அம்மாவே வரைந்து


கொடுக்க வேண்டும் என்று அடம் பிடித்து வந்தாள் கோகிலா. எவ்வளவு எடுத்துச் சொல்லியும் கேட்காததுடன், வேண்டுமென்றே ஸ்கூலிலிருந்து திரும்பியவுடன் மற்றப் பாடங்களைப் பற்றிக் கூறி விட்டு, படம் போடும் விஷயத்தை மட்டும் மறந்து விட்டது போல் பாசாங்கு செய்து, அப்பா வரும் நேரம் பார்த்துக் கூறி, அம்மாவே வரைந்து தருமாறு செய்து வந்தாள். இதை வந்தனாவும் கண்டுபிடித்து விட்டாள். ஆனாலும் திருத்த வழி ஒன்றும் புலப்படவில்லை.

பள்ளியிலோ கோகிலா, பிற மாணவிகளின் நோட்டைப் பார்த்து, "ஐயய்யே! படமா இது! அசிங்கமா இருக்கு. நான் பார், எவ்ளோ அழகா வரைஞ்சிருக்கேன்," என்று பெருமையடித்துக் கொண்டாள்.

பக்கத்து சீட் அனு, "எப்படிடி இவ்ளோ அழகா வரைஞ்சிருக்கே? என் படம் அசிங்கமா இருக்கு," என்று வருத்தப்பட்டுக் கொண்டாள். அவள் மட்டுமில்லை. பல மாணவிகளும் அவ்வாறே வருத்தப்பட்டுக் கொண்டனர். பாவம், இந்த வருடம் தானே படம் வரைய ஆரம்பித்திருக்கிறார்கள்!

காலாண்டுத் தேர்வு வந்தது. கோகிலா ஓரளவு சுமாராகப் படிக்கிறவளாதலால் நன்றாகவே எழுதினாள். ஆனால் விஞ்ஞானப் பாடம் தான் தொல்லை தந்தது. பல கேள்விகளுக்குப் படம் வரைந்து பாகங்களைக் குறிக்கச் சொல்லியிருந்தார்கள். அம்மா எத்தனையோ முறை வரைந்து பார்க்கச் சொல்லியும், அவள்தான் படமே வரைவதில்லையே! படம் வரையத் தெரியாமல் விட்டு விட்டாள். வீட்டில் அம்மா கேட்ட போதும் ஏதோ கூறி மழுப்பி விட்டாள்.





லீவு முடிந்து பள்ளி திறந்து விடைத்தாள்கள் கொடுக்கப்பட்டன. ஒவ்வொரு பீரியடிலும் அந்தந்த டீச்சர்கள் வந்து விடைத்தாள்களைக் கொடுத்தனர். விஞ்ஞான டீச்சர் ஒவ்வொரு பெயராகக் கூப்பிட்டுக் கொடுத்ததன்றி, குறைவான மார்க் வாங்கியவர்களுக்கு அடியும் கொடுத்தார்.

கோகிலா மிக மோசமாக மார்க்குகள் வாங்கியிருந்தாள்.

''படம் வரையத் தெரியாது டீச்சர்,'' தயங்கியபடி பதில் கூறினாள் கோகிலா.

''எங்கே, உன் நோட்டைக் கொண்டு வா,'' என்று டீச்சர் கேட்க, கோகிலா பயத்துடன் நோட்டை எடுத்து வந்து நீட்டினாள்.

''நோட்டில் இவ்வளவு அழகாப் போட்டிருக்கே! போடத் தெரியாதுன்னு பொய்யா சொல்றே?'' டீச்சர் மிகுந்த கோபத்தோடு கேட்க, கோகிலா பதில் சொல்ல முடியாமல் தவித்தாள். ''ம், கையை நீட்டு,'' டீச்சர் கோபத்தோடு கூற, கோகிலா கையை நீட்ட, இரு கைகளிலும் 'பட், பட்' டென்று அதிகமாகவே அடிகள் விழுந்தன.

''எல்லாப் பசங்களும் சுமாராகவாவது படம் வரைஞ்சிருக்காங்க. நீதான் ஒண்ணு கூட வரையலை. ஒவ்வொரு படத்தையும், அஞ்சஞ்சு தரம் வரைஞ்சு வந்து காட்டு போ,'' என்று ஆசிரியர் கூறவும், கோகிலா அழுதபடி வந்தமர்ந்தாள்.

பக்கத்து சீட் அனுவின் பேப்பரை வாங்கிப் பார்த்தாள். சுமாராக என்றாலும் வரைந்திருந்தாள் அனு. பலரும் அப்படித்தான். சிறிது மார்க்கும் கிடைத்திருந்தது. தனக்குத்தான் ஒன்றுமேயில்லை என்று எண்ணிய போது துக்கம் அதிகரித்தது. அம்மா ஏன் அவ்வளவு வற்புறுத்திச் சொன்னாள் என்று, அப்போதுதான் புரிந்தது கோகிலாவுக்கு.

அன்று மாலை வீட்டுக்குப் போனவுடன், கோகிலா அம்மாவிடம் ஓடி வந்தாள். ''அம்மா, என்னை மன்னிச்சுடு. நானும் இனிமே படம் வரைவேன். அசிங்கமா இருந்தாலும் நானே வரைவேன். வரைஞ்சு வரைஞ்சு பார்த்து அடுத்த தடவை நிறைய மார்க் வாங்குவேன்,'' என்றாள் கால்களைக் கட்டிக் கொண்டு.

வந்தனாவுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. பின்பு புரிந்த போது கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. மனத்திலிருந்து பெரிய பாரம் இறங்கியது போல் உணர்ந்தாள்.

* வரலட்சுமி



ஜேசுதாசுடன் பாடியிருக்கேன்!

மாங்காடு கோயில் திருவிழாவில் கூடியிருந்த மக்களின் கைத்தட்டல்கள் அவ்வப்போது விண்ணைப் பிளந்து கொண்டிருந்தது. இடையிடையே அனைவரையும் மயக்கும் அந்த மதுரமான குரல் என்னையும் மேடையை நோக்கி ஈர்த்தது.

கூட்டத்தின் கடைசியில் நின்றிருந்த என்னால் அந்த இனிய குரலைத்தான் கேட்க முடிந்ததே தவிர, குரலுக்குரியவரைப் பார்க்க முடியவில்லை. அப்படி அனைவரின் பாராட்டுதல்களையும் பெறும் அந்தக் குரலுக்குரிய பெண் யார் என்று பார்த்தேவிட வேண்டும் என்று கூட்டத்தினூடே புகுந்து மேடையை அடைந்தேன்.

என்னால் என் கண்களை நம்ப முடியவில்லை. காரணம், மேடையில் சூழ்ந்திருக்கும் இசைக் கருவிகள் ஒலிக்கப் பாடிக் கொண்டிருந்தது ஒன்பதே வயது நிரம்பிய சிறுமி! கண்களைத் துடைத்து மீண்டும்-மீண்டும் பார்க்கிறேன்; சந்தேகமே இல்லை, அந்த இனிய குரலுக்குச் சொந்தமானவள் சிறுமியேதான்! பெயர் வரலட்சுமி என்றார்கள்.

மந்தவெளி ஸ்ரீ வேணுகோபால் வித்யாலயாவில் ஐந்தாம் வகுப்பு படிக்கும் வரலட்சுமியைக் கச்சேரி முடிந்ததும் சந்தித்துச் சுவையானதும், புதிதானதுமான சில விவரங்களை அறிந்தேன்.

பிரபல திரைப்பட இசை அமைப்பாளர்களான, எம். எஸ். விஸ்வநாதன், சங்கர் கணேஷ், சந்திரபோஸ் ஆகியோரின் இசைக் குழுவில் தவறாமல் இடம் பெற்று மேடையேறிப் பாடிக் கொண்டிருக்கும் சிறுமி வரலட்சுமி, தனது மூன்றாவது வயதிலேயே 'டன்லப்' இந்தியா லிமிடெட்டில் நடைபெற்ற விழாவில் முதன் முதலில் மேடையேறிப் பாடி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியிருக்கிறாள்.

அனைத்துப் பாடல்களையும் ஒரு பிழையும் இல்லாமல் பாட்டுப் புத்தகத்தைக் கூடப் பார்க்காமல் அநாயாசமாகப் பாடுவது இவள் சிறப்பு! புதுப்பாடல்களை ஒரே ஒரு முறை கேட்டால் போதும், உடனே ராக பேதம் இல்லாமல் இனிய குரலில் அந்தப் பாட்டைப் பாடி விடுவாள்!

தன் பாட்டி திருமதி சாரதா கணேசனின் தூண்டுதலால் கர்நாடக சங்கீதம் பயிலும் ஆர்வத்தில் இசைத் திறமையை வளர்த்துக் கொண்டிருக்கும் வரலட்சுமி, தனியே, பக்க வாத்தியங்களுடன் முழு கர்நாடக இசைக் கச்சேரியும் சமீபத்தில் செய்திருக்கிறாள்.

வரலட்சுமியின் குரல் பிரபல பின்னணிப் பாடகி சுசீலாவை ஒத்திருப்பதால், மேடைக் கச்சேரிகளில் சுசீலா பாடிய பழைய பாடல்களையே அதிகம் பாடுவதாகவும், சுசீலாதான் தான் விரும்பி ரசிக்கும் பாடகி என்றும் கள்ளம் கபடு இல்லாமல் பொரிந்து தள்ளுகிறாள்.

தமிழில் மட்டுமே பாடும் இச்சிறுமி எல்லாக் கச்சேரிகளிலும் குறைந்தது ஒரு பக்திப் பாடலையாவது பாடத் தவறுவதேயில்லை. தன் மாமா திரு. பிச்சுமணியும், உடன் பிறந்த சகோதரியும்தான் வரலட்சுமியின் இசைத் திறமைக்கு ஊக்கமளித்துத் துணை நிற்கிறார்கள் என்று பெருமையுடன் கூறுகிறாள்.


"இவ்வளவு அருமையாக மேடையில் உன்னைப் பாட வைக்கும் பிரபல இசை அமைப்பாளர்கள், திரைப்படங்களில் பாடச் சொல்லவில்லையா?" என்று கேட்பதற்கு,

"ஏன் சொல்லவில்லை? நான் இதுவரைக்கும் நாலு படத்துல பாடியிருக்கேன். இதோ நான் பாடிய படத்தின் கேசட்டுகள்," என்று, ராஜ நடை, ரத்தத்தின் ரத்தமே, சந்தனக் காற்று, காவேரிப் பெருக்கு என்று நான்கு படங்களின் கேசட்டுகளை என்னிடம் காண்பித்தாள். சந்தனக் காற்று என்ற படத்தில் ஜேசுதாஸ் அவர்களுடன் பாடியதைப் பெருமையுடன் குறிப்பிடுகிறாள்.

வண்ணப்படம், பேட்டி:

ராஜா பொன்சிங்

பொங்கலோ



தம்பி! நமது ஓர் ஆண்டைத்
தேவரின் ஒருநாள் என்பார்கள்.

அந்த ஒருநாள் தனில்பாதி
அவர்க ளுக்குப் பகல் ஆகும்.

அதுவே நமக்குத் 'தை' முதலாய்
ஆறு மாத காலம், அதை

'உத்தர அயனம்' என்பார்கள்
உத்தமக் காலம் அதுவேதான்!

'உத்தர பாகம்' எனச் சொன்னால்
உருண்டை உலகின் வடபாதி.

அங்கே சூரியன் சஞ்சரித்தால்
அதுவே தேவர் பகலாகும்.

தேவர் பகலின் விடியல்என
தையின் முதல் நாள் அமைகிறது.

புனித மான அந்நாளே
பொங்கல் என்ற திருநாளாம்!



மார்கழி முடிந்து தைபிறக்கும்
மங்கள நேரம் தனில்நாமும்

'சங்க ராந்தி' எனச்சொல்லி
சூரிய பூஜை செய்திடுவோம்!

உலகத் தார்க்கு ஆணிஎனும்
உழவர் பட்ட பாடெல்லாம்

அறுவடை என்ற பலனாக
அவனை அடையும் சமயத்தில்

இந்தப் பொங்கல் வருவதனால்
இதுவே 'உழவர் திருநாளாம்!'



பொங்க லுக்கு முதல்நாளில்
'போகி' என்ற பெருநாளாம்.

பீடை என்ற பழம்பொருளைப்
போராய்க் குவித்து எரிக்கின்றோம்.

என்றும் புதுமை வேண்டும்என
இந்திரன் அருளைக் கேட்கின்றோம்!

பொங்க லுக்கு மறுநாளில்
பசுவை நாமும் பூஜிப்போம்.

அதுவே மாட்டுப் பொங்கல்என
அமைந்த கதையும் இதுவே தான்!

கோபம் கொண்டு இந்திரனும்
கோகு லத்தில் பெருமழையை

ஏவிய போது கோகுலத்தை
இனிதாய்க் காக்கக் கண்ணனுமே

கோவர்த் தனக் கிரிஎன்ற
குன்றைத் தூக்கிக் குடையாகப்

பிடித்தே பசு மாடுகளைப்
பாது காத்த செயல்எண்ணி

இன்றும் பசு மாடுகளை
இனிதாய்ப் பூஜை செய்கின்றோம்!

பொங்கல்



சல்லிக் கட்டு பற்றி ஒரு
செய்தி உண்டு கேட்டிடுவீர்!

நக்ன சித்து பெற்றெடுத்த
நக்ன சித்தி என்பவளை

மணக்க ஏழு காளைகளின்
முரட்டுத் தனத்தைக் கண்ணனுமே

தீரத் தோடு அடக்கியதை
தமிழ கத்துக் காளையர்கள்

சல்லிக் கட்டுப் பந்தயமாய்ச்
சீராய் மாட்டுப் பொங்கலிலே

இன்றும் நடத்தித் தமிழ்நாட்டின்
எழிலைக் கூட்டி வருகின்றார்!

சூரிய னுக்குப் பல் இல்லை
சொல்வேன் அந்தக் கதை இங்கே!

தட்சன் யாகம் செய்திடவே
தேவரை 'வருக' என்றழைத்தான்.

சீற்றத் தோடு சிவன் வந்து
"சுகமாய் வந்த தேவர்களே!

என்னை மதியா இடத்துக்கே
ஏன்வந் தீர்கள்?" எனக்கேட்டு,

அடித்து விரட்டத் தொடங்கினனே;
அந்தச் சமயம் சூரியனின்

கன்னத் தில்ஓர் அறைவிழவே
சுழன்றே கற்கள் விழுந்தனவே!

பற்கள் இல்லாக் காரணத்தால்
பஞ்சு போன்ற மென்மையிலே

பொங்கல் இட்டுச் சூரியனைப்
போற்று கின்றோம்! புரிகிறதா?



'கனு'வைப் பற்றிக் கதைஒன்று
கூறுவர். அதையும் கேட்டிடுவீர்!

தேவர் பகலின் தொடக்கம்எனும்
'தை'க்கு முந்தைய மார்கழிதான்

தேவரின் விடியற் காலம் அதில்
தினமும் கண்ணன் அருள்வேண்டி

கோபியர் 'காத்யா யனி' விரதம்
காத்தே மஞ்சள் திருநாளாய்

'கனு'வில் நிறைவு செய்ததுபோல்
'கலி'யில் ஆண்டாள் மார்கழியில்

பாவை நோன்பு காத்திருந்து
பாசுரம் பாடி இறைஅருளைப்

பெற்றது போலவே கன்னியர் 'தை'
பிறந்தால் வழியும் பிறக்கும்என்றே

மார்கழி நோன்பு இருக்கின்றார்!
மஞ்சள் கனுவை முடிக்கின்றார்!

'பொங்கலோ பொங்கல்' எனக்கூறிப்
பாட்டை நானும் முடிக்கின்றேன்!



ஜி. ஜெயராணி



* அ. நவ்சாத், மொரப்பூர்.

கே: தேயிலை யாரால் கண்டுபிடிக்கப் பட்டது? எப்படிக் கண்டுபிடிச்சாங்க?

ப: தம்பி, அனாதி காலமாய் இருந்து வருகிற ஒரு பானத்தை யார் கண்டுபிடித்தார்கள், சொல் என்றால் எங்கே போய் முட்டிக் கொள்வது? தூரக் கிழக்கு நாடுகளில் இந்தத் தேயிலை சம்பந்தமாய் ஒரு கர்ண பரம்பரைக் கதை ஒன்று வழங்கி வருகிறது. அதை வேண்டுமானால் சொல்லி வைக்கிறேன். இந்தியாவிலிருந்த முனிவர் ஒருவர் பல வருடங்களாய் இரவு பகலாய் விழித்தபடியே தவமிருந்து வந்தாராம். கடைசியில் ஒருநாள் தூக்கம் அவரைத் தழுவி விட்டது. விழித்ததும், தான் கண் மூடியதற்காக மிகவும் வருத்தப்பட்டார். அப்புறம், மூடிய இமைகள் மீது ஆத்திரப்பட்டார். அதனால் அந்த இமைகளை வெட்டி எறிந்து விட்டார். இமை இருந்தால்தானே கண் மூட முடியும், அப்புறம் தூங்க முடியும்?



இருந்தாலும் அவருக்குத் தூக்கம் அழுத்துவது போலிருந்தது. உடனே அவர் என்ன செய்தார்? அடுத்தாற் போலிருந்த புதரிலிருந்து ஏதோ ஒரு மூலிகையைப் பறித்து வாயில் போட்டுக் குதப்பத் தொடங்கினார். அவ்வளவுதான். தூக்கம் இருந்த இடம் தெரியாமல் பறந்து போயிற்று. தொடர்ந்து தவம் செய்தார். இப்படித் தூக்கம் வரும்போதெல்லாம் அந்த மூலிகையின் உதவியோடு அதை விரட்டிச் சுறுசுறுப்படைந்தார். இது விஷயம் அவரது சிஷ்யர்களுக்குத் தெரிந்து, அவர்கள் மூலம் ஊருக்குள்ளும் பரவியது. அப்புறம் ஒவ்வொருத்தரும் அந்த மூலிகையைத் தேடி எடுத்துக் குதப்பி, சுறுசுறுப்பானார்களாம்! அந்த மூலிகைதான் தேயிலை என்கிறார்கள்.

ஆனால் ஒன்று தேயிலையில். பானம் தயாரித்து நுகர ஆரம்பித்தவர்கள் 500 ஆம் ஆண்டில் சீனர்கள்தான். இவர்களிடமிருந்து 300 ஆண்டுகளுக்குப் பிறகு தேனீர் பற்றித் தெரிந்து கொண்டார்கள் ஜப்பானியர் என்றாலும், இந்தப் பானம் பருகுவதையே திருவிழாவாய்க் கொண்டாடி மரியாதை செலுத்துபவர்கள் அவர்கள்தான். 1700 ஆம் ஆண்டு வாக்கில்தான் தேனீர் பற்றியே தெரியும் இங்கிலீஷ்காரனுக்கு. ஆனால் இன்றைக்கு உலகத்திலேயே அதிகப்படியாய்த் தேனீர் பருகுகிறவன் அவன்தான். சராசரியாய் ஒரு இங்கிலீஷ்காரன் வருடத்தில் குடிக்கும் தேனீர் கிட்டத்தட்ட 20,000 கோப்பைகள்.

* வே. பழனியப்பன், சென்னை — 17.

கே: ஸ்ரீகாந்த் எப்பொழுது கிரிக்கெட் விளையாட ஆரம்பித்தார்? அவர் எப்போது சதம் அடித்தார்?

ப: உன்னுடைய முதல் கேள்வி இருக்

கிறதே. அது மீன் எப்போது நீந்த ஆரம்பித்தது என்று கேட்கிற மாதிரியானது. அதுக்காக கை கால் முளைச்சதும் ஸ்ரீகாந்த் கிரிக்கெட் ஆட ஆரம்பிச்சிட்டாரான்னு கேட்டு மடக்காதே. கொஞ்சம் பெரிசாகி, பள்ளிக்கூடம் போக ஆரம்பிச்சதும் தெருப் பசங்களைக் கூட்டி வைத்துக் கொண்டு ஆட ஆரம்பித்தார் என்று வைத்துக் கொள்ளேன். அந்த லோகல் மாட்சுகளிலெல்லாம் ஹீரோ ஆனது ஒரு கணக்கா? 1985 —




86 இல் ஆஸ்திரேலியாவில் டெஸ்ட் மாட்ச் ஆடப் போனாரே அப்போதுதான் இதோ ஒரு கிரிக்கெட் வீரர் என்ற விளையாட்டு உலகம் அவரை அடையாளம் கண்டுகொண்டது. அந்த சிட்னி அரங்கத்துக் கிரிக்கெட் ரசிகர்களைப் பிரமிக்க வைத்ததும் அப்போதுதான். 97 பந்தில் 116 ரன்கள் எடுத்து முதல் செஞ்சுரி சாதனை புரிந்ததும் அப்போதுதான்!

* **வேத. வாதகணேஷ், திருநெல்லிக்காவல்.**

கே: மனம் என்று எதைக் கூறுகிறோம்? மூளையையா, இதயத்தையா?


ப: இரண்டையும் அல்ல. மூளை, இதயம் இரண்டுமே உடலின் அங்கங்கள்தான். போஸ்ட்மார்ட்டம் செய்து இரண்டையும் தனித்தனியே எடுத்துக் கண் முன்னே நிறுத்திப் பார்த்து விடலாம். மனத்தை அப்படிப் பார்க்க முடியுமோ? இது அறிவு சம்பந்தப்பட்ட சமாசாரம். 'மனத்தினால் சிந்திக்க' என்று சொல்வார்கள். 'அவன் நினைச்சா கொடுக்கலாம். ஆனா மனம் வராது', என்பார்கள். 'சார், நீங்க மனம் வைத்தால்



எனக்கு வேலை போட்டுத் தரலாம்,' என்று கேட்டிருப்பீர்கள். மனமுண்டானால் மார்க்கமுண்டு என்பார்கள். இங்கு வருகிற ஒவ்வொரு மனதுக்கும் ஒவ்வோர் அர்த்தம் இருக்கிறது. இல்லையா? மொத்தத்தில் இந்த மனம் மனிதர்களுக்கு மட்டுமே உண்டு. இது ரொம்ப உசந்தது. 'சென்றவிடத்தால் செலவிடாது தீ தொரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு' என்கிறார் வள்ளுவர். இந்த அறிவுக்கு முந்தையது மனம் என்று தோன்றுகிறது. அதில் விழும் சிந்தனைகள் அலை பாயும். கன்னாபின்னாவென்று சிதறி ஓடும். அந்தச் சிந்தனையை ஒழுங்குபடுத்தி ஒரு முனையில் செலுத்துவது அறிவு.

* **தா. ஷேக்உசேன், செஞ்சி.**

கே: குரங்கிலிருந்து மனிதன் பிறந்தான் என்கிறார்களே! அப்படியானால், தற்போது இருக்கும் குரங்குகள் எல்லாம் ஏன் மனிதனாக மாறவில்லை?



ப: விதண்டாவாதம், விதண்டாவாதம் என்று ஒரு சொல் உண்டு. அதற்கு உதாரணம் சொல்லுவதற்கும் பொருத்தமான கேள்வி தம்பி, நீ கேட்டிருப்பது. பட்டாம்பூச்சி எதிலிருந்து வந்தது என்றால், புழுவிலிருந்து என்றுதான் சொல்கிறார்கள். அதற்காக ஊர் உலகத்திலே எத்தனையோ புழுக்கள் நெளிந்து கொண்டிருக்கின்றனவே, அவையெல்லாம் ஏன் பட்டாம்பூச்சிகளாக மாறவில்லை என்று கேட்டால் எப்படி? நமது முன்னோர் 'அவா'தான். சந்தேகமிருந்தால் கரு வளர்ச்சிப் படங்களை மருத்துவ நூலிலே கவனி. வால் கூடப் பார்ப்பாய். இல்லாமலா, 'வாலை ஒட்ட நறுக்கிடுவேன்', என்கிற வழக்கு வந்தது?

சின்ன அண்ணன்



(சின்னக்) கண்ணன் பாட்டு



பல்லவி

என்ன டிபன் செய்தனை — என் தாயே,
என்ன டிபன் செய்தனை?

அனு பல்லவி

மன்னு புகழ் நந்தகோபன்
மைந்தன் கண்ணன் எனக்கு (என்ன)

சரணம்

பாலை ரெண்டு படி காய்ச்சி
பால் கோவா செய்து விடு
ஆலிலை மேல் படுத்திருப்பேன்
அங்கே கொடுத்தனுப்பு (என்ன)

நாவல் பழம் தின்னத் தின்ன
நன்றாகத் தானிருக்கும்
ஆவலுடன் காத்திருப்பேன்,
அதையும் கொடுத்தனுப்பு! (என்ன)

சீடை முறுக்கு சுண்டல்
தின்னநன் றாயிருக்கும்
ஏடா மூடா என்னாதே
எனக்கதைத் தந்தனுப்பு (என்ன)

ஆடை தயிர் ரெண்டு படி
அதையும் கொடுத்த னுப்பு
விடு விடாய்ப் போக மாட்டேன்
விஷமங்கள் செய்ய மாட்டேன் (என்ன)

— கே. ஆர். ராமகிருஷ்ணன்,
காஞ்சிபுரம்.

விந்தை உலகம்

இறைவன் படைத்த பூமி — இதில்
எத்தனை விந்தைகள் சாமி,
உரைக்க நாவுகள் இல்லை — அண்ட
உயர்வுக்கு ஏது எல்லை?

மலரில் எத்தனை வண்ணம் — வளரும்
மனத்தில் எத்தனை எண்ணம்!
நிலத்தில் எத்தனை பயிர்கள் — கடல்
நீரில் எத்தனை உயிர்கள்!


மிருகத்தில் எத்தனை உருவங்கள் — நீந்தும்
மீனில் எத்தனை பருமன்கள்
உருவத்தில் எத்தனை தோற்றங்கள் — பூமி
உள்ளே எத்தனை மாற்றங்கள்

பழங்களில் எத்தனை சுவைகள் — பறக்கும்
பறவையில் எத்தனை வகைகள்
அழகில் எத்தனை சிறப்பு — மலை
அருவியில் எத்தனை சுரப்பு

விண்ணில் எத்தனை கோள்கள் — தினம்
விடிவது எத்தனை நாள் நா(ள்)கள்
மண்ணில் எத்தனை செடிகள் — பூக்கள்
மலர்ந்திட எத்தனை கொடிகள்

படைத்த இறைவனை வணங்கு — அன்பு
பாசம் கொள்ள இணங்கு
கடைக்கண் பட்டால் போதும் — இறைவன்
கருணை வேதம் ஓதும்

— கவிஞர். எஸ். ஆர். சின்னமணி.



மாசு தீர்ப்பீர் ஏசுவே!

அன்பு வழியைப் போதிக்க,
அந்நாள் நகராம் பெத்லகேமில்,
என்பு உடலில் உயிர் கொண்டு,
எம்மை உயர்த்த நீர் பிறந்தீர்!

பூத மனிதர் உமைவாட்டி
ஊறு பலவும் விளைத்ததையென்
காதால் அறிந்த நான்கூட
கட்டுப் படாது கொதித்து விட்டேன்!

ஆனால், இறைவா! நீரன்றோ
அந்தக் கடுமைத் துன்பத்தைத்
தானாய்ப் பொறுத்துக் கொண்டீரே!
தன்மை அதுதான் உமதன்றோ!

ஏசு! உமது உதயநாளில்
ஏத்தித் துதிப்போம் உம்புகழை!
மாசு உனது என் மனதில்,
மாண்பாய் அதனைக் களைந்திடுவீர்!

— கோவி. மருடேசுவரன், திருப்பூர்.



சொல்லு தம்பி சொல்லு



சொல்லு தம்பி சொல்லு
நெல்லுக்குள்ளே அரிசி போல — தமிழ்ச்
சொல்லுக்குள்ளே சுவையுண்டு என
சொல்லு தம்பி சொல்லு.

அள்ளு தம்பி அள்ளு
அறிவு முத்துக்களை நீயும்
அள்ளு தம்பி அள்ளு. (சொல்லு)

தள்ளு தம்பி தள்ளு
தாழ்ந்தவன் உயர்ந்தவன் பேதம்
தள்ளு தம்பி தள்ளு (சொல்லு)

கிள்ளு தம்பி கிள்ளு
கீழோர் நட்பை முளையிலேயே
கிள்ளு தம்பி கிள்ளு. (சொல்லு)

நில்லு தம்பி நில்லு
நீதி நெறியில் நீங்காது
நில்லு தம்பி நில்லு (சொல்லு)

— மா. கமலவேலன், திண்டுக்கல்.



நீங்களே செய்யும் எலெக்ட்ரானிக் கிட்!

ஒரே 'சிப்' மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட பரிசோதனைகள்!

"சிப்-சாப்" நீங்களே செய்யும் எஜுகேஷனல் கிட் நூற்றுக்கும் மேற்பட்ட பகட்டான பரிசோதனைகள் கொண்டது. வித்தையை விளையாட்டாய் கற்பிக்கவென்றே திட்டமிடப்பட்டது!

உங்கள் குழந்தை நாளைய உலகில் வெற்றியடைய வழிசெய்யுங்கள்!

எலெக்ட்ரானிக் யுகத்தின் சவால்களை சமாளிக்கத் தகுதியான சாதனம் "சிப்-சாப்"!

அம்சங்கள்: பாட்டரியால் இயங்கக் கூடியது - பாதுகாப்பானது • எளிதில் எடுத்துச் செல்லக் கூடியது • ஸால்டரிங் இல்லை – கனெக்ஷனுக்கு "பேட்டெண்டுடன்" கூடிய விசை • கையாள எளிது.

பரிசோதனைகள்: • மியூஸிகல் ஆர்கன்* ஷூட்டிங் விளையாட்டு • ஃபயர் அலாரம்* ஒயர்லெஸ் பீப்பர் * ஸிக்னல் டிரான்ஸ்மிட்டர்* லைட் ஆபரேடட் அலாரம் இன்னும் பலப் பல.

ரூ. 300/- மட்டும் - வரிகள், அனுப்பும் செலவு தனி.

"எலக்ட்ரானிக்ஸ் எல்லோருக்கும்"

எஜுடெக்

187, முதல் மாடி, வீரபிள்ளை தெரு,
பெங்களூர் — 560 001, இந்தியா,
போன்: 578801.

எனக்குத் தேவை "சிப்-சாப்", கிட் ஒன்றுக்கு ரூ. 350/- வரியும், அனுப்பும் செலவும் சேர்த்து. தயவு செய்து ....கிட்/கிட்கள் அனுப்பவும். இத்துடன் 'கிராஸ்' செய்யப்பட்ட டி.டி./போஸ்டல் ஆர்டர் (ஒரு கிட். ரூ. 50/- என்ற கணக்கில்) முன்பணமாக அனுப்புகிறேன். மீதித்தொகையை வி.பி.பி. வந்து சேர்ந்தவுடன் அனுப்புவதாக உறுதியளிக்கிறேன்.


பெயர் ....

விலாசம் ....

பள்ளி ☐ கல்லூரி ☐

Climb ads/Chip-Chap/890]

டாக்டர் பக்கம்



விஷம் உண்டவருக்கு முதல் உதவி

டாக்டர்.கு. கணேசன்

நம் வீட்டில் அன்றாட உபயோகத்தில் இருக்கும் சில பொருட்களைத் 'தெரிந்தோ தெரியாமலோ நாம் உட்கொண்டு விட்டால், அவை நம் உடல் நலத்தைப் பாதித்து உயிருக்கும் ஆபத்துத் தரக்கூடிய விஷப் பொருட்களாக மாறிவிடுகின்றன என்ற விவரம் உங்களுக்குத் தெரியுமா?

உதாரணத்திற்கு, சிலவற்றை இங்கே சொல்கிறேன்: வீட்டில் விளக்கு எரிய மண்ணெண்ணெய் பயன்படுகிறதல்லவா? அதே மண்ணெண்ணெயை எவரேனும் உட்கொண்டு விட்டால் போதும், அது அவரின் வயிற்றையும் சில சமயங்களில் நுரையீரலையும் பாதித்தது உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும்.

இம்மாதிரியேவிவசாயிகள்வீட்டில் சகஜமாகக் காணப்படும் பூச்சிக்கொல்லி மருந்துகள், எலிக்கொல்லி மருந்துகள், மூட்டைப்பூச்சி மருந்துகள் போன்றவையும், துத்தம், பாச்சா உருண்டை, பினாயில், டர்பன்டைன் போன்றவையும், பள்ளிகளில் சோதனைச் சாலைகளில் பயன்படும் அமிலங்களும் நம் உடலுக்குத் தீங்கு செய்யும் விஷப் பொருட்களே!

விஷப் பொருட்களை உட்கொள்பவர்களில் இரு வகையினர் உள்ளனர். 'விஷம்' எனத் தெரிந்தே உண்பவர்; விஷம் எனத் தெரியாமல் உண்பவர்.

பொதுவாக, குழந்தைகளும் சிறுவர் சிறுமிகளும் விஷம் எனத் தெரியாமல் சில விஷப்பொருட்களை உட்கொண்டு விடுவார்கள். உதாரணமாய், பால் என நினைத்துப் பினாயிலைச் சாப்பிட்ட குழந்தைகள் இருக்கிறார்கள். மிட்டாய் என்று தவறாக நினைத்து, பாச்சா உருண்டைகளைத் தின்றுவிட்டு வந்த சிறுவர்களைப் பார்த்திருக்கிறேன். தண்ணீர் என்று எண்ணி மண்ணெண்ணெயைக் குடித்த சம்பவங்களும் நடந்துள்ளன.


ஆக, தெரிந்தோ தெரியாமலோ ஒரு விஷப்பொருள் நம் உடலுக்குள் சென்று விட்டால் அது ஆபத்தில் தானே முடியும்? எனவே அந்த ஆபத்தைத் தவிர்த்தாக வேண்டும். எப்படி?

இதோ இக்கட்டுரை அதற்கு வழி சொல்கிறது.

ஒருவர் விஷம் சாப்பிட்டிருக்கிறார் என்று தெரிந்த உடனேயே அவருக்குக் கீழ்க்காணும் முதல் உதவி முறைகளைக் கையாள வேண்டியது அவசியம்.

விஷம் உண்டவரைக் காற்றோட்டம் நிறைந்த இடத்தில் படுக்க வைக்க வேண்டும். அவர் அணிந்துள்ள ஆடைகளை இயன்றவரை அகற்றிவிட வேண்டும். அவர் சாப்பிட்ட விஷப்பொருள் எது என்பதையும் தீர்மானமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட அந்நபர் சுயநினைவில் இருக்கிறாரா அல்லது மயக்கத்தில் இருக்கிறாரா என்பதைக் கவனிக்க வேண்டும்.

விஷம் உண்டவர் மயக்கத்தில் இருந்தால் அவரை உடனுக்குடன் மருத்துவரிடம் அழைத்துச் செல்வதற்கோ, அல்லது மருத்துவரை வர



வழைக்கவோ ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

விஷம் உண்டவர் சுயநினைவில் இருக்கிறார் என்றால் அவர் சாப்பிட்ட விஷத்தை வயிற்றிலிருந்து வெளியேற்ற முயற்சிக்க வேண்டும். அதற்கு அந்நபரை வாந்தி எடுக்கச் செய்வதே சிறந்த வழி!

எப்படி வாந்தி வரச் செய்வது? யோசிக்கிறீர்களா? அதற்கும் நானே வழி சொல்கிறேன். கேளுங்கள்.

இரண்டு லிட்டர் தண்ணீரில் நான்கு தேக்கரண்டி சமையல் உப்பைக் கலந்து விஷம் உண்டவரை உட்கொள்ளச் செய்ய வேண்டும். இந்த உப்புக் கலந்த தண்ணீர் அவருக்கு வாந்தி வரச் செய்யும். வாந்தி வரும் போது அவர் சாப்பிட்ட விஷமும் வெளியே வரும்.

உப்புக்குப் பதிலாகத் தண்ணீரில் புளியைக் கரைத்துக் கொடுக்கலாம். உப்பும் இல்லை; புளியும் இல்லை என்றால் யோசிக்கவே வேண்டாம். வெறும் தண்ணீரையே நிறையச் சாப்பிடக் கொடுங்கள். பின்பு விஷம் உண்டவரின் நாக்கின் அடிப்பகுதியை விரல்களால் அழுத்துங்கள். வாந்தி வரும்; வாந்தியில் விஷமும் வரும்.

சரி டாக்டர், எவ்வளவு நேரம்தான் இப்படிச் செய்து கொண்டிருப்பது என்றுதானே கேட்கிறீர்கள்?

வாந்தியில் விஷப்பொருளின் நிறம் குறைகிற வரைக்கும் அல்லது விஷப் பொருளின் வாசனை குறைகிற வரைக்கும் மேற்சொன்ன முதலுதவி முறையினைச் செய்ய வேண்டும். இந்த முதலுதவியினைச் செய்து கொண்டிருக்கும் போதே விஷம் உண்டவரை மருத்துவரிடம் அழைத்துச் செல்வதற்கும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

இங்கே முக்கியமான ஒரு கருத்தை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. விஷம் உண்டவரின் விஷத்தை வெளியேற்றுவது தான் சிறந்த முதலுதவி என்பது பொதுவான கருத்து. ஆனால் இது எல்லாவித விஷப் பொருட்களுக்கும் பொருந்தாது. ஏனென்றால் மண்ணெண்ணெய், அமிலங்கள், பெட்ரோல் போன்ற பொருட்களை உட்கொண்டிருந்தால் வாந்தி எடுக்கச் செய்யக் கூடாது. அதே சமயம் பூச்சிக்கொல்லி மருந்து, துத்தம், பாச்சா உருண்டை, தூக்க மாத்திரைகள் போன்றவற்றை உட்கொண்டிருந்தால் வாந்தி எடுக்கச் செய்ய வேண்டும்.

சில வகை விஷங்களுக்கு முட்டையின் வெள்ளைக் கருவைக் கொடுத்தால் விஷம் இரத்தத்தில் கலப்பது தடுக்கப்படும். இம்மாதிரியே சில விஷங்களை உட்கொண்டவர்களுக்கு வாழைப்பழங்களைத் தர வேண்டும். இப்படிச் சாப்பிட்ட விஷத்திற்கேற்ப முதலுதவி முறைகளும் மாறுபடும்.

பூச்சிக்கொல்லி மருந்துகள், மூட்டைப் பூச்சி மருந்துகள், எலிக்கொல்லி, கரப்பான் கொல்லி மருந்துகள் சாப்பிட்டவருக்குத் தண்ணீரில் உப்பையோ, புளியையோ கலந்து வாந்தி எடுக்கச் செய்ய வேண்டும்.

துத்தம், பாச்சா உருண்டை சாப்பிட்டவர்களுக்குத் தண்ணீரில் உப்பையோ புளியையோ கலந்து வாந்தி எடுக்கச் செய்துவிட்டு, முட்டையின் வெள்ளைக் கருவை நிறையக் கொடுக்க வேண்டும்.

தூக்க மாத்திரை, போதை மாத்திரைகளைச் சாப்பிட்டவர்களுக்குத் தண்ணீரில் உப்பைக் கலந்து வாந்தி வரச் செய்ய வேண்டும்.

பெயிண்டுகளைச்சாப்பிட்டுவிட்ட நபர்களுக்கு ஒரு லிட்டர் தண்ணீரில் நான்கு தேக்கரண்டி எப்சம் உப்பைக் கலந்து தர வேண்டும்.

அரளி விதை, எருக்கம்பால் சாப்பிட்ட நபர்களுக்குத் தண்ணீரில் உப்பையோ, புளியையோ கரைத்து வாந்தி எடுக்கச் செய்ய வேண்டும்.

மண்ணெண்ணெய், பெட்ரோல் போன்றவற்றை உட்கொண்டவர்

களை வாந்தி எடுக்கச் செய்யக் கூடாது! மாறாக, இவர்களுக்கு வாழைப்பழங்களை நிறையச் சாப்பிடக் கொடுக்க வேண்டும்.

இதுபோலவே அமிலங்களை உட்கொண்ட நபர்களையும் வாந்தி எடுக்கச் செய்யக் கூடாது. இவர்களுக்கு முட்டையின் வெள்ளைக் கருவைக் கொடுக்க வேண்டும். பத்து முட்டைகளை உடைத்து வெள்ளைக் கருவை மட்டும் தனியாக எடுத்துக் கலக்கிக் கொடுக்க வேண்டும். அல்லது வயிற்றுப் புண்ணுக்குத் தரப்படுகிற 'ஆன்ட்டாசிட்' (Antacid) என்றழைக்கப்படுகிற 'அமிலத் தடுப்பான்' மருந்துகளை உட்கொள்ளச் செய்யலாம்.

பினாயில், டர்பன்டைன் சாப்பிட்டவர்களையும் வாந்தி எடுக்கச் செய்யக் கூடாது. வாழைப்பழங்களை நிறையக் கொடுக்கவும்.

கண்ணாடித் துண்டுகள், இரும்புத் துண்டுகள் போன்றவற்றைச் சாப்பிட்டுவிட்ட நபர்களையும் வாந்தி எடுக்கச் செய்யக் கூடாது. மேற்படி நபர்களுக்கும், நிறைய வாழைப்பழங்களைக் கொடுத்து உண்ணச் சொல்ல வேண்டும்.

சாப்பிட்ட விஷம் எதுவாக இருந்தாலும் மேற்சொன்ன முதலுதவிகளைச் செய்துவிட்டு, விஷம் உண்டவரை நேரத்தோடு மருத்துவரிடம் அழைத்துச் செல்ல வேண்டும். மருத்துவரால்தான் சாப்பிட்ட விஷத்தை முழுமையாக வெளியேற்ற முடியும்; அது மட்டுமல்லாமல் ஏற்கெனவே இரத்தத்தில் கலந்து விட்ட விஷத்தின் தன்மையை முறியடிக்க மாற்று மருந்துகளையும் கொடுக்க முடியும்.

எனவே, விஷம் உண்டவரை மருத்துவரிடம் அழைத்துச் சென்று, அவர் சாப்பிட்ட விஷத்தின் பெயர், அளவு, சாப்பிட்ட நேரம், நீங்கள் செய்த முதலுதவி முறைகள் ஆகியவற்றைத் தெளிவாக மருத்துவரிடம் சொல்ல வேண்டும். அதுவே விரைவில் அந்நபரை ஆபத்திலிருந்து காப்பாற்ற மருத்துவருக்குப் பெரும் உதவியாக இருக்கும்.

செய்வீர்களா?



தமிழக விளையாட்டுகள்

இறக்குமதி விளையாட்டுக்களிலேயே அமுங்கிப் போயிருக்கும் பட்டணத்துத் தம்பி தங்கைகளே! கொஞ்சம் கிராமத்துப் பக்கம் மண் வாசனை வீசும். இந்தத் 'தமிழக விளையாட்டுகள் பக்கம் திரும்பிப் பாருங்கள். இதிலே ஆண்களுக்குப் பதின்மூன்று விளையாட்டுக்கள் என்றால் பெண்களுக்கு முப்பத்து மூன்று! ஒரு குடம் தண்ணி ஊற்றி, பூப்பறிக்க வருகிறோம், அசோக வனத்தாட்டம், குலை குலையா முந்திரிக்காய், கச்சக்காய்ச் சில்லி — இவையெல்லாம் சில விளையாட்டுக்களின் பெயர்களாம். பெயரைக் கேட்கும் போதே ஆடிப் பார்க்க வேண்டும் போல் தோன்றவில்லையோ?

(பக். 108 — ரூ. 10.50; மணிமேகலைப் பிர்சுர ஆசிரியர் குழு.)

சிரிக்க சிந்திக்க — பரமார்த்த குரு கதைகள்

இத்தாலி நாட்டிலிருந்து வந்த பெஸ்கி என்ற கிறிஸ்துவப் பாதிரியார் தமிழில் தேர்ச்சி பெற்று வீரமாமுனிவர் என்ற் பெயர் பெற்று நிறையத் தமிழுக்குத் தொண்டாற்றியிருக்கிறார். முன்னூறு ஆண்டுகளுக்கு முன் அவர் எழுதிய பரமார்த்த குரு கதை பற்றித் தெரியாத தம்பி தங்கைகள் இருக்க முடியாது. குறைந்தபட்சம் டி.வி.யிலாவது பார்த்திருப்பார்கள். மட்டி, மடையன், மூர்க்கன், மிலேச்சன், மூடன் என்ற ஐந்து சீடர்கள்தான் முட்டாள்கள் என்றால், அவர்கள் தேடிப் பிடித்த பரமார்த்த குரு இருக்கிறாரே அவர் அவர்களைக் காட்டிலும் அடி முட்டாள். குருவும் சீடர்களுமாய்ச் சேர்ந்து கொண்டு அடிக்கிற கூத்து குபீர்ச் சிரிப்புத்தான்.

(பக். 96 — ரூ. 9.50 — மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு)

தேசிய ஒருமைப்பாட்டில் நமது பங்கு

நீங்கள் என்ன சாமானியப்பட்டவர்களா? எதிர்கால இந்தியாவை உருவாக்கப் போகிற சிற்பிகள் அல்லவா? இந்த நாட்டின் சிறப்புக்கள் யாவை? நாட்டைப் பீடித்திருக்கும் நோய்கள் என்னென்ன? அவற்றைக் குணப்படுத்துவது எப்படி? ரொம்பப் பெரிய விஷயம் என்று நீங்கள் மலைக்க வேண்டியதில்லை. எளிய தமிழில் நன்கு புரியும்படி பெரிய் எழுத்தில் தந்திருக்கிறார்கள். பாதிக்கு மேல் — நாட்டைக் கெடுக்கும் தீய சக்திகளை அடையாளம் காட்டியிருக்கிறார்கள். அப்புறம் அவற்றுக்குப் பரிகாரமும் சொல்லப்பட்டிருக்கிறது. உருப்படியான நூல்.

(பக். 114 — ரூ. 11 — வேணா தமிழ்வாணன், எம். ஏ. — மூன்று புத்தகங்களும்: மணிமேகலைப் பிரசுரம், த. பெ. எண்: 1447, 4, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், சென்னை — 600 017)

வாழ்க்கைக்கு வழிகாட்டி

இருட்டிலே வழிகாட்டும் விளக்குப் போன்றது பெரியோரின் வாழ்க்கை வரலாறுகள். அப்படியொரு பெரியார் குன்றக்குடி அடிகளார். சமயப் பணி, சமுதாயப் பணி, தமிழ்ப் பணி ஆகியவற்றைத் தொடர்ந்து ஆற்றி வருகிறார். அவரது வரலாற்றையும் தொண்டுகளையும் உரிய புகைப்படங்களுடன் வெளியிட்டிருக்கிறார்கள். இது இந்தப் பதிப்பகத்தின் 'குழந்தைகள் நூல் வரிசை.'

(பக். 112 — ரூ. 10)

நேரு மாமா! நூறு மாமா!

நூறு மாமா என்றால் — 'நேரு மாமாவின் நூற்றாண்டைப் புதுமையாகக் கொண்டாடுவோம்' என்ற அர்த்தத்தில் சொல்லியிருக்கிறார். கடித வடிவில் ஒன்பது கட்டுரைகள். குழந்தைகளிடம் நேருஜிக்கு எத்தனை ஈடுபாடு என்பதை மழலை மொழியிலேயே சொல்லியிருக்கிறார் ஆசிரியர். கடிதங்களாய் இருப்பதால் ஓர் ஒட்டுதல் ஏற்படுகிறது. நேருஜிக்கு ஓர் அழகான ரோஜா மலர்.

(பக். 100 — ரூ. 10 — இரண்டு புத்தகங்களும்: டாக்டர். வ. தேனப்பன் — தேன் வள்ளியம்மை பதிப்பகம், 6, வெ. ஊருணி வடக்கு, தேவகோட்டை — 623 302)

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன் 431543, 434157, 434190.
ஆறுமாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால் ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—





REGISTERED NO. TN MS (S) 281
Registered as a Newspaper in Srilanka